விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 10 ஞாயிற்றுக்கிழமை (26.07.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 219







# எங்கள் தலைவர் பிரபாகரன்

## கோஷமிட்டது கூட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நேற்றைய யாழ்.மாவட்ட முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய வேட்பாளர்கள் சிலர், எங்கள் தலைவர் பிரபாகரன் தான் என உணர்ச்சி பொங்க உரையாற்றியுள்ளனர். பிரபாகரனின் பெயர் உச்சரிக்கப்பட்டபோது கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களின் கரகோஷம் பண் மடங்காக ஒலித்திருந்தது.

(15ஆம் பக்கம் பார்க்க)

### மகிந்தவுக்கு ஆதரவளித்ததால் நன்மதிப்பு வீழ்ச்சியடைந்தது

## பொது பல சேனா கவலை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்த காரணத்தினால் தமது இயக்கத்தின் நன்மதிப்பு வீழ்ச்சியடைந்ததாக பொது பல சேனா இயக்கம் கவலை வெளியிட்டுள்ளது.

பொது பல சேனா இயக்கத்திற்கு பாரியளவில் மக்கள் ஆதரவும் பிரபல்யமும் காணப்பட்டதாக அதன் பொதுச் செயலாளர் கலகொட அத்தேஞான

15 ஆம் பக்கம் பார்க்க

### ராஜித உட்பட ஐவரை

## சுதந்திர கட்சியிலிருந்து நீக்க ஜனாதிபதி கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

அமைச்சர் ராஜித சேனாரட்ன உள்ளிட்ட ஐவரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவிலிருந்து ஐந்து முக்கிய உறுப்பினர்களை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இராஜித சேனாரட்ன, ஹிருணிகா பிரேமச்சந்திர,

15 ஆம் பக்கம் பார்க்க
















நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...

## வளமான வாழ்விற்கு அனைவருக்கும் வீடு......

- வட. மாகாணத்தில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு வீடு இருக்க வேண்டும் என்பது எனது கொள்கையாகும்.
- வட. மாகாணத்தில் இடம்பெயர்ந்திருக்கும் மக்களை மீளவும் குடியமர்த்தி 150,000 (ஒன்றரை இலட்சம்) வீட்டுத்திட்ட நிகழ்ச்சி திட்டத்தை துரிதப்படுத்தி ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனாவின் முதலாவது 2015 வரவு செலவு திட்டத்திற்கு முன்னுரிமையளித்து செயல்படுத்துவேன்.
- ஏற்கனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் அறிவிக்கப்பட்ட வர்த்தமானி மூலம் 1000 ஏக்கர் காணிகளை அவருடனிருந்து மீளவும் கையளிக்க துரித கதியில் நடவடிக்கை மேற்கொள்வேன்.
- பல்கலைக்கழக சமூகத்தில் வீடமைப்பு தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு அதற்கு அண்மையிலேயே வீடமைப்பு வசதிகளை மேற்கொள்வேன்.
- ஏற்கனவே மீள்குடியேற்றப்பட்ட மக்களின் அடிப்படை உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்வேன்

### வெற்றிலைச் சின்னத்திற்கும் இலக்கம் 1 இற்கும் வாக்களியுங்கள்

(C-236)

## அங்கஜன் இராமநாதன்

MBA (International) B.Eng (Hons)

(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்)

புதிய நாடு ~ புதிய தலைவர் ~ புதிய தலைமுறை ~ புதிய எதிர்பார்ப்பு



## நியாயமான கட்டணத்தில் தரம் வாய்ந்த கல்விச்சேவை

## Spoken English with Grammar

120 Hours

சரளமாக பேச பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கற்கைநெறி

## Diploma in English

200 Hours

Benifits of Dip in English

- பல்கலைக்கழக கல்வி, வெளிநாட்டில் உயர்கல்வி, ஏனைய கற்கை நெறிகளினை வினைத்திறனுடன் வெற்றிகரமாக கற்கமுடியும்.
- வேலைவாய்ப்பினை இலகுவாக பெறமுடியும்.
- **Cambridge English** இன் KET, PET, First பரீட்சைகளுக்கு தோற்ற முடியும்.
- **IELTS Life Skills** பரீட்சைக்கு தோற்ற முடியும்.
- மாணவர்களின் வசதிக்கேற்ப சிறு குழுக்களாகவும் வகுப்புகள் நடைபெறும்.

**New Batches start on :**

B1 : 29-07-2015 at 9am
B2 : 01-08-2015 at 9am
B3 : 01-08-2015 at 2pm
B4 : 02-08-2015 at 9am
B5 : 02-08-2015 at 2pm
B6 : 04-08-2015 at 2pm

**Study IELTS at CIL & Get 6 + Band**

CIL
Cambridge Institute of London
N0 : 17, 3rd Lane, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
(புதிய HNB, ராசி சில்க்ஸ் அருகாமையில்)
Tel : 021 2217774, 0777382108



## SPEED

PURIFIED DRINKING WATER

சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303. கே.கே.எஸ் வீதி.
யாழ்ப்பாணம்.
021 222 5392

(C-8284)



## Personal Class-கணினி

- 10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker, Adobe Illustrator CC, Adobe Indesign CC)

- சிறுவர்களிற்கான கற்கைநெறி
- பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்

TP:0779672038 ஆசிரியர்:KRC



## காணி விற்பனை

மருதனார் மடப்பகுதியில் 4 பரப்புக் காணி விற் பனைக்கு உள்ளது.

தொடர்பு : 0773288795



## CANE HOSPICE

5, Sabapathipillai Road, Uduvil, Chunnakam

VACANCY FOR POST OF
SENIOR NURSES, DRIVER& HEALTH CARE ASSISTANTS

CANE Hospice is planning to start home based palliative care programme and terminal Care of cancer patients and looking for the suitable person for the following posts.

**1. SENIOR NURSES**
Should be registered to practice as a Nurse. Experience in the nursing field or in the Recognized organization will be an added qualification.

**2.DRIVER CUM HEALTH CARE ASSISTANT**
In addition to the driving experience (Three wheeler & Van) should posses nursing Care experience.

**3.HEALTH CARE ASSISTANTS**
Should have suitable qualification and experience in the Health care in a recognize Organization.

**Salary:**

| | |
|---|---|
| Nurses | : 20,000.00 - 30,000.00 |
| Driver cum Health Care Assistant | : 10,000.00 - 15,000.00 |
| Health Care Assistant | : 8,000.00 - 12,000.00 |

**Salary will be based on qualification & experience.**
**Applicants are requested to forward their application by registered post to reach by 12.08.2015 addressed to**

(1229)

**Chairman CANE Hospice,**
**No.5, Sabapathipillai Road, Uduvil, Chunnakam.**



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1592


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைந்த வடக்கு - கிழக்கு

# த.தே.கூ தேர்தல் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் உள்ள பல்வேறு மக்களிடையே ஆட்சி அதிகாரங்கள் பகிரப்படுவதன் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் தலைமையில் யாழ்ப்பாணம் மருதனார்மடம் சந்தைப் பகுதியில் நேற்று சனிக்கிழமை இந்தத் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளாகிய இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.ஃப், புளொட் ஆகிய நான்கு கட்சிகளும் ஒன்றிணைந்து இந்த தேர்தல் அறிக்கை வெளியிட்டிருக்கின்றது.

தமிழ் மக்கள் தனித் தேசிய இனம், வடக்கு கிழக்கு இணைந்த தமிழ் - முஸ்லிம் தாயகப் பிரதேசம், தேசிய இனம் என்ற வகையில் உரித்தான சுயநிர்ணய உரிமை, சமஷ்டி கட்டமைப்பின் கீழ் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் வாழும் எந்தவொரு மக்கள் மீதும் முரண்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தாத அதிகாரப் பகிர்வு என்பவற்றை உள்ளடக்கியதோர் அரசியல் தீர்வை தாம் கோருவதாக தமிழ்த் தேசிய கூட்ட

15 ஆம் பக்கம் பார்க்க....

# நம்மை நாம் ஆளும் அரசியல் தீர்வே தேவை

## த.தே.கூட்டமைப்பின் தலைவர் யாழில் உரை




(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த, இணைந்த வடகிழக்கு தமிழர் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு நாட்டுக்குள் நிரந்தரமானதும் எம்மை நாமே ஆளக்கூடியதுமான ஒரு தீர்வையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அதனை அரசாங்கத்துக்கும் சர்வதேசத்துக்கும் உணர்த்துவதற்கு தமிழ் மக்கள் எமக்கு ஆணை வழங்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

15 ஆம் பக்கம் பார்க்க....

# தேசிய பிரச்சினைக்கான தீர்வில் ரணிலின் செயற்பாடுகள் முரணானது

## சதித்திட்டம் செய்வதாக ஹெகலிய சாடல்



(கொழும்பு)

ஒன்றிணைந்த நாட்டுக்குள் தேசிய பிரச்சினைக்கான தீர்வு என்ற நிலைப்பாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செயற்படவில்லை. நாட்டை பிரிக்கும் சதித்திட்டம் தொடர்பில் மக்களிடம் வெளிப்படையாக பேச மறுக்கின்றார் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில்

15 ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தல் சுவரொட்டி

# 7 பேர் கைது

யாழ்.மண்டைதீவு பகுதியில் கடந்த வெள்ளிககிழமை நள்ளிரவு இரண்டாயிரம் தேர்தல் சுவரொட்டிகளுடன் 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் கட்சி ஒன்றுக்காக நள்ளிரவு வேளை சுவரொட்டி ஒட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து சுவரொட்டிகள், பசை, பட்டா ரக வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (செ-12-60)

# பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதான சந்தேக நபர் விடுதலை

# 6 வருடங்கள் சிறைத் தடுப்பில்

(கொழும்பு)

கடந்த 2009.01.07 திகதி கொழும்பு குண்டுவெடிப்புடன் தொடர்புபட்டுள்ளார் என்ற சந்தேகத்தின் பெயரில் கல்கிசை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த 06 வருடங்களாக கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி மேற்கு நீர்வேலியைச் சேர்ந்த குணரட்னம் கஜேந்திரன்(கஜன்) கடந்த 23ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

2009ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்கு எதிராக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் வவுனியா, கொழும்பு போன்ற மேல் நீதிமன்றங்களில் தொடராக மூன்று வழக்குகள் (வ.இ 2411-2012, வ.இ 5231-2010, வ.இ 5232-2010) பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த 03.02.2015 அன்று (வ.இ 2411-2012) வவுனியா மேல் நீதிமன்றத்தினால் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது குற்றம் சாட்டப்பட்டவரிடம் இருந்து பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாக இன்றி பலவந்தமாக பெறப்பட்டது என்பதை வாதி தரப்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி குகதாஸ் சுட்டிக்காட்டியதை ஏற்றுக்கொண்ட வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பிறேமசங்கர் சந்தேக நபரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் சட்டமா அதிபர் சார்பாக அரச சட்டத்தரணியாக கனகரட்ணம் நிசாந்தன் இவ்வழ

15 ஆம் பக்கம் பார்க்க....

## தம்பிராசாவின் மகனை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவரும வட மாகாண சபையின் முன்னாள வேட்பாளருமான மு.தம்பிராசாவின மகன் திருவளவன் (வயது 19) என்ற இளைஞனை கடந்த 23ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 2 மணி முதல் காணவில்லையென அவரது தந்தையால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண நகரத்திலுள்ள தனது அலுவலகத்தில் இருந்து, அரசியல் பணியை மேற்கொண்டிருந்த தனது மகன் காணாமற்போயுள்ளதாக தந்தை தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

15 ஆம் பக்கம் பார்க்க....

# தேர்தலில் 556 பெண்கள் போட்டி

(கொழும்பு)

இம்முறை நாடாளுமன்ற தேர்தலில் அரசியல்கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் ஊடாக 556 பெண்கள் போட்டியிடுகின்றனர்.

இவர்களில் அதிகளவான பெண்கள் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர். கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 147 பெண்கள் போட்டியிடுகின்றனர்.

ஆகக்குறைந்த பெண் வேட்பாளர்கள் பதுளை மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர். அங்கு மூன்று பெண்கள் போட்டியிடுகின்றனர்.

எவ்வாறாயினும் உலக நாடுகள் வரிசையில் பெண்கள் அரசியலில் குறைவான எண்ணிக்கையில் ஈடுபடும் நாடு இலங்கையாகும்.

நாடாளுமன்றத்தில் உருவாக்கப்படும் முக்கியமான சட்டங்கள் தொடர்பில் படித்த, புத்திசாலித்தனமான பெண்களின் கருத்துக்களும் யோசனைகளும் அவசியம்.

இதனால், நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது குறித்த கருத்தரங்குகள் கூட நடத்தப்பட்டு வருகின்றன.

நாடாளுமன்றத்தில் பெண்களின பிரதிநிதித்துவத்தை 25 வீதம் அதிகரிக்க வேண்டும் என தற்போதைய அரசாங்கம் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# கைக்குண்டு, தோட்டா மீட்பு

(கொழும்பு)

புத்தளம் - பள்ளம், நாகவில்லு ஜயமாவத்தை வீதிக்கு அருகில் கைக்குண்டு ஒன்றும் 20 தோட்டாக்களும் நேற்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வீதியில் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த பெண்ணொருவருக்கு கைக்குண்டும், தோட்டாக்களும் பை ஒன்றில் வைத்திருந்த நிலையில் கிடைத்துள்ளது.


இது குறித்து புள்ளம் பொலிஸா

15 ஆம் பக்கம் பார்க்க....

# மகிந்தவைப் போல் பதவி ஆசை எப்போதும் எனக்கு இல்லை

## பிரசார மேடையில் பிரதமர் ரணில் உரை

(கொழும்பு)



நாட்டின் சம்பிரதாயங்களை மீறி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுத் தேர்தலில் வேட்பாளராக போட்டியிடுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டி அக்குரணையில் நேற்று நடை பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

15 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரி - ரணில் உறவில் ஜனநாயகம் வலுவடைகிறது

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

**ஜனவரி 8 ஆம் திகதி ஜனநாயக புரட்சி யினூடாக உதயமான மைத்திரி- ரணில் உறவினூடாக நல்லாட்சியும் ஜனநாயக மும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன காரணமாக நிதி முகாமைத்துவம் சரிவர நிர்வகிக்கப்படுவதாக ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**



கோல்டன் கீ வங்கியில் இடம்பெற்றதாக கூறப்படும் மோச டிகள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு ஓய்வுப் பெற்ற நீதி யரசர் தலைமையிலான குழுவொ ன்றை நியமிக்கவுள்ளேன். இதனூடாக குறித்த மோச டிகளு டன் தொடர்புடைய குற்றவாளி களுக்கு சட்ட ரீதியாக தண் டனை வழங்க நடவடிக்கை எடுப் பேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கோல்டன் கீ வங்கி வைப்பாளர்களுக்கு உரிய நிதித் தொகையை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற்க ண்டவாறு தெரிவித்தார். ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன மேலும் அங்கு உரையாற்று கையில்,

கோல்டன் கீ வங்கி நிதி ரீதியாக பின்தள்ளப்பட்டதன் காரணமாக குறித்த வங்கியில் வைப்பிலிட்ட வைப்பாளர்கள் பொருளாதார ரீதியா கவும் சமூக ரீதியாகவும் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்தனர். இதன் காரணமாக தமது வாழ்க் கையை கொண்டு செல்ல முடியாத சூழல் ஏற்படுத்தப்பட்டது.

அத்துடன் மனதளவில் பலர் பாதிக்கப்பட்டனர். இதனால் பலர் தமது உயிரை பணயம் வைத்த னர். நாட்டில் பொருளாதார துறையி லும் பாரிய சிக்கல் ஏற்பட்டது.

இந்நிலையில் நாட்டின் வங்கி கள் தொடர்பிலான நிதி செயற்பாடு கள் தொடர்பில் நாட்டு அரசாங்கமே பொறுப்புக்கூறவேண்டும். நாட்டின் வங்கிகள் ரீதியான நிதி பிரச்சி னைகள் தொடர்பில் அரசாங்கத்தி னால் ஒருபோதும் தட்டிக்கழித்து செயற்பட முடியாது.

அதேபோன்று அரசாங்கத்தை மீறி எந்தவொரு தனியார் நிறுவன த்தினாலும் செயற்பட முடியாது. இது சர்வதேச நாடுகளிலும் பரவ லாக அமுலாக்கப்பட்டு வரும் செய ற்பாடாகும். அரச நிதித்துறை சார் ந்த முகாமைத்துவம் சரிவர கடைப் பிடிக்கப்படாமையின் காரணமா கவே கோல்டன் கீ போன்ற சர்ச் சைகள் ஏற்படுகின்றன. முன் னைய ஆட்சியின் போது நிதி முகாமைத்துவம் சரிவர கடைப் பிடிக்கப்படாது போனாலும், ஜனவரி 8 ஆம் திகதி மக்களி னால் ஏற்படுத் தப்பட்ட மாற்றத் தின் பின்னர் நிதி முகாமைத்து வம் சரிவர பேணப்பட்டது.

மேலும் மைத்திரி- ரணில் உறவின் காரணமாக நாட்டில் நல்லாட்சியும் ஜனநாயகமும் உறுதிப்படுத்தப்பட்டதன் விளை வாக நாட்டின் நிதித்துறை முகா மைத்துவமும் சரிவர நிர்வகிக் கப்படுகின்றது. இந்த ஆட்சிக் காலத்தின் போது ஊழல் மோச டிகள் முழுமையாக இல்லாமல் செய்யப்பட்டுள்ளன.

ஆகவே கோல்டன் கீ வைப் பாளர்களுக்கு உரித்தான சொத் துக்கள் கட்டம் கட்டமாக வழங் குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மக்கள் நல்லாட்சி அரசை நிராகரிக்க மாட்டார்கள்

## லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)



நல்லாட்சியை மக்கள் நிரா கரிப்பார்கள் என தாம் கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை என அமைச்சர் லக்ஷ்மன் கிரி யெல்ல தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர், புதிய அர சாங்கத்தின் 100 நாள் திட்டத் தினால் மக்கள் அதிருப்தி அடை ந்துள்ளதாக குற்றம் சுமத்து கின்றனர்.

100 நாட்களில் மக்களை சந்தோசப்படுத்திய வேறு எந்த வொரு அரசாங்கமும் கிடை யாது.

குறுகிய காலப்பகுதியில் அர சியல் அமைப்பில் மாற்றம் செய்த வேறு அரசாங்கம் உண்டா?

நல்லாட்சி அரசாங்கத்திற்கு மக்கள் எதிர்ப்பை வெளிக்காட் டுவார்கள் என நான் கனவிலும் நினைக்கவில்லை. மகிந்தவை மக்கள் நிராகரித்துள்ளனர்.

100 நாட்களில் நாம் ஐந்து ஆண்டுகளுக்கு செல்ல வேண்டு மெனவும், மக்கள் இதற்கு தயாராக இருப்பதாகவும் அவர் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 30 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 30 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட மதுவரித்திணைக்கள பொறுப் பதிகாரி ச.தங்கராஜா தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பு, கல்லடியில் உள்ள மதுவரித்திணைக்கள அலு வலகத்தில் நடைபெற்ற செய்தியா ளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் என்.சோதி நாதன் வழிகாட்டலின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட தாகவும், இதனடிப்படையில் நேற்று முன்தினம் மட்டக்களப்பு, காத் தான்குடி, மஞ்சந்தொடுவாய் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 10வர்த்தக நிலையங்களு க்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய் யப்பட்டதாகவும் மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி ச.தங் கராஜா தெரிவித்தார்.

அதன் அடிப்படையில், ஒருவரு க்கு தலா நான்காயிரம் ரூபா வீதம் தண்டப்பணம் விதிக்கப்பட்டு நீதி மன்றினால் எச்சரிக்கப்பட்டு விடு தலை செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேபோன்று நேற்றுக் காலை ஓட்டமாவடி, வாழைச்சேனை, கல்குடா ஆகிய பகுதிகளில் மேற் கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது சிறுவ ர்களுக்கு சிகரெட்டுக்களை விற் பனை செய்த 20 வர்த்தக நிலை யங்களுக்கு எதிராக வாழைச் சேனை நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தலா இரண்டாயிரம் ரூபா தண் டப்பணம் விதிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)


3,6 மற்றும் 12 மாததவணை காலப்பகுதியில் உங்கள் தெரிவுப்படி மீளச்செலுத்தலாம்

ரூபா.5மில்லியன்வரை பெற்றுக்கொள்ள முடியும்

நம்பமுடியாத குறைந்தவட்டி வீதத்தில்

ரூபா.1மில்லியனுக்கு மாதாந்தவட்டி ரூபா.13,990 மட்டுமே

SINGER FINANCE நாடுங்கள்

உங்கள் வாகனபுத்தகத்தை கொடுத்து உங்கள் பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள்



தொடர்புகளுக்கு
தனு 077 9 357 124
தர்ஷன் 077 7 009 666
சுஜந்தன் 077 7 391 449

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்


# மகிந்தவின் விரலை பிடித்தவரிடம் விசாரணை?



முன்னாள் ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ஷவின் விரலைப் பிடித்தவரிடம் விசாரணை நடத் தப்படவுள்ளது.

அண்மையில் அக்குரஸ்ஸ பிரதேசத்தில் நடைபெற்ற கூட்ட மொன்றின் போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் விரலை ஆதரவாளர் ஒரு வர் இறுக்கிப் பிடித்ததாகவும் இதனால் கோபமுற்ற மகிந்த அவரைத் தாக்கியதாகவும் ஊடக ங்களில் தகவல் வெளியிடப்பட்டி ருந்தது.

ஜனாதிபதியின் விரலை பிடித்த நபரிடம் அக்குரஸ்ஸ பொலிஸார் விசாரணை நடத்தவுள்ளனர்.

விரலை பிடித்த நபரை பொலி ஸார் அடையாளம் கண்டுள்ளனர். அக்குரஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த விஜயதுங்க என்ற நபரே இவ்வாறு ஜனாதிபதியின் விரலைப் பிடித் துள்ளார்.

இந்த நபர் கடுமையான ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சியின் ஆதர வாளர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்படாத காரண த்தினால் அவரிடம் வாக்குமூல மொன்றை பெற்றுக்கொண்டு அவரை அனுப்பி வைக்கத் தீர்மானிக் கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் ஓவிய விழா ஒக்டோபர் 7ஆம் திகதி

(கரணவாய்)

கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை கலைக்கழகத்தின் அரச கட்புலக் கலைக்குழு ஏற்பாட்டில் அரச சிறுவர் ஓவிய விழா ஒக்டோபர் 7ஆம் திகதி கொழும்பு தேசிய கலாபவனத்தில் நடைபெறவுள்ளது.

இவ்ஓவியப் போட்டிக்காக மாவட்ட ரீதியாக 150 சிறுவர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். தேர்ந்தெடுக்கப்படவுள்ள சிறுவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (இ-5-60)

## நாகலிங்க முதலியார் வீதி பயணிக்க முடியாத நிலையில்

பருத்தித்துறை நாகலிங்க முதலியார் வீதி நீண்டகாலமாக திருத்தப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. பாடசாலை மாணவர்கள், முதியோர்கள், கர்ப்பிணிப் பெண்கள் எனப்பலர் பயன்படுத்தும் இவ்வீதியினை கற்கள் நிரப்பி தார் இட்டு புனரமைத்து தருமாறு அப்பிரதேசத்தில் உள்ள மக்கள் கோரி நிற்கின்றனர். இது தொடர்பாக உரிய அதிகாரியிடம் பலமுறை கோரிக்கை விடப்பட்டும் எந்தவொரு முயற்சியும் இடம்பெறவில்லை என சம்பந்தப்பட்ட பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது. எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் கவனத்தில் கொண்டு இவ் வீதியைத்திருத்தநடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதியில் உள்ள மக்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர். (இ-5)


CNR WORLD WIDE EXPRESS & TRAVELS

அனுப்பும் பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு

- வெளிநாட்டு/ உள்நாட்டு துரித தபால் பொதிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவை.
- அனுப்பும் பொதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதி உத்தரவாதம் (உங்கள் வீட்டில் இருந்தவாறு அனுப்பும் வசதி)
- சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள் ( AirTicket) மீள் உறுதிப்படுத்தல், திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ளலாம்.
- கடல் /ஆகாய மார்க்க பெரிய பொதிகள் மற்றும் கார்கோ சேவை (Bulk Cargo)



சி.என்.ஆர். எக்ஸ்பிரஸ் பொதிகள் சேவை

(C-1542)

401, Clock Tower Road, Jaffna (பெருமாள் கோவில் அருகில்) அழையுங்கள்:077 293 1062



Chemical Treated and Vacuum / Pressure Seasoned Timber

இரசாயன கலவையின் உதவியுடன் முற்றிலும் பதனிடப்பட்ட நன்றாக காய்ந்த ஈரப்பதனற்ற மரங்கள்

வெளிநாடுகளில் இருந்து இலங்கையில் இறக்குமதி செய்யப்படுகின்ற மரங்கள், உள்ளூர் மரங்கள் யாவும் 90% பதனிடப்படாமலேயே பயன்படுத்தப்படுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

இதனால்



- மிக விரைவாக மரங்கள் உக்கிப்போய்விடுகின்றன.
- தளபாடங்கள், மரங்கள்,பங்கசு, கறையான் தாக்கத்திற்கு உள்ளாகி சிதைவடைந்து போகின்றன.
- காலப்போக்கில் தளபாடங்கள், கதவுகள் வளைதல், இடைவெளி தெரிதல், அசைதல் போன்ற பிரச்சினைகளுக்குள்ளாகின்றன.
- சரியான தரம் வாய்ந்த தளபாடங்களை செய்து பாவிக்க முடியாமல் இருக்கும்.

மரங்கள் உக்குகின்றனவா? மரங்களைப் பங்கசு, கறையான் தாக்குகின்றதா?

காலப்போக்கில் கதவுகள், ஜன்னல்களில் இடைவெளி தெரிகின்றதா? நாளடைவில் தளபாடங்கள் அசைகின்றனவா?

கதவுகள், பலகைகள் வளைகின்றனவா? கவலையை விடுங்கள்! இவை அனைத்திற்குமான உடனடித் தீர்வுகளுக்கு இன்றே நாடுங்கள்.

இவை அனைத்திற்குமான தீர்வுகள் எம்மிடமேயுள்ளன.

நீங்கள் வாங்கும் அனைத்து விதமான மரங்களுக்கும் 25 வருட கால உத்தரவாதம் வழங்கப்படும்.

- முற்றிலும் இரசாயனம் (Borum) பயன்படுத்தி மரங்களை பதனிட்டு காயவைத்த மரங்கள், நல்ல தரம் வாய்ந்த நீண்ட காலம் பயன்படுத்தக்கூடிய மரங்களை எம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
- 12% குறைவான ஈரப்பதனைக் கொண்ட தரம் வாய்ந்த மரங்களை மட்டுமே விநியோகித்து வருகின்றோம்.
- சகலவிதமான தேவைகளுக்கும் பயன்படுத்தக்கூடிய மரங்களையும் பலகை வகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

வடமாகாணத்தில் உள்ள ஏக விநியோகஸ்தர்களும் எம்மோடு தொடர்பு கொண்டு மரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: சத்யமூர்த்தி : 077 780 6114
Thermex Lanka (Pvt)Ltd
No.156/75, Negombo Road, Peliyagoda, Sri Lanka
T.P. 011 293 2330 Fax: 011 524 9048

Email: info@thermexlanka.com
thermexlankapvt@gmail.com
website:www.thermaxlanka.com


## இராசி பலன்

26.07.2015
(ஆடி 10, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
தசமி முன்னிரவு 9.28 மணிவரை
விசாகம் முற்பகல் 10.53 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சுபநேரம்-9.02-10.32 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | செவ் |
| | கிரக நிலை | | சூரி புதன் |
| | | | குரு சுக் |
| | சந் | சனி | ராகு |

**மேடம்:** தொலைபேசி முலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், விருந்தினர் வருகையுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**இடபம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், உடல்நலம் சீராகும், கடன் சுமை குறையும் வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்:** பெருமைகள் வந்து சேர கணபதியை வழிபட வேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்:** வாகன சுகமுண்டு, தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும், பெற்றோர் மீது பிரியம் கூடும், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், சுப செலவுகள் கூடும்.

**சிம்மம்:** அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், நண்பர்கள் மூலம் நன்மைகள் இடம்பெறலாம், எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கன்னி:** திடீர் பணவரவு மனதிற்கு சந்தோசம் தரும், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், மக்கள் போற்றும் வாழ்வமைய கண்ணனை வழிபட வேண்டிய நாள்.

**துலாம்:** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், உறவினர் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு, போசன சுகக் குறைவான நாள்.

**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், முயற்சிகள் எளிதில் கைகூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பொதுவாழ்வில் புகழ் கூடும், செய்தொழில் மேன்மையுண்டு.

**மகரம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் கைகூடலாம், அந்நியர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், போசன நன்மையுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மீனம்:** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், வரவை விட செலவுகள் கூடலாம், போசன சுகக் குறைவான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்சேர்ப்பு நேர்முகத் தேர்வு

கொழும்பினை தலைமையகமாகக் கொண்ட முன் னணி ஆடைத் தொழிற்சாலையின் தொழில் வெற்றிடங் க ளுக்கான ஆட்சேர்ப்பு யாழ். மாவட்ட செயலகத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.யாழ். மாவட்டத்தில் தொழில் வாய்ப்புகளை அதிகரி த்து தொழில் எண்ணிக்கையினை குறைப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் செயற்பாடுகளுக்கு அமைய தையலாளர், இயந்திர இயக்குநர் போன்ற வெற்றிடங்களுக்கே ஆட்சேர்ப்பு செய்வதற்கு நேர்முகத் தேர்வுகள் நடைபெறவுள்ளன.

இதற்கான நேர்முகத் தேர்வு காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடைபெறவுள்ளது. இந்நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் க.பொ.த. சாதாரண தரத்தில் குறைந்தது 5 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் அவசியம். அதற்கு மேற்பட்ட கல்வித் தராதரத்தை கொண்டவர்களும் விரும்பத்தக்கது.

தகுதி உடையவர்கள் யாழ். மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டப கீழ்த்தளத்தில் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வில் பங்கு பற்றி தமக்குரிய தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார். (இ-5)

## இரு இ.போ.ச.பேருந்துக்கள் சேவையில் ஈடுபட வேண்டும்

வடமராட்சி கிழக்கு ஆழியவளையில் இருந்து பருத்தித்துறை வரையான காலை வேளை பயணிகள் இ.போ.ச. பேருந்து சேவையில் இரண்டு பேருந்துகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட வேண்டுமென பயணிகளால் இலங்கை போக்குவரத்துச்சபையின் பருத்தித்துறை பேருந்துசாலைக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, ஆழியவளையில் இருந்து தினமும் காலை 7 மணிக்கு புறப்படுகின்ற பேருந்து 8மணியளவில் பருத்தித்துறையினை வந்தடைகிறது. இவ்வாறு போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வருகின்ற குறித்த பேருந்து ஆழியவளையில் இருந்து வரும்போது பாடசாலை மாணவர்கள், தனியார் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் என பலதரப்பட்ட பயணிகளை ஏற்றிக்கொண்டு மருதங்கேணியை வந்தடையும் போது அதிகளவான பயணிகளுடன் வருகின்றது. கட்டைக்காடு, அம்பன், நாகர்கோவில், குடத்தனை போன்ற பிரதேசங்கள் ஊடாக இப் பேருந்து சேவையில் ஈடுபடுவதால் இந்நிலை ஏற்படுகிறது. இதனால் பயணிகளில் அதிகளவானோர் நின்ற நிலையில் தமது பிரயாணத்தினை தினமும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதில் ஒரு பயணி பேருந்தினை விட்டு இறங்குவதாயின் பத்துப் பயணிகள் கீழே இறங்கி நிற்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இதில் குறிப்பாக முதியவர்கள் நின்று பயணம் செய்ய வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. எனவே ஆழியவளையில் இருந்து பருத்தித்துறை வரை காலை வேளையில் இரண்டு பேருந்துகள் சேவையில் ஈடுபட வேண்டுமென பயணிகள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (இ-5-60)

## யோகா பயிற்சி

இந்தியாவிலிருந்து வருகை தந்த வாழும் கலை யோகா பயிற்சி நிலைய ஆசிரியர் டி.சாயிராம் ஜி. நல்லூர் சட்டநாதர் கோயில் வீதியிலுள்ள திவ்ய ஜீவன் சங்க மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 2 ஆம் திகதிவரை மாலை 5.30 மணி முதல் இரவு 7.30 மணிவரை வாழும்கலை யோகா பயிற்சியை நடத்தவுள்ளார்.

மன இறுக்கம், உடல் உபாதைகளை போக்கக் கூடிய மூச்சுப் பயிற்சி, எளிமையான யோகாசனங்கள், சக்தி வாய்ந்த சுதர்சனக்கிரியா, தியானம் என்பவற்றை உள்ளடக்கியதாக இப் பயிற்சி அமையவுள்ளது.

இப்பயிற்சியில் 17 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொணடு பயன்பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)


## நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இன்று பறைமேளக் கச்சேரி

நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு இன்பம் குழுவினரின் பறைமேளக் கச்சேரி நடைபெறவுள்ளது.

வடமாகாண பனை அபிவிருத்தி வாரத்தை முன்னிட்டு வடமாகாணக் கூட்டுறவு அமைச்சின் ஒழுங்கமைப்பில் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் கடந்த 22 ஆம் திகதி தொடக்கம் பனை அபிவிருத்திக் கண்காட்சி நடைபெற்று வருகின்றது.

பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களினதும் பனை அபிவிருத்திச் சபையினதும் பங்கேற்புடன் கலை நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (இ)


CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் வாய்ப்பு



3 நாட்கள் பயிற்சி நெறி

CCTV, Network Cabling, Smart Home Installation, Copper Cabling & Wireless

~CCTV Camera Installation
~Cloud Configuration
~Mobile&Remote Monitoring
~DDNS Configuration
~Backup & Access Permission
~DVR/NVR &Hard disk Configuration
~IP Camera Installation & Configuration
~Cabling for CCTV Camera
~Structured Network Cabling
~Wireless Router Installation & Configuration
~Smart Home Installation
~Copper Cabling with Practicals

*Real Equipments இனால் பயிற்சி வழங்கப்படும்
*Win SYS இனால் அங்கிகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்

Hello : 076-7013060

WinSYS NETWORKS
77,மணிக்கூட்டு கோபுரவீதி,யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கு அருகாமையில்)
021-7306000

Second.Batch Starts in July 31st
Limited Students Only


## யாழ்ப்பாணம் மாநகரசபை

**நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2015**

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 27.07.2015-10.08.2015 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை படிவங்கள் விநியோகிக்கப்படும். 11.08.2015 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிவரை கேள்விப் படிவங்கள் சபையால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| கேள்விப்படிவக் கட்டணம் | :565/= (வற் வரி, தே.க.வரி உள்ளடங்கலாக) |
| கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி | : 27.07.2015 -10.08.2015 பிற்பகல் 3.00 மணிவரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் : | 11.08.2015 காலை 9.30 மணிவரை |
| கேள்வி திறத்தல் : | 11.08.2015 முற்பகல் 10.00 மணிக்கு |

| | |
|---|---|
| + துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்களுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் - | 10,000/= |
| + ஏனைய கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் - | 2,000/= |
| + உற்சவகால ஒலிபெருக்கி விளம்பர சேவைக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் - | 10,000/= |
| + விளம்பர பதாகைகள் (வீதித்தடைகள்) காட்சிப்படுத்தல் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் - | 10,000/= |

விண்ணப்பப்படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு இவ் அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப்பெட்டியினுள் 11.08.2015 காலை 9.30 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வியில் சித்தி பெற்றவர் கேள்வித் தொகையினை 14.08.2015 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் முழுமையாக செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை மாநகர சபை, நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.

குறிப்பு:-

1. கோவில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகளும் உற்சவ காலத்திற்கு மாநகர சபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதி இன்றி திறந்து வியாபாரம் நடத்தவும் விளம்பரங்கள், விளம்பரப் பதாகைகள் அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றேன்.
2. கோவில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகள் வியாபார மாற்றம் செய்வதாயின் அதற்கான உரிமத்தை யாழ்ப்பாண மாநகர சபையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. ஆகக் கூடிய தொகையாக துவிச்சக்கரவண்டிக்கு ரூபா 5/= உம் மோட்டார் வண்டிக்கு ரூபா 10/= உம் மட்டுமே அறவிடப்பட வேண்டும். தலைக்கவசத்திற்கு பணம் அறவிடப் படலாகாது.
4. உணவு கையாளும் நிலையங்கள் மேலதிகமாக சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் படிவத்தினை பூர்த்தி செய்து பொது சுகாதார பரிசோதகரினால் உறுதிப்படுத்திய பின்னர் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
5. நல்லூர் உற்சவ கால வியாபார அனுமதி பெற்ற வியாபாரிகள் மாத்திரம் உள்நுழைய அனுமதிக்கப்படுவார்கள். ஏனைய வியாபாரிகள் எக்காரணம் கொண்டும் உள்நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**ஆணையாளர், மாநகர சபை,**
**யாழ்ப்பாணம். 24.07.2015**

(சி-1661)


இனிமேல் அலைச்சல் இல்லை

jaffnaholidays



நீங்கள் இரண்டு பேரா..?
இந்தியா அல்லது வேறு நாட்டுக்கு செல்ல இருக்கிறீர்களா..?

நாமே உங்கள் வீட்டுக்கு வருகிறோம்
வீசா விண்ணப்பபடிவம்
ஆவணங்கள் ஒழுங்குபடுத்துதல்
விமானப் பயணச்சீட்டு

எமது சேவை இலவசம் மற்றும் குறைந்த கட்டணம்

உள்ளங்களை வென்ற நம்பிக்கை

இந்தியா செல்லும் வெளிநாட்டவர்களுக்கு ETA VISA குறுகிய நேரத்தில் பெற்றுக் கொடுக்கப்படும்

Jaffna Holidays
Travels & Tours
320/B, Point Pedro Road, Aanapanthi, Jaffna
www.jaffnaholidays.lk

Jaffna Office : 021 222 4665 / 077 340 1770 Chankanai : 076 847 2458
Chavakachcheri : 077 892 2401 Nelliady : 077 698 1926
Kilinochchi, Mullaithivu & Mannar : 077 220 8344

வீட்டில் இருந்தவாறே வருமானம் ஈட்டும் வழி...
அழையுங்கள் : 077 340 1770
சாதாரண கணனி அறிவு அவசியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த ராஜபக்ஷ பிரதமராக ஆதரவு வழங்க போவதில்லை

## மஹிந்த சமரசிங்க கூறுகிறார்

(கொழும்பு)

**நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பலப்படுத்தவோ அல்லது பிரதமராகுவதற்கு ஆதரவு வழங்குவதற்கோ அல்ல என களுத்துறை மாவட்ட கூட்டணி வேட்பாளர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்குவதே தனது நோக்கம் என அவர் கூறியுள்ளார்.

கடந்த ஜனாதிபதி ஆட்சியின் போது இலங்கை சீனாவுக்காக செயற்பட்டமையினால் சர்வதேசத்திடம் ஓரங்கட்டப்பட்டதாகவும், அவ்வாறான பொறுப்பற்ற கொளகை மீண்டும் அவசியமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இம்முறை தேர்தலின் போது ஜெனீவாவில் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் அமர்வு தொடர்பில் பெரிய அளவிலான அவதானத்தை செலுத்த வேண்டும் என



மஹிந்த சமரசிங்க மேலும் தெரிவித்தார்.

சிங்கள ஊடகமொன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது. (இ-7)

# அரச அதிபர்களை கொழும்புக்கு அழைக்க அமைச்சின் அனுமதி பெறப்பட வேண்டும்

(கொழும்பு)

மாவட்ட நிர்வாக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மாவட்ட செயலாளர்கள் பல்வேறு தேவைகளுக்காக அடிக்கடி கொழும்புக்கு அழைக்கப்படுவதால் அந்தந்த மாவட்டங்களின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது.

இதனால் மாவட்ட செயலாளர்கள் கொழும்புக்கு அழைக்கப்படுவது சுற்றுநிருபத்தின் மூலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களை கொழும்புக்கு அல்லது வேறு இடங்களுக்கு அழைக்க வேண்டுமாயின் அதற்காக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் முழுமையான அனுமதி பெறப்பட வேண்டும் என சுற்று நிருபத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ-3)

# பொலிஸாரால் மூவர் கைது

சட்டவிரோத மின்சார பாவனையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின்பேரில் மூவர் நெல்லியடி பொலிஸாரினால் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். கரவெட்டி, வதிரிப்பகுதியைச் சேர்ந்த நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீண்டநாட்களாக இச் செயற்பாட்டில் ஈடுபட்டு வந்த நிலையில் நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.கைது செய்யப்பட்ட நபர்கள் நேற்று முன்தினம் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். (இ-5-60)

# கௌரவிப்பு நிகழ்வு


லண்டன் ஹரோ மாநகர புதிய மேயர் சுரேஷ் கிருஷ்ணாவினை கௌரவிக்கும் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி பாலர் பகல் விடுதி மண்டபத்தில் பிற்பகல் 2மணிக்கு நடைபெறவுள்ளது.

நீர்வேலி பாலர் பகல் விடுதியின் சமுதாய முன்னேற்றக்கழகத்தின் தலைவர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.இந்நிகழ்வில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி. ஆறு திருமுருகன், வடமாகாண சபை உறுப்பினர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்,கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், நீர்வேலி கந்தசுவாமி கோவில் தலைவர் த.நடராசா,நீர்வேலி கிராமசேவையாளர் சி.தயாபரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5-60)









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# J.D.C.S.I
## CENTRE FOR HOLISTIC HEALING
### DIPLOMA IN COUNSELLING

Applications are invited for the fourth batch of students for Diploma in Counselling conducted by the Center for Holistic Healing (CHH) of the Jaffna Diocese of the Church of South India.

Those involved in social work, medical field and community developments as well as the ones requiring additional study, training and exposure in the field of counseling are welcome to apply to the Director, Centre for Holistic Healing, Church of South India, Vaddukoddai before 10th of August, 2015.

Interviews are scheduled for 15th of August 2015 at 9am in Centre for Holistic Healing, Mc.Leod Hospital, Inuvil.

**Dr (Mrs) Thayalini Thiagarajah**
**Director**
**Fax : +94 -(0) 112582015**
**Mob : +94-(0) 777370494**
**E-mail : thayathiagarajah@gmail.com**
**Website :www.holistichealingjdcsi.org**

**Centre for Holistic Healing - Office**
**Mc.Leod Hospital Premesis, Inuvil.**

(1213)



# வெளிநாட்டு உயர்கல்வி
பகுதி நேர வேலைவாய்ப்புடன்

ஹோட்டல் முகாமைத்துவம் சிங்கப்பூர் மலேசியா

ஆகக்கூடிய கல்வித் தகைமைகள் O/L

- 2 வருட கற்கைநெறிக்கட்டணம் 350,000/=
- கவர்ச்சிகரமான மாதாந்த கொடுப்பனவுகள்

100% விசா உத்தரவாதம் வழங்கப்படும்



iCS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
Hotline: 077 3013060 021- 4926222


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## அறிவித்தல்


யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 125 ஆவது ஆண்டு நிறைவையிட்டு இந்துக் கல்லூரி மாணவர் முதல்வர் சபையினால் "The Leader" சஞ்சிகையும், கல்லூரியின் 125 ஆவது ஆண்டு விழா மலரையும் வெளியிட இருக்கின்றோம். அதற்காக தங்களிடமுள்ள பாடசாலை சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மாணவர் முதல்வர்கள் சம்பந்தமான ஆவணங்களையும் அதிபரிடமோ அன்றி பிரதி அதிபரும் மாணவர் முதல்வர் சபை பொறுப்பாசிரியருமான சதா நிமலன் அவர்களிடம் நேரடியாகவோ அல்லது principal @jhc.lk,jhcprefects@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ 10.08.2015 இற்கு முன்னர் அனுப்பி உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**தொடர்புகளுக்கு : 078 301 7454 (திரு.ச.நிமலன்), 075 765 2738 (ஆ.வேதாகுலன்)**

**அதிபர்,**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**


# Law Classes

Corporate and Business LAW (ACCA)
Fundamentals of Ethics } CIMA
Corporate Governance and Business Law } CIMA
Business Law ( AAT) (CMA)
General Principal of Law (IBSL)
Criminal Law (Police Confirmation & Promotion)
Law Entrance



# English Classes

**IELTS**, Spoken English with Grammer
Diploma in English- English A/L, O/L

***Course fee:***
Very reasonable-IELTS Course Fee Only Rupees 10000/=

***Student's Performance***
Corporate & Business Law:- Vijitha-59, Nivethika-B, Jeevitha-66,Dilanka-72, Jeyasuriya-59
*IELTS Band*:- Kaneshan-07-(In Australia),Nuwan-6.5, Jathusana -6.5-(London),Thivya -07-(London)

***Conducted by***
Mohanarajah Joganantham (M.Raja Joganantham)
L.L.B,Dip in Journalism
Reading for LL.M
Proprietor of MICOM
Venue: MICOM INTERNATIONAL Since 1997 in Colombo
Branches: Tellipalai, Jaffna Town, Point Pedro, Vavuniya
Commencement 01 August 2015
Class Days: Weekdays in Jaffna Weekend in Vavuniya
Contacting Numbers: 077 284 2556,076 707 7558, 077 395 0215
Contactable person Mr.Joganantham
Lectured on Law, University of Ballarat (Australia), University of ICFAI (Hydrabad), OXONIA, IAS, Ladies College,London Business School, MICOM International
*Computer Classes are to be Commenced within a Short Period*



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 11 செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Diploma photography/ கணனி வடிவமைப்பாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/4797 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 37 செவ் 7 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1702 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 40 செவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BSC/ QS<br>தொ.இ: B/4798 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 74 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: G/1703 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்திரம்<br>கி.பா: 3 1/2 சூரிசெவ் 10 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/2100 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 40 செவ் 4 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/1710 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 16 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில் AAT, CHARTERED பட்டயகணக்காய்வாரள்<br>தொ.இ: B/922 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 24 செவ் 12 இல்<br>உயரம்: 145cm<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்<br>தொ.இ: G/1711 |

# கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
... காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் பிரதேச செயலகத் தினால் முன்னெடுக்கப்பட்ட போதைப்பொருள் மற்றும் மது ஒழிப்பு எழுச்சிப் பேரணி ஒன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இவ் எழுச்சிப் பேரணியில் போதைப்பொருள் மற்றும் மது ஒழிப்பு தொடர்பான வீதி நாடகமும் நடைபெற்றது.(படங்கள்:- நல்லூர் செய்தியாளர்)

# ராணுவத்தினரின் ஆக்கிரமிப்பிலுள்ள மிகுதிக்காணிகளும் விடுவிக்கப்படும்

## மாவை சேனாதிராசா நம்பிக்கை



**ஆட்சி மாற்றத்திற்கு பின்னர் காணப்படும் சுமுகமான நிலைமை பொதுத் தேர்தலுக்கு பிறகும் தொடருமாயின் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் உள்ள மிகுதி நிலங்களும் விடுவிக்கப்பட்டு மக்களை அங்கு மீளக்குடியேற வைத்து அவர்களை வாழவைக்க முடியும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.**

யாழ்.மார்ட்டீன் வீதியில் அமைந்துள்ள தமிழரசு கட்சியின் அலுவலகத்தில் அண்மையில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை இந்த ஆட்சி மாற்றத்தில் பொதுமக்களுக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது. அதற்கேற்ப நல்லாட்சி அரசாங்கத்தினால் ஆயிரத்து 100 ஏக்கர் நிலம் ஆரம்ப கட்டமாக விடுவிக்கப்பட்டது.

அதில் சில குறைப்பாடுகள் காணப்பட்டன. அந்த ஆயிரத்து 100 ஏக்கர் என்பது வளலாய் நிலங்களையும் உட்படுத்தியதாக இருந்தது. வளலாய் நிலங்கள் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள்ளோ, ஆக்கிர மிக்கப்பட்ட நிலப்பரப்பிற்குள்ளோ வராது.

ஆனால் 1371 ஏக்கர் வலி. வடக்கில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டு மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்படாத பிரதேசமாக இருந்த வகையில் 563 ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டுள்ளது.

வலளாய் பகுதியில் விடுவிக்கப்படாத சில பிரதேசங்களை விடுவிப்பது தொடர்பில் இரு வாரங்களுக்கு முன்னர் மீள்குடியேற்ற அமைச்சு, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

அதனடிப்படையில் 18 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் செய்லாளர்கள் யாழில் மேலும் விடுவிக்கப்பட வேண்டிய நிலங்களை விடுவிப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்க உள்ளனர். மேலும் மன்னார் முள்ளிக் குளம் கடற்படையினரின் கட்டுப் பாட்டில் உள்ள காணிகளை விடு விப்பது தொடர்பிலும் பேச்சுக்கள் நடத்தப் பட்டு வருகின்ற நிலையில் அந்த நிலமும் விரைவில் விடுவிக் கப்படும என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

கணித,விஞ்ஞான பாடங்களின் தேர்ச்சி வீதத்தினை அதிகரிக்க

# இலத்திரனியல் பாடமுறை வடமாகாணத்தில் அறிமுகம்

வடக்கு மாகாணத்தில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்விகற்கும் மாணவர்கள் கணித,விஞ்ஞானபாடங்களில் தேர்ச்சி பெறும் வீதத்தினை அதிகரிப்பதற்காக இலத்திரனியல் பாடமுறையினை அறிமுகம் செய்துள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் கடந்த 2வருடங்களாக க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் கணித,விஞ்ஞான பாடங்களில் மாணவர்களின் தேர்ச்சி வீதம் சடுதியாக குறைவடைந்துள்ளது.

எனவே அந்த தேர்ச்சிமட்ட வீதத்தினை அதிகரிப்பதற்காக பாடசாலைகளில் கணித, விஞ்ஞான பாடங்களில் 20தொடக்கம் 40இற்கு இடைப்பட்ட புள்ளிகளை பெறும் மாணவர்களை இனம்கண்டு அவர்களுக்கு இந்த இலத்திரனியல் பாட முறை மூலம் கற்பிக்கப்படுகின்றது.

இந்த இலத்திரனியல் பாடமுறை ஒளிப்படம் அடங்கியதாக மிகவும் இலகுவான முறையில் மாணவர்கள் விளங்கிக்கொள்ளக்கூடியதாக உருவாக்கப்பட்டுள்ளது.

இதுவரை 150பாடசாலைகளுக்கு இலத்திரனியல் பாடமுறைக்கான இறுவெட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஒகஸ்ட் மாத இறுதிக்குள் 300 பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

இந்த இலத்திரனியல் பாடமுறை மூலம் சாதாரண தரப் பரீட்சையில் கணித,விஞ்ஞான பாடங்களில்மாணவர்களின் தேர்ச்சி மட்டத்தினை அதிகரிக்க முடியும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# நல்லூர்க்கந்தன் மஹோற்சவ முன்னாயத்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தினை முன்னிட்டு அதற்கான ஆயத்தங்கள் தொடர்பான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மாநகரசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மஹோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாக வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பண்ணிசை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் வட இலங்கை சங்கீத சபையினதும் அகில இலங்கை திருமுறை மன்றத்தினதும் பாடவிதானங்களுக்கு அமைவாக இலவச பண்ணிசைப் பயிற்சியை நடத்தி வருகின்றது.

இதற்கமைவாக இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணி முதல் 4.30 மணிவரை இலவச பண்ணிசை வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

மேற்படி பயிற்சி வகுப்புக்கள் துறைசார் ஆதீன திருமுறைத் தோன்றல் கே.எஸ்.ஆர். திருஞான சம்பந்த ஓதுவார் மூர்த்திகளால் நடத்தப்பட்டு வருகின்றது. (இ-3)

# 108 சங்காபிஷேகம்

(இருபாலை)

யாழ்.நல்லூர் நாவலர் வீதியில் அமைந்துள்ள சீரடி சாயி மந்திர் ஆலயத்தில் விசேட பூசைகள் எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 4மணிக்கு நடைபெறவுள்ளன.

தொடர்ந்து காலை 9 மணிக்கு அஷ்டோத்திர 108 சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.

நண்பகல் 12 மணிக்கு மூலகர் பாபாவுக்கு வெள்ளிக்கலசம் அணிவிக்கும் நிகழ்வும் விசேட பூசைகளும் இடம்பெற்று மாலை 5 மணி [illegible] நடைபெறவுள்ளன. (இ-5-136)

# மரக்கறி வியாபார நடவடிக்கை மேல் மாடிக்கு மாற்றப்பட்டது

(தும்பளை)

பருத்தித்துறை நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு அமைய பருத்தித்துறை பொதுச் சந்தை மரக்கறி வியாபார நடவடிக்கை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் மேல் மாடிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பொதுச் சந்தையின் மரக்கறி வியாபாரத்துக்கான இடம் மேல் மாடியில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் மரக்கறி வியாபார நடவடிக்கை மேல் மாடியில் நடைபெறாது கீழுள்ள தளங்களில் இடம் பெற்று வந்தமையினால் பருத்தித்துறை நகரசபையினால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் கடந்த 20 ஆம் திகதி வியாபாரிகளால் புறக்கணிப்பு ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

இருந்த போதிலும் மேல் மாடியில் மட்டுமே வியாபாரம் நடைபெற வேண்டும் என பருத்தித்துறை நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தர விட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5-19)







கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட வீதியானது கரவெட்டி பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் அண்மையில் சிரமதானம் செய்யப்பட்டது. இதன்போது சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம சேவையாளர் என பல உத்தியோகத்தர்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேமதாசவின் சாதனை இந்தத் தேர்தலில் முறியடிக்கப்படுமா?



பிரேமதாச சில சட்ட நகல்களுக்கு நாடாளுமன்றின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுக் கொள்வதைத் தடுப்பதற்காகவே ஜே.ஆர் மிக வேகமாக, இரவோடு இரவாக நாடாளுமன்றைக் கலைத்தார் என்பதில் எவ்வித இரகசியமும் இல்லை.

**இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் பிரசாத் குணவர்த்தன எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.**

இலங்கையின் முக்கிய இரு அரசியற் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியன ஆகஸ்ட் 17 இல் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்காகத் தம்மைத் தயார்படுத்தி வருகின்றன.

இது தொடர்பில் இவ்விரு கட்சிகளுக்குமிடையில் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் இடம்பெறுகின்றன. இவ்விரு தரப்பினரும் நாடாளுமன்றில் அதிக ஆசனங்களைப் பெற்றுக்கொள்வதற்கான பரப்புரைப் பணிகளில் ஈடுபடுகின்றன.

113 ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் கட்சியே இலங்கை நாடாளுமன்றை அமைப்பதற்கான பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றிருக்கும். விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறைமையின் கீழ் தனியொரு கட்சி 113 ஆசனங்களைப் பெற்றுப் பெரும்பான்மைப் பலத்தை உறுதிப்படுத்துவதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல.

இந்த முறைமையானது மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் ஜெயவரத்தன ஒருபோதும் போட்டியிடவில்லை. இவ்வாறானதொரு சூழலில் ஜே.வி.பி, கடந்த தேர்தல்களில் கூடிய ஆசனங்களைப் பெற்ற போதும அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றிராத கட்சியுடன் இணைந்து அரசாங்கத்தை அமைக்க உதவியது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் ஜெயவர்த்தன நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்குப் பதிலாக, 1982 டிசம்பரில் தனது ஆட்சிக்காலத்தை மேலும் நீட்டிப்பதற்காக கருத்து வாக்கெடுப்பு ஒன்றை நடத்தினார்.

இதன்மூலம் 1977 இல் பெற்றுக் கொண்டது போன்று அறுதிப் பெரும்பான்மை ஆதரவுடன் ஜெயவர்த்தன தனது ஆட்சியை மேலும் தக்கவைத்துக் கொண்டார்.

தனது சிவில் உரிமையை இழந்திருந்த திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கவால் தலைமை தாங்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்துவதற்காக முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தன 1982 ஒக்டோபரில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினார்.

இத்தேர்தல் பரப்புரையில் தனக்கு ஆதரவு வழங்குவதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவர் மைத்திரிபால சேனநாயக்க மற்றும் அனுரா பண்டாரநாயக்க ஆகியோரை ஜெயவர்த்தன தன்னுடன் இணைத்துக் கொண்டார். பிரித்தாளும் தந்திரம்மிக்க ஒரு அரசியல் தலைவராக ஜே.ஆர் விளங்கினார்.

ஜே.ஆர் தனது ஜனாதிபதிப் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற போது பிரதமராகப் பணியாற்றிய ரணசிங்க பிறேமதாசவின் எதிர்பார்ப்புக்களுக்கு எதிராக நாடாளுமன்றத்தைக் கலைத்தார்.

முக்கிய சட்ட நகல்களுக்கு நாடாளுமன்றின் ஆறில ஐந்து பெரும்பான்மையைப் பெறுக் கொள்வதற்கு பிறேமதாசா விரும்பிய போதிலும் அதற்கு ஜே.ஆர் எதி ராகச் செயற்பட்டார்.

ஜே.ஆரைச் சந்தித்த பிறேமதாச, நாடாளுமன் றைக் கலைக்க வேண்டாம் எனக் கோரிக்கை விடுத்தார். 'நான் உம்முடைய வேண்டுகோளைப் பரிசீலிக்கிறேன்' என ஜே.ஆர் பதிலளித்த போதிலும் அன்றிரவே நாடாளுமன்றை ஜே.ஆர். கலைத்தார். இந்தச் செய்தி உண்மையில் பிறேமதாசாவுக்கு பெரும் அதிர்ச் சியைக் கொடுத்தது.

பிறேமதாச சில சட்ட நகல்களுக்கு நாடாளுமன்றின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுக் கொள்வதைத் தடுப்பதற்காகவே ஜே.ஆர் மிக வேகமாக, இரவோடு இரவாக நாடாளுமன்றைக் கலைத்தார் என்பதில் எவ்வித இரகசியமும் இல்லை.

இதன் பின்னர் 1989 இல் பிறேமதாசா, பொதுத்தேர்தலில் போட்டியிட்டார். இத்தேர்தலானது விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இத்தேர்தலில் ஐ.தே.க தலைமையில் பிறேமதாசாவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் தனது சிவில் உரிமையை மீளவும் பெற்றுக் கொண்ட சிறிமாவா பண்டாரநாயக்கவும்போட்டியிட்டனர்.

இக்காலப்பகுதியில் நாட்டில் 'இரண்டு யுத்தங்கள்' இடம்பெற்றன.

ஒன்று வடக்கில தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையிலும் மற்றையது தெற்கில் ஜே.வி.பி தலைமையிலும் மேற்கொளளப்பட்டது. இதனால் இத் தேர்தலானது பிறேமதாசவுக்கு கடும் நெருக்கடி மிக்கதொரு தேர்தலாக அமைந்தது.

இத்தேர்தல் காலத்தில் ஐ.தே.க வேட்பாளர்கள் பலர் ஜே.வி.பி கிளர்ச்சிவாதிகளால் படுகொலை செய்யப்பட்டனர். இதனால் தென் இலங்கையில் கலவரம் தீவிரமடைந்தது. ஐ.தே.க வேட் பாளர்கள் பலர் தாக்கப்பட்டனர். இதனால் ஐ.தே.க சில இடங்களில் தனது வேட்பாளர்களை நிறுத்த முடியவில்லை.

ஜே.வி.பி கிளர்ச்சி அதிகம் இடம்பெற்ற மாத்தறை மாவட்டத்தல் திரைப்பட கலைஞரான காமினி பொன்சேகாவைப் போட்டியிடுமாறு பிறேமதாச கோரிக்கை விடுத்தார்.

பிறேமதாசா தனது விசுவாசத்திற்குரிய நண்பன் என்ற வகையில் காமினி இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார்.

இத்தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் காமினி பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுக் கொண்டார். இதன்மூலம் காமினி பிரதி சபாநாயகராக அறிவிக்கப்பட்டார்.

இத்தேர்தலில் இலங்கையின் தென்பகுதியில் வாக்களிப்பதற்கு மக்கள் அச்சம் கொண்டனர். ஏனெனில் ஜே.வி.பி கிளர்ச்சிவாதிகள் மக்களின் தேசிய அடையாள அட்டைகளைப் பலவந்தமாகப் பறித்தன்ர். இத்தேர்தலில் 125 ஆசனங்களைப் பெற்று பிறேமதாச தலைமையிலான ஐ.தே.க வெற்றி பெற்றது.

ஜே.ஆரால் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையானது இத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 65 ஆசனங்களைப் பெற உதவியது. இத்தேர்தலில் வேறெந்தக் கட்சியினதும் உதவியின்றி தனியொரு கட்சியாக விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் ஐ.தே.க ஆட்சி அமைத்துக் கொண்டது.

வரும் ஆகஸ்ட் 17 இல் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மகிந்த ராஜபக்ச ஆகியோர் தமது கூட்டணிகளின் கீழ் போட்டியிடவுள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவின் யானைச சின்னமும் மகிந்தவின் வெற்றிலையும் வாக்காளர் மத்தியில் பெரும் பிரபலமடைந்துள்ளன.

ராஜபக்ச தனது தலைமையின் கீழ் அடுத்த நாடாளுமன்றை அமைக்க வேண்டும் எனக் கனவு காணுகிறார்.

முன்னாள் ஜனாதிபதி ஒருவர் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது இதுவே முதன்முறையாகும். இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் தோல்வியுற்ற ரணில் விக்கரம சிங்க தற்போது மூன்றாவது தடவையாக பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடுகிறார்.

நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் இத்தேர்தலில் மைத்திரிபால சிறிசேன எக்கட்சிக்கும் ஆதரவளிக்காது நடுநிலை வகிக்கிறார்.

நாட்டில் ஆங்காங்கே சில தேர்தல் வன்முறைகள் இடம் பெற்ற போதிலும் இதுவரையில் மிகவும் அமைதியான ஒரு சூழல் நிலவுகிறது.

தேர்தல் விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராகக் கடும் தண்டனைகள் வழங்கப்படும் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இம்முறை இலங்கையில் நேர்மையானதும் நீதியானதுமான தேர்தல் இடம்பெறுவதற்கான சாத்தியம் தென்படுகிறது.

ஆள்மாறாட்டம் மற்றும் மோசடி போன்றன தடைசெய்யப்பட்டுள்ளன.

போலி வாக்கு அட்டைகளைப் பயன்படுத்துவதற்கான கால அவகாசத்தை தேர்தல் ஆணையாளர் இம்முறை வழங்கவில்லை. இவ்வாறு பல்வேறு தேர்தல் சட்டங்கள் மேலும் இறுக்கமடைந்துள்ளன.

இம்முறை விக்கிரமசிங்கவும் ராஜபக்சவும் மிகவும் இறுக்கமான ஒரு தேர்தல் களத்தைச் சந்தித்துள்ளனர். அதாவது, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் இவ்விரு கட்சிகளில் எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையை அடையாது என நம்பப்படுகிறது.

ஜே.ஆரால் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறைமையின் கீழ் நாடாளுமன்றத் தேர்தல் இடம் பெறுவது இதுவே கடைசித் தேர்தலாக இருக்கலாம்.

இந்த முறைமையானது வேட்பாளருக்கான முக்கியத்துவத்தை அதன் கட்சியின் ஊடாக வழங்குகிறது.

மனிதனை விட கட்சியே முக்கியம் என்பதாலேயே முதலில் யானையையும் அதன் பின்னரே மனிதனையும் அங்கீகாரிக்க வேண்டும் என்பது ஜே.ஆரின் கோட்பாடாகும்.

ஆகவே இந்த வகையில் ஜே.ஆரால் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் இடம்பெற்ற முதலாவது தேர்தலில் பிறேமதாச அறுதிப் பெரும்பான்மை வெற்றியைப் பெற்றிருந்தார்.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் மகிந்த அல்லது ரணில் அறுதிப் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுக் கொள்வதன் மூலம், 25 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1989 இல் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பிறேமதாசாவின் சாதனையை ரணில் அல்லது மகிந்த ஆகிய இருவரில் எவராவது ஒருவர் முறித்துக் கொளவாரா என்பதே தற்போது முன்வைக்கப்படும் கேள்வியாகும்.

-நித்தியபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரம் இன்று தடைப்படும்

(மல்லாவி)

மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளின் நிமிர்த்தம் முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேசசெயலகபிரிவில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிவரை மின்சாரம்தடைப்படுமென இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இதற்கமைய செம்மலை, வற்றாப்பளை, முள்ளியவளை, கொக்கிளாய், நாயாறு தேக்கங்காடு, BGH முல்லைத்தீவு, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கடற்றொழில் கூட்டுறவு சங்கம், முல்லைத்தீவு விமானப்படை I மற்றும் II, முல்லைத்தீவு 59 ஆவது படைப் பிரிவு (14ESR01 மற்றும் 14ESR02), SFHQ வற்றாப்பளை மாவட்ட செயலகம், முல்லைத்தீவுநகரம் கூள்மென் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப் பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

### வன்னித் தொகுதியில்

# தபால் மூலம் வாக்களிக்க 6ஆயிரத்து 967பேர் தகுதி

(மல்லாவி)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ள 8ஆவது பாராளுமன்ற தேர்தலின்போது தபால் மூலம் வாக்களிப்பதற்கு நாடு தழுவிய ரீதியில் 5இலட்சத்து 66ஆயிரத்து 823 பேர் தகுதிபெற்றுள்ளதாக தேர்தல் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

தபால் மூலம் வாக்களிப்பதற்காக 6இலட்சத்து 28 ஆயிரத்து 925 பேர் விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களில் 62 ஆயிரத்து 102 விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிப்பட்டுள்ளன.

5இலட்சத்து 66ஆயிரத்து 823 பேர் இம்முறை இரு கட்டங்களாக தபால் மூலம் வாக்களிப்பதில் ஈடுபடவுள்ளனர்.

இதற்கமைய எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி பொலிஸ் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் நிலையங்களின் உத்தியோகத்தர்கள் உட்பட முப்படையினரும் மற்றும் பாடசாலை ஆசிரியர்களும் வாக்களிக்கவுள் ளனர்.

ஓகஸ்ட் மாதம் 5,6 ஆகிய திகதிகளில் தபால் மூலமாக வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ள ஏனைய தபால் வாக்காளர்கள் அனைவரும் வாக்களிப்பார்கள்.

இதேவேளை வன்னி தேர்தல் தொகுதியில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 6ஆயிரத்து 967பேர் தகுதிபெற்றுள்ளனர்.

இவர்களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 643 பேரும் மன்னார் மாவட்டத்தில் 2ஆயிரத்து 654பேரும் வவுனியா மாவட்டத்தில் 2ஆயிரத்து 670பேரும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இம்முறை கடந்த 2014 ஆம் ஆண்டு நடைமுறையிலுள்ள வாக்காளர் இடாப்பின் படியே தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

இதன்பிரகாரம் ஒரு கோடியே 50இலட்சத்து 44 ஆயிரத்து 490 பேர் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

இவர்கள் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நாடு முழுவதும் அமைக்கப்படவுள்ள 12ஆயிரத்து 21வாக்களிப்பு நிலையங்களின் ஊடாக வாக்களிக்க உள்ளனர்.

இம்முறை 6ஆயிரத்து 151வேட்பாளர்கள் களத்தில் இறங்கியுள்ளனர்.

196 உறுப்பினர்கள் வாக்கெடுப்பு மூலமும் 29பேர் கட்சிகளுக்கு கிடைக்கப் பெறும் வாக்குகளுக்கு அமைய தேசிய பட்டியல் மூலமாகத் தெரிவு செய்யப்படவுள்ளனர். ஒட்டுமொத்தமாக 225 நாடாளுமன்றஉறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். (2-15)




## ஒரு தொகுதி மீன் குஞ்சுகள் உடையார்கட்டு குளத்தினுள்

### அமைச்சர் டெனீஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்



உடையார்கட்டு குளத்துக்கு ஒரு தொகுதி மீன் குஞ்சுகள் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனஸ்வரனினால் விடப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட உடையார்கட்டு விசுவமடு நன்னீர் மீன்பிடியாளர் சங்கத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கோடு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் உடையார்கட்டு குளத்துக்கு ஒதுக்கப்பட்ட 60 ஆயிரம் நன்னீர் மீன் குஞ்சுகளில் ஒரு தொகுதி முதற்கட்டமாக குளத்தில் விடப்பட்டது.

இந் நன்னீர் மீன்பிடியாளர்களை ஊக்குவிக்கும் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சரின் திட்டத்திற்கு அமைவாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது,

இந் நிகழ்வில் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனஸ்வரன், அமைச்சின செயலாளர் எஸ்.சத்தியசீலன், கிராம அபிவிருத்தி திணைக்கள மாகாண பணிப்பாளர் ஜே. ஜே.சி. பெலிசியன், தேசிய நீர்வாழ் உயிரினங்கள் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் விரிவாக்கல் அதிகாரி செ.சலிவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் தனது உரையில்,

வட மாகாணத்தில் உள்ள அனைத்து நன்னீர் மீன்பிடி சமூகங்களையும் வாழ்வாதாரத்தில் உயர்த்தும் நோக்கோடு தாம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாகவும் எதிரகாலத்தில் நீங்கள் கேட்காமலே சங்கங்களுக்கான ஓய்வு மண்டபம், தளபாடங்கள் வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (2-9)

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வன்னிக்கு 31ம் திகதி விஜயம்

(மல்லாவி)

ஐக்கிய தேசிய கட்சி தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வன்னி மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு,மன்னார்,வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள மக்களை சந்திப்பதற்காகவுள்ளார்.

இதன்போது வன்னி வாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கைத்தொழில் வலயம் ஒன்றை அமைப்பதற்கான செய்தியை தெரியப்படுத்த வுள்ளார்.

அத்துடன் இக்கைத்தொழில் வலயம் அமைக்கப்படுகின்றபோது 31ஆயிரம் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அத்தோடு பொதுமக்களை சந்திக்கவுள்ள பிரதமர் தற்போது நடைபெற்று வரும் நல்லாட்சி தொடர்பான குறைநிறைகளையும் கேட்டறிந்து கொள்ளவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## வயல் விழா வாரம்

கிளிநொச்சி இரணைமடு ச்சந்தியில் அமைந்துள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தில் வயல் விழா வாரம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்திநிலைய மேலதிக பணிப்பாளர் (ஆராய்ச்சி) கலாநிதி சி.ஜே.அரசகேசரி அறிவித்துள்ளார்.

வயல் விழா எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4மணிவரை நடைபெறும்.

முதல்நாள் விழாவின் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். இதில் அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், அரச நிர்வாகம்சார் திணைக்கள உத்தியோகத்தர்கள், கமத்தொழில் சார் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் மற்றும் கமக்கார அமைப்புக்கள் ஆகியோர் கலந்து கொள்வர்.

இரண்டாவது நாள் விழாவில் கல்விசார் திணைக்களங்கள், பல் கலைக்கழகங்கள் மற்றும் சகல தரப்பு மாணவர்களும் கலந்து கொள்வார்கள்.

காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 4மணி வரை நடைபெறும் விழாவில் பயிராக்கவியல், பயிர் அபிவிருத்தி, மண்ணியல் ஆய்வுகள், பூச்சியியல் ஆய்வுகள், நோயியல் ஆய்வுகள், சேதனப்பயிர்ச் செய்கை. சேதனப் பசளைகளும் சேதன கிருமிநாசினிகளும் மற்றும் பழப் பயிர்ச் செய்கை போன்றவற்றை பார்வையிடலாம் என அவர் தெரிவித்துள்ளார். (2)

## முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கு தமிழ் பொலிஸாரை நியமியுங்கள்

### பொதுமக்கள் கோரிக்கை

(முள்ளியவளை)

முள்ளியவளை பொலிஸ் நிலையத்தின் சிறு குற்றப் பிரிவில் கடமையாற்றுவதற்கு தமிழ் பேசும் பொலிஸ் அதிகாரி நியமிக்கப்படாமையால் தமது முறைப்பாடுகளை பதிவு செய்ய செல்லும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

குறித்த பிரிவில் காணிப் பிரச்சினைகள், குடும்பப்பிணக் குகள், கொடுக்கல்- வாங்கல் பிரச்சினைகள் போன்ற சிறு குற்றங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று தீர்க்கப்படுவது வழமையானதொன்றாகும்.

இவ்வாறானதொரு நிலையில் மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் புரிந்து கொண்டு முறைப்பாட்டை பதிவு செய்வதற்கு தமிழ்பேசும் பொலிஸ் அதிகாரி நியமிக்கப்படவில்லை.

இதனால் தாம் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதில் இடர்பாடுகளை எதிர்கொண்டு தீர்வு கிடைக்காமல் வீடு திரும்புவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே குறித்த பிரிவில் மொழி பிரச்சினை நிலவி வருவதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொண்டு தமிழ் பேசும் பொலிஸ் அதிகாரியை விரைவாக நியமிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-302)

## நெல் மூடைகளை உரிய விலைகளில் கொள்வனவு செய்ய நடவடிக்கை

### கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில தற்போது அறுவடை செய்யப்பட்டு வரும் சிறுபோக நெல்லை உரிய விலைகளில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவிததார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இம்முறை சிறுபோக செய்கையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 14 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு, அதன் அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அறுவடை செய்யும் நெல்லை உரிய விலையில் விற்பனை செய்வதில் விவசாயிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அறுவடை செய்கின்ற சிவப்பு நெல்லு ஒரு மூடை 2 ஆயிரம் ரூபாவிற்கு குறைவாகவும் சம்பா போன்ற நெல்லினங்கள் 2 ஆயிரத்து 500 ரூபாவிற்கும் தற்போது கொள்வனவு செய்யப்படுகின்றது. இதனால் செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் போதியளவு வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

தற்போது அறுவடை செய்கின்ற நெல்லினை கொள்வனவு செய்வதற்கு நெல் சந்தைப்படுத்தும் சபையினூடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஓகஸ்ட் மாதம முதலாம் திகதி முதல் நெல் கொளவனவு செய்யப்படவுள்ளது.

முழங்காவில், வட்டக்கச்சி, கண்டாவளை ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள நெல் களஞ்சியங்கள் திறந்து வைக்கப்பட்டு நெல் கொள்வனவு அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைகளில் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

அதாவது சம்பா ஒரு கிலோகிராம் 50 ரூபாவிற்கும் சிவப்பு நாடு ஒரு கிலோகிராம் 48 ரூபாவிற்கும் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் பசில் தேர்தல் பிரசாரம்



திவிநெகும திணைக்களத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலையான முன்னாள் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மீண்டும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்.

திருகோணமலை, கந்தளாய் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி மக்கள் சந்திப்பில் பசில் ராஜபக்ஷ கலந்துகொண்டுள்ளார்.

இதன்போது இடை நிறுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் அனைத்தும் எதிர்வரும் 17ஆம் திகதியின் பின்னர் மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன் என அவர் தெரிவித்தார். (இ-7)

## ஆற்றுகைப் போட்டி

(கரணவாய்)

யாழ்.மாவட்ட கலை,கலாசாரப் பேரவையின் ஆற்றுகைப் போட்டி ஓகஸ்ட் மாத இறுதி வாரத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் கரவெட்டி பிரதேச செயலக கலை,கலாசார பேரவையுடன் தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டி கலை,கலாசார பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-60)

## சிவில் பாதுகாப்பு கூட்டம்

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் மாதாந்த சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப3.30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் கோப்பாய், அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

வழமை போல் கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி பிரதேச செயலர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (இ-5-134)

## பொறுப்பதிகாரியாக ஆர்.டி.ஏ.பியந்த



(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக பொலிஸ் பரிசோதகர் ஆர்.பி.ஏ. பியந்த நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை பொலிஸ் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய பொலிஸ் பரிசோதகர் சுமித் ஏ. பெரேரா இலஞ்சம் தொடர்பான குற்றச்சாட்டில் மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் மாற்றப்பட்டார்.

இதனையடுத்துதற்காலிகபொலிஸ் பொறுப்பதிகாரியாக காங்கேசன்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி டி.எம்.ஐ.திஸநயக்க கடமையில் இருந்தார்.

தற்போது கம்பஹா பொலிஸ் நிலையத்தில் போக்குவரத்து அதிகாரியாக கடமையாற்றிய ஆர்.டி.ஏ. பியந்த நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5-60)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் நிறைவேற்று சேவைத் தொகுதியில் திணைக்களத்துடனான தரம் IIIஇன் உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணி உபயோகம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சைக்கு அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டு பல்கலைக்கழகமொன்றில் புவியியல் அல்லது விவசாயம் தொடர்பான விசேட பட்டப்படிப்பு அல்லது புவியியல் பாடத்துடன் கூடிய சாதாரண பட்டம் பெற்றிருத்தல்.

விண்ணப்பங்கள் பணிப்பாளர் நாயகம்,காணி உபயோகத் திட்டமிடல் திணைக்களம், இலக்கம் 31 பதிபா மாவத்தை, நாரஹேன்பிட்டி, கொழும்பு-05 எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

இப் பரீட்சை தொடர்பான மேலதிக விபரங்களை நேற்று முன்தினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-3-7)

---

அரசாங்க சேவைகள் ஆணைக்குழு துறைமுகங்கள், கப்பற்றுறை அமைச்சு வணிக கப்பற்றுறை செயலகத்தில் துறைமுக அரச கட்டுப்பாட்டாளர்(பொறியியலாளர்), துறைமுக அரச கட்டுப்பாட்டாளர் (கப்பல் தளம்)அரச கப்பல்கள் அளவைய்ாளர், அரச கப்பல்கள் அளவையாளர் (கப்பல் தளம்), பரீட்சை பரிசோதகர் (பொறியியல்), பரீட்சை பரிசோதகர் (கப்பல் தளம்) போன்ற நிறைவேற்று சேவை வகுதியின் 1ஆம் தரத்தைச் சேர்ந்த பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் இலங்கை, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, கனடா,சீனா , இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, அயர்லாந்து ஆகிய நாடுகளில் அல்லது இயைபுள்ள சான்றிதழை ஏற்றுக்கொள்வது சம்பந்தமாக இலங்கையுடன் இருதரப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ள நாடொன்றில் அரசாங்க கப்பற்றுறை நிருவாக நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட பிரதான பொறியியலாளர் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்றுக்கு 30 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் வணிக கப்பற்றுறை பணிப்பாளர் அதிபதி, வணிகக் கப்பற்றுறை செயலகம், இலக்கம் 43/ 89, பிறிஸ்ரல் கட்டடம், முதலாம் மாடி, யோர்க் வீதி, கொழும்பு 01 என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படுதல் வேண்டும்.

இப்பரீட்சை தொடர்பான மேலதிக விபரங்களை நேற்று முந்தினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-3-7)




- 811 - பைசண்டை பேரரசன் முதலாம் நிக்கபோரஸ் பல்கேரியாவின் பிளிஸ்கா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் கொல்லப்பட்டான்.
- 1139 - முதலாம் அபொன்சோ போர்த்துக்கல்லின் முதலாவது மன்னனாக முடிசூடி லெயோன் பேரரசில் இருந்து விடுதலையை அறிவித்தான்.
- 1788 - நியூயோர்க் ஐக்கிய அமெரிக்காவின் 11 ஆவது மாநிலமாக இணைந்தது.
- 1803 - உலகின் முதலாவது பயணிகள் தொடருந்து சேவை தெற்கு லண்டனில் ஆரம்பமாகியது.
- 1847 - லைபீரியா ஐக்கிய அமெரிக்காவிடமிருந்து விடுதலை பெற்றது.
- 1848 - மாத்தளை கிளர்ச்சி: இலங்கையில் பிரித்தானியருக்கு எதிராக வீரபுரன் அப்பு தலைமையில் கிளர்ச்சி வெடித்தது. வீரபுரன் அப்பு கைது செய்யப்பட்டு ஆகஸ்ட் 8 இல் தூக்கிலிடப்பட்டான்.
- 1891 - டெஹீட்டி பிரான்சுடன் இணைந்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் இராணுவம் உக்ரைனின் லுவிவ் நகரை நாசிகளிடம் இருந்து கைப்பற்றினர். அந்நகரில் இருந்த 160,000 யூதர்களில் 300 பேர் மட்டுமே எஞ்சியிருந்தனர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியின் முதலாவது வி-2 ஏவுகணை பிரித்தானியாவைத் தாக்கியது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் போட்ஸ்டாம் என்ற இடத்தில் சோவியத் ஒன்றியம், அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றிற்கிடையில் போட்ஸ்டாம் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1945 - ஹிரோசிமாவில் போடப்படவிருந்த அணுகுண்டைத் தாங்கிய வண்ணம் இண்டியானா பொலிஸ் என்ற அமெரிக்கக் கடற்படைக் கப்பல் டினியான் தீவை அடைந்தது.
- 1952 - எகிப்தில் நிகழ்ந்த இராணுவப் புரட்சியில் மன்னர் ஃபாரூக் பதவியிலிருந்து அகற்றப்பட்டு அவரது ஆறு மாதங்கள் அகவையுடைய மகன் இரண்டாம் புவாட் மன்னன் ஆக்கப்பட்டான்.
- 1953 - கியூபா பூரட்சி: கியூபாவில் மொன்காடா இராணுவத் தளம் மீது பிடெல் காஸ்ட்ரோ தலைமையில் புரட்சியாளர்கள் மேற்கொண்ட தாக்குதல் முறியடிக்கப்பட்டது.
- 1956 - அஸ்வான் அணைக்கட்டுக்கு உலக வங்கி நிதி உதவி வழங்க மறுத்ததை அடுத்து சூயஸ் கால்வாயை எகிப்திய அதிபர் கமால் அப்துல் நாசர் அரசுடமை ஆக்கினார்.
- 1957 - குவாத்தமாலாவின் சர்வாதிகாரி கார்லொஸ் அர்மாஸ் கொல்லப்பட்டார்.
- 1957 - இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுக்கும் இடையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- 1958 - எக்ஸ்புளோரர் 4 ஏவப்பட்டது.
- 1965 - மாலைதீவுகள் ஐக்கிய இராச்சியத்திடமிருந்து முழுமையாக விடுதலை பெற்றது.
- 1971 - அப்பல்லோ 15 விண்கலம் ஏவப்பட்டது.
- 1974 - ஏழாண்டுகள் இராணுவ ஆட்சியின் பின்னர் கிரேக்கத்தில் மக்களாட்சி ஏற்பட்டது.
- 1994 - எஸ்தோனியாவில் இருந்து ரஷ்யப் படைகளை வெளியேற்ற அதிபர் பொரிஸ் யெல்ட்சின் முடிவெடுத்தார்.
- 2005 - டிஸ்கவரி விண்ணோடம் ஏவப்பட்டது.

### பிறப்புகள்

- 1791 - பிரான்ஸ் மொசார்ட், இசையமைப்பாளர் (இ. 1844)
- 1856 - ஜோர்ஜ் பெர்னாட் ஷா, எழுத்தாளர் (இ. 1950)
- 1933 - எட்மண்ட் ஃவெல்ப்ஸ், பொருளியல் அறிஞர்
- 1933 - மு. கு. ஜகந்நாதராஜா, பன்மொழிப் புலவர் (இ. 2008)
- 1939 - ஜோன் ஹவார்ட், ஆஸ்திரேலியாவின் 25 ஆவது பிரதமர்
- 1971 - மேரி ஆன் மோகன்ராஜ், எழுத்தாளர்

### இறப்புகள்

- 1857 - ஓராசியோ பெட்டாச்சினி, யாழ்ப்பாணம் ஆயர்

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 300 | 350 | 200 |
| தக்காளி | 100 | 120 | 140 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 100 | 100 | 100 | 100 | 80 |
| கரட் | 100 | 120 | 200 | 250 | 120 |
| பூசணி | 40 | 30 | 60 | 40 | 30 |
| புடோல் | 40 | 40 | 60 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 120 | 120 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 80 | 100 |
| பாகற்காய் | 200 | 100 | 120 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 120 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 |
| பயற்றங்காய் | 100 | 120 | 60 | 120 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 160 | 80 |
| பீற்றூட் | 100 | 80 | 100 | 100 | 60 |
| கறிமிளகாய் | 200 | 150 | 200 | 140 | 140 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 120 | 120 | 150 |
| போஞ்சி | 200 | 150 | 200 | 200 | 140 |
| கத்தரிதம்புள்ள | 40 | 80 | 80 | — | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 30 | 15 |
| தேசிக்காய் | 40 | 60 | 100 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-40 | 40 | 30-40 | 60 | 45 |
| இராசவள்ளி | 200 | 100 | — | — | 120 |
| வெங்காயப்பூ | 100 | 150 | 240 | 150 | 180 |
| முள்ளங்கி | 40 | 30 | 80 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 10 | 25 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயக்கமின்றி நம்மைத் தயாராக்கிக்கொண்டு காரியத்தில் இறங்க முற்பட்டால் எவ்வித இடையூறும் இன்றி எல்லாம் வெற்றியாகும். – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஓர் அவசர மடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அன்பு வணக்கம்.

இதற்கு முன்னரும் பல தடவைகள் கடிதம் எழுதி இருந்தோம். எதுவும் பலன் தந்ததாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சைவப் பெருவள்ளல் சேர்.பொன்.இராமநாதனின் கொடையால் கிடைத்த பெரும் சொத்து. எனினும் அது பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்களோ தெரியாது.

இருந்தும் சேர்.பொன்.இராமநாதனின் உருவச்சிலை யாழ்.பல்கலைக்கழக தலைமைக் கட்டிடத்திற்கு முன்பாக நிறுவப்பட்டிருப்பதைப் பார்த்தேனும் யாழ்.பல்கலைக்கழகத்திற்கும் சேர்.பொன்.இராமநாதனுக்கும் உள்ள தொடர்பை அறிந்திருப்பீர்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் தமிழர்களின் உரிமை சார் விடயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

விடுதலைப் போராட்டம் தோல்வியில் முடிந்த பின்னரும் போரில் உயிரிழந்தவர்களை நினைவு கூருதலை நீங்கள் செய்துள்ளீர்கள் என்பது ஆறுதல் தரும் விடயம்.

மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் நீங்கள், நினைவேந்தலைச் செய்ய முற்பட்டபோதெல்லாம் படையினர் பல்கலைக்கழக சூழலில் குவிக்கப்பட்டு பயப்பீதியை ஏற்படுத்தியமை தெரிந்ததே.

இவ்வாறாக தமிழர்களின் உரிமைசார் விடயத்தில் காலாகாலமாகத் தொடரும் பல்கலைக்கழக மாணவர்களினதும் பல்கலைக்கழக சமூகத்தினரினதும் பங்களிப்பு மறக்க முடியாதவை. நிலைமை இதுவாக இருக்கையில், இப்போது தென்னிலங்கை மாணவர்களும் யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை மேற்கொள்ள வந்துள்ளனர்.

நல்ல விடயம். பல்கலைக்கழகம் என்றால் பல்லினம் சார்ந்த; பலமொழி பேசுகின்ற மாணவர்கள் கற்பதும் கட்டாயமானதாகும். அப்போதுதான் பல்கலைக்கழகப் படிப்பு என்பது முழுமை பெறும்.

எனினும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்கின்ற தமிழ் மாணவர்களை நினைக்கும் போது, சில இடங்களில் கவலை கொள்ள வேண்டி உள்ளது.

கடந்த ஒரு சில வருடங்களுக்கு முன் வந்த தென்னிலங்கை மாணவர்கள் பல்கலைக்கழகம் முழுவதிலும் பௌத்த மதம் சார்ந்த அடையாளங்களை நிலைப்படுத்துவதில் மிகத் தீவிரமாக உள்ளனர்.

அதுமட்டுமன்றி சிங்கள கலாசாரத்தை தமிழ் மண்ணில் அமுல்படுத்தவும் முற்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மாணவன் சக மாணவியை துவிச்சக்கர வண்டியில் ஏற்றிச் செல்வது, மாணவனும் மாணவியும் பரஸ்பரம் தோளில் கைபோட்டுச் செல்வது சர்வ சாதாரணமாக நடைபெறுகின்றன.

இவற்றைப் பார்க்கும் எங்கள் பாடசாலை மாணவர்கள் இதனை அங்கீகரிக்கின்ற மனநிலைக்கு ஆளாகின்றபோது, எங்கள் பண்பாட்டுக் கோலம் மிக மோசமாகும் என்பதை நீங்கள் உணரவில்லை என்றால், உங்களால் அனுஷ்டிக்கப்படும் நினைவேந்தல் என்பது அர்த்தமற்றதாகி விடும்.

எனவே தென்பகுதி மாணவர்கள் உங்கள் சக மாணவர்கள். அவர்களுக்கு யாழ்ப்பாணக் கலாசாரம் பற்றி எடுத்துக் கூறுங்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒரு சைவப் பாரம்பரியம் கொண்ட பல்கலைக்கழகம் என்பதை ஆணித்தரமாகக் கூறுங்கள். நிச்சயம் அந்த மாணவர்கள் கேட்பார்கள்.

அதேநேரம் அவர்களிடமிருந்து நல்லதைக் கற்றுக்கொள்ளுங்கள். இதனையே உங்களிடமிருந்து தமிழினம் எதிர்பார்க்கிறது. ஆனால் நீங்களோ புதுமுக மாணவர்களின் தலையில் கழிவு தண்ணீரை ஊற்றுகிறீர்கள். இது எந்த வகையில் நியாயமாகும்?

எங்கள் பாடசாலை மாணவர்களை மதுவும் போதைவஸ்தும் பாழாக்கப் பந்தயம் கட்டி நிற்கும்வேளையில், பல்கலைக்கழக மாணவர்களாகிய நீங்கள் செய்வது சரியா? நீங்களல்லவா உங்கள் இளம் சமூகத்தைக் பாதுகாக்க வேண்டும். அந்தப் பொறுப்பை உணர்ந்து நடவுங்கள்.

# நாட்டை முன்னேற்றமடைய செய்ய மைத்திரியுடன் இருக்க வேண்டியவர் ரணிலே

## தூய்மையான தலைமை என்கிறார் அர்ஜுன

தூய்மையான தலைவர்களுடன் மாத்திரம் அரசியல் செய்யக்கூடிய சம்பிரதாயத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று துறைமுக மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். தேசிய தொழிலாளர் சங்கத்தின் துறைமுக கிளையின் பிரதிநிதிகளை சந்தித்த போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எனக்கு கட்சியைப் பற்றி சிந்திக்கும் அரசியலை விட நாட்டைப் பற்றி சிந்திக்கும் அரசியலே முக்கியம். அரசியல் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது கட்சியை விட நாட்டைப் பற்றியே சிந்திக்க வேண்டும். ஜனவரி 8ஆம் திகதி நாங்கள் பாரிய வெற்றியைப் பெற்றுக் கொண்டோம். அந்த வெற்றியுடன் முன்னோக்கி செல்வதற்கான காலம் வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்னும் 05 ஆண்டுகளுக்கு நாட்டின் தலைவராக இருப்பார்.

அவருடன் சேர்ந்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல மிகவும் சிறந்த தகுதியான நபர் ரணில் விக்கிரமசிங்கவே. எனவே மக்களின் தெரிவு ரணிலாகவே இருக்கும்.

மேலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நாடாளுமன்றத்திலும் நாட்டிலும் ஜனநாயகத்தை ஏற்படுத்தியவர்கள் என அர்ஜுன ரணதுங்க குறிப்பிட்டார். (செ-12)

# தேர்தலில் புத்திஜீவிகள் மகிந்தவுக்கே ஆதரவு

## பந்துல குணவர்த்தன கருத்து

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிலைச் சின்னத்திற்கு வாக்களித்து மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குவது என புத்திஜீவிகள் ஏற்கெனவே இரகசியமாகப் பேசி தீர்மானித்து விட்டார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய அரசில் நாட்டின் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. ரூபாயின் பெறுமதி குறைவடைந்து, டொலருக்கான ரூபாயின் பெறுமதி அதிகரித்து வருகின்றது. அதுமட்டுமின்றி கடனுக்கான வட்டி வீதம் அதிகரித்துள்ளது.

இதனால் வீடமைப்பு கடன் பெற்றவர்கள், அரச ஊழியர்கள் ஆகியோர் பெரும் இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அதுமட்டுமன்றி அண்மையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நிதியமைச்சர், இன்னும் ஒரு வாரத்திற்குள் டொலருக்கான பெறுமதி 130 ரூபாயாக்கப்படும் என உறுதியளித்தார். ஆனால் தற்போது 137 ரூபாயாக இருக்கின்றது.

நிதியமைச்சரின் இவ்வாறான பொய்யான வாக்குறுதி தொடர்பில் ஊடகவியலாளர்களும், பொதுமக்களும் தட்டிக் கேட்க வேண்டும். இவ்வாறான நிலையில், நாட்டின் நிதியமைச்சர், மத்திய வங்கி ஆளுநர் என யார் மீதும் நம்பிக்கையற்ற நிலை ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி நாட்டின் மீதான நம்பிக்கையும் இழக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசு தங்களது செயற்பாடுகளின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது என்பதை நிரூபித்துள்ளனர்.

இந்நிலையில், தீர்மானங்கள் முடிவுகளை எட்டும் கணக்காய்வாளர்கள், நிதி குறித்த திட்டமிடுநர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பங்குச்சந்தை முதலீட்டாளர்கள் உள்ளிட்ட புத்திஜீவிகள் இரகசியமாக கலந்துரையாடி வெற்றிலைச் சின்னத்திற்கு வாக்களிப்பது என ஏற்கெனவே தீர்மானித்து விட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-12)

# முன்னாள் மத்திய வங்கி ஆளுநருக்கு எதிரான உயர்மட்ட விசாரணை

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலின் நிர்வாகத்தின் போது ஏற்பட்ட முறைகேடுகள் தொடர்பில் உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரின் நிர்வாகத்தின் போது நடந்த முறைகேடான கொடுக்கல், வாங்கல்கள் மற்றும் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப்போட்டியை இலங்கையில் நடத்த மேற்கொண்ட நடவடிக்கை உட்பட பல்வேறு முறைகேடுகள் தொடர்பில் உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த கொடுக்கல் வாங்கல்களை மேலோட்டமாக ஆராய்ந்த போது அதில் பாரிய முறைகேடுகள் இருப்பதாக தெரிய வந்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் பொறுப்புக்கு அப்பால் சென்று இந்த கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஹையாத் கொடுக்கல் வாங்கலில் இலங்கை மத்திய வங்கி 5 பில்லியன் ரூபாயை முதலீடு செய்தது, அது தற்போது இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய நிறுவனம் ஒன்றுக்கும் இடையில் இழுபறியாக மாறியுள்ளது.

முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநரும், மத்திய வங்கியின் நிதிச் சபையும் முதலீட்டு பரிந்துரைகளை கவனத்தில் கொள்ளாது, ஊழியர் சேமலாப நிதியத்திற்குரிய பணத்தை இந்த முதலீட்டுக்காக பயன்படுத்தியுள்ளனர்.

இதனைத் தவிர பொது நலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியை இலங்கையில் நடத்தும் நோக்கில் பல போலி நிறுவனங்களை ஏற்படுத்தியுள்ளனர். பணத்தை திரட்டி செலவிடும் நோக்கில் மட்டுமே இந்த நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையில் மேற்படி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (செ-11)

# செயமலர்வு, கருத்தரங்குக்கு 29ஆம் திகதியிலிருந்து தடை

எதிர்வரும் 29ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி வரை மேலதிக வகுப்புக்கள் செயலமர்வு, கருத்தரங்கு மாதிரி வினாத்தாள் தயாரித்தல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையிலே இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த தடையை மீறுபவர்களுக்கு எதிராக தண்டனை வழங்க முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு.எம்.என்.ஜே புஸ்பகுமார தெரிவித்துள்ளார். இதனிடையே கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## இணையம் மூலமான வேலைவாய்ப்பு-மகிந்த

இளைஞர்களை புதிய உலகத்துடன் இணைந்து கொள்ள புதிய வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க போவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இணையத்தளம் ஊடாக இளைய தலைமுறையினருக்கு புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பலாங்கொட பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வெளிநாடு சென்று கல்வி கற்க விரும்பும் பிள்ளைகளுக்கு வெளிநாடுகளுக்கு சென்று கல்வி கற்க தேவையான பணம் குறைந்த வட்டியில் அவர்களுக்கு வழங்கப்படும் எனவும் மகிந்தராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.(செ-12)

# தபால் மூல வாக்களிப்புக்கு 566, 823 பேர் தகுதி

## 62,102 பேரின் விண்ணப்பம் நிராகரிப்பு

(கொழும்பு)

அடுத்த மாதம் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 566,823 பேர் தகுதி பெற்றுள்ளனர். நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக 628,925 பேர் விண்ணப்பித்திருந்த நிலையில் 566,823 பேர் தகுதிபெற்றுள்ளனரென பிரதி தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்தார்.

அந்தவகையில் அதில் 62,102 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதேவேளை தபால் மூலம் வாக்களிப்பதற்கான வாக்குச்சீட்டுக்கள் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகங்களிலிருந்து தபால் நிலையங்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன. அனைத்து தெரிவத்தாட்சி அலுவலகங்களிலும் தற்காலிக தபால் நிலையங்களை அமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டிருப்பதாகவும் மொஹமட் தெரிவித்தார்.

இம் முறை இரண்டு கட்டங்களாக தபால்மூல வாக்குப்பதிவுகள் இடம்பெறவுள்ளன. ஓகஸ்ட் மாதம் 03ஆம் திகதி பொலிஸ் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கும், அரச பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கும் தபால் மூலம் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதுதவிர ஓகஸ்ட் மாதம் 05 மற்றும் 06ஆம் திகதிகளில் தகுதி பெற்றுள்ள மற்றைய வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய போட்டிகள்



வவுனியா கல்மடு சரஸ்வதி விளையாட்டுக்கழகம் 5ஆவது தடவையாக நடத்தும் வடக்கு,கிழக்கு மாகாணங்களின் வீரர்கள் பங்குபற்றும் கரப்பந்தாட்ட தொடர் இன்று ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அணிக்கு 4வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலாக இப்போட்டி நடைபெறும்.

இதைத்தவிர அணிக்கு 7வீரர்கள் கொண்ட கயிறு முத்தல் போட்டியும் 80 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியும் மற்றும் கிராமிய விளையாட்டுக்களும் குறித்த தினத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

---

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புதுமுக மாணவ பீடங்களுக்கிடையிலான வருடாந்த தடகளப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி எஸ்.பாலகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தடகள பெண்கள் அணியின் தலைவியும் யாழ்.போதனா வைத்திய சாலை பதில் கதிரியக்க வியல் துறை நிபுணருமான வைத்திய கலாநிதி கலைமகள் அறிவுச்செல்வனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (கு)

---

தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகம் தனது 42வது ஆண்டு நிறைவை முன்னிட்டு விண்ணப்பித்த கழகங்களுக்கிடையிலான 5 பந்துப்பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட தொடர் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றவுள்ள விளையாட்டுக் கழகங்கள் உடனடியாக பதிவு செய்யுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (கு)

---

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி மேற்கு சென்மின் விளையாட்டுக் கழகம் இன்று ஞாயிற்றுக்கிழமை விளையாட்டுத்திடலில் போட்டிகளை நடத்த திட்டமிட்டுள்ளன.

அதன்படி இன்றைய தினம் வாகனம் இழுத்தல், கடலில் படகு இழுத்தல் குத்துச் சண்டை, மல்யுத்தம், கயிறுமுத்தல் போன்ற பல்வேறு போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

---

ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் (Insurance) நடத்தும் வடமாகாண நிதி நிறுவன அதிகாரிகளுக்கிடையிலான சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று காலை 9 மணிக்கு கனகரத் தினம் மத்திய மகா வித்தி யாலயத்தில் நடைபெற வுள்ளது. (கு)

---

யாழ்.உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் புத்தூர்ஸ்ரீவிக்னேஸ்வராவிளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.45 மணிக்கு இடம்பெறவுள்ள போட்டியில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நெடிய காடு யூத் விளையாட்டுக் கழகமும் மாலை 4.45 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆதிசக்தி விளை யாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (கு)

---

அரியாலை சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று காலை 6 மணிக்கு 10 மைல் வீதி ஓட்டமும் காலை 7மணிக்கு பெண்களுக்கான 10மைல் சைக்கிள் ஓட்டமும் காலை 7.30 மணிக்கு ஆண்களுக்கான 50 மைல் சைக்கிள் ஓட்டமும் நடைபெறவுள்ளது. (கு)

# சிறப்பாக செயற்படுவது உடற்தகுதியை சார்ந்தது

## சாய்னா



இந்திய பெண்கள் பட்மிண்டனில் முன்னணி வீராங்கனையாக திகழ்பவர் சாய்னா நேவால்.

இவர் அடுத்த மாதம் சீனாவில் நடைபெற இருக்கும் உலக சம்பியன்ஷிப் போட்டியில் பதக்கம் வெல்லும் எண்ணத்தில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

ஆனால், உலக சம்பியன்ஷிப் போட்டியில் சிறப்பாக செயற்படுவது தனது உடற்தகுதியைச் சார்ந்தது என்று கூறினார்.

இப்போட்டி குறித்து அவர் மேலும் கூறும்போது, என்னுடைய ஆய்வின்படி எனது செயற்றிறன் சிறந்ததாக அமைய வேண்டும்.

மேலும், இது முற்றிலும் என்னுடைய உடற்திறனைப் பொருத்தது.

2015-16ஆம் ஆண்டில் உள்ள அனைத்து தொடர்களிலும் நான் விளை யாட திட்டமிட்டுள்ளேன். குறிப்பாக, 2015ஆம் ஆண்டு முடிவதற்குள் உலக கோப்பை, ஜப்பான் ஓபன், சீன ஓபன், டென்மார்க் ஓபன் பிரான்ஸ் மற்றும் ஹொங்கொங் ஓபனில் விளையாட உள்ளேன்.

நான் பெங்களூரில் உள்ள அகடமியில், முழு கவனத்தையும் என்னுடைய விளையாட்டின் மீது வைத்து பயிற்சியில் ஈடுபட்டு வருகிறேன். நான் சிறந்து விளங்கு வதற்கு என்னுடைய பயிற்சியாளர் ஊக்கப்படுத்தி வருகிறார்.

ஒரு பட்மிண்டன் வீராங்கனைக்குரிய திறன் மற்றும் முன்னேற்றத்தை பெறுவதற்கான அனைத்து வசதிகளும் உதவிகளும் கிடைத்து வருவதால், எனது பயிற்சி நல்ல நிலையில் சென்று கொண்டிருக்கிறது. என்றார். (கு)

# பொம்மர்ஸ், யங்கம்பன்ஸ் வி.கழகம் அரையிறுதிச் சுற்றுக்குத் தெரிவு









உதைபந்தாட்ட லீக்போட்டியில் யங்கம்பன்ஸ், பொம்மர்ஸ் விளையாட்டு கழகம் அரையிறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக் கழகத்தின் 25ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படுகின்ற யாழ்.மாவட்ட ரீதியான 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட லீக் போட்டியில் நேற்று முனதினம் வெள்ளிக்கிழமை 4.30 மணிக்கு நடைபெற்ற முதலாவது காலிறுதிப் போட்டியில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

மிகவும் அபாரமாக விளையாடிய கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி சார்பாக ரதன் 4 கோலினையும் பிரகாஸ் 1 கோலினையும் தர்சன் 1 கோலினையும் போட்டனர்.

இச் சுற்றுப் போட்டியின் லீக் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் அணி பங்குபற்றிய 3 போட்டிகளிலும் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அரையிறுதிப் போட்டியில் யங்கம்பன்ஸ் அணி விண்மீன் அணியினை எதிர்த்து மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நடைபெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று 4 புள்ளிகளை பெற்றதோடு அரையிறுதிச் சுற்றுக்கு நுழைந்தது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திர...

அர்ஜுன ரணதுங்க, எம்.கே.டி.எஸ். குணவர்தன மற்றும் எஸ்.பி. நாவீன்ன ஆகியோர் இவ்வாறு நீக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த நடவடிக்கைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் இவர்களை மத்திய செயற்குழுவிலிருந்து நீக்குவதற்கு கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

## மகிந்தவுக்கு...

சார தேரர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தனித்து போட்டியிட்டிருந்தால் பொது பல சேனா குறைந்தபட்சம் இருபது லட்சம் வாக்குகளைப் பெற்றுக்கொண்டிருக்கும் ஆனால் நாம் துரதிஷ்டவசமாக மகிந்த தரப்புக்கு தேர்தலில் ஆதரவளித்தோம்,

ஆனால் மகிந்த ராஜபக்ஷ தான் மன்னர் என்ற மனநிலையில் செயற்பட்டார். அவருக்கு ஆலோசனை வழங்கியவர்களின் பிழையான வழியைக் தேர்ந்தெடுத்ததனால் தோல்வியை தழுவினார் என பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

மேலும் சீதாவாக்கையை ஆட்சி செய்த மன்னர் ராஜசிங்கனே முதலில் மேற்கத்தைய சக்திகளை தோற்கடித்த பெருமைக்குரியவர், பௌத்த மதத்தை கைவிட்டதனை தொடர்ந்து மக்களினால் அவர் தோற்கடிக்கப்பட்டார் என கூறிய ஞானசார தேரர்,

இதே நிலைமையே மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தற்போதைய தலைவர்களுக்கும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (செ-11)

## தேசிய பிரச்சினை...

உள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் வரலாற்றில் அவரை ஒரு தோல்வியின் தலைவராகவே நாம் கருதுகின்றோம்.

கடந்த காலத்தில் 25 தடவைகள் அவர் தேர்தல்களில் தோல்வியை தழுவியுள்ளார். இரண்டு தடவைகள் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்டு தோல்விகண்டவர், இரண்டு தடவைகள் பிரதமருக்கான போட்டியிலும் தோல்வி கண்டவர். ஆகவே அவரால் போட்டியிட்டு வெற்றிபெற முடியாது. மக்கள் இது வரையில் ரணிலை தலைவராக ஏற்றுக் கொள்ளவில்லை. அவரை நம்பி மக்கள் வாக்களிக்க தயாராகவுமில்லை.

இப்போது கிடைத்திருக்கும் பிரதமர் அதிகாரமும் ஒரு விதத்தில் முகமூடி அதிகாரமாகவே குறிப்பிடப்பட வேண்டும். அவருக்கு கிடைத்துள்ள அதிகாரங்கள் அனைத்துமே மக்கள் வரத்துக்கு முரணானதாகும். அதே போல் இன்றும் நாட்டில் அசாதாரண செயற்பாடுகள் பலமடைந்துள்ளன.

வடக்கு கிழக்கை ஒன்றிணைக்கும் முயற்சிகளும், தனிநாட்டுக் கோரிக்கையும் ஒரு சாராரின் அரசியல் செயற்பாடுகள் மூலம் முன்னெடுக்கப்படுகின்றது. நாட்டின் தேசிய பாதுகாப்பு, ஒன்றிணைந்த நாடு என்ற கோட்பாட்டில் பிரதமர் இல்லை. ஊடகங்களின் நேரத்தையும் மக்களின் நேரத்தையும் வீணடித்து காலத்தை கடத்தும் வேலைத் திட்டங்களே மேற்கொள்ளப்படுகின்றது என ஹெகலிய தெரிவித்தார். (செ-12)

## மகிந்தவைப் போல்...

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் அடுத்த 15 ஆம் ஆண்டுகளுக்கு நான் தான் நாட்டின் பிரதமர் என்று இங்கு தொகுத்து வழங்கும் அறிவிப்பாளர் கூறினார்.

ஆனால், நான் மகிந்த ராஜபக்ஷ அல்ல, அத்தனை வருடங்கள் பதவியில் இருக்க வேண்டும் என்ற ஆசையும் எனக்கில்லை. செய்ய வேண்டிய வேலைகளை செய்ததன் பின்னர் நான் வீட்டுக்கு சென்று விடுவேன்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தான் ஆட்சியில் தொடர்ந்தும் இருக்க போவதாக ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்தியிருந்ததுடன் அவரை தோற்கடிக்க முடியாது என்றும் நினைத்தார். நாங்கள் அவரை தோற்கடித்து, தோற்கடிக்க முடியும் என்பதை ஒப்புவித்து காட்டினோம்.

எனினும் இந்த நாடாளுமன்ற தேர்தலில் இலங்கையின் சம்பிரதாயம், உலக சம்பிரதாயங்களை மீறி, முன்னாள் ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ஷ, பிரதமராக வேண்டும் என்று மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி க்கு போட்டியிடுகிறார் இது அவருக்கு பாதகத்தை ஏற்படுத்தும் என ரணில் தெரிவித்தார். (செ-11)

## இணைந்த...

மைப்பின் தேர்தல் அறிக்கை கூறுகிறது.

அதிகாரப் பகிர்வு என்பது காணி, சட்டம் - ஒழுங்கு, சட்ட அமுலாக்கம், தமிழ் மக்களின் பாதுகாப்பு என்பவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டுமென அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. (செ-11)

## பயங்கரவாத...

க்கை நெறிப்படுத்தியிருந்தார்.

சந்தேக நபரான குணரட்ணம் கஜேந்திரன் மீது சுமத்தப்பட்டிருந்த ஏனைய இருவழக்குகளும் கடந்த 23ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி தேவிகா தென்னக்கோன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போது வவுனியா மேல்நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தவிர வேறு எந்தவிதமான சாட்சியங்களோ ஆதாரங்களோ இல்லாத காரணத்தினால் இவ் வழக்கினை தொடர்ந்து நடத்த முடியாது என வாதி தரப்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணியான ரட்ணவேல் மன்றில் வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களையும் கவனத்தில் எடுத்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி வவுனியா மேல் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் சந்தேக நபருக்கு தண்டனை வழங்க முடியாது எனக்கூறி இவ் வழக்கிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்து தீர்ப்பளித்துள்ளார். (செ)

## நம்மை நாம்...

நேற்றைய தினம் யாழ்.மருதனார் மடம் பகுதியில் இடம்பெற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்.தேர்தல் மாவட்டத்திற்கான முதலாவது தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

குறித்த கூட்டத்தில் மேலும் அவர் உரையாற்றுகையில், எமது போராட்டம் ஒரு நீண்ட போராட்டம். நாம் நினைக்கிறோம் எமது போராட்டம் ஒரு முடிவுக்கட்டத்தை அடைவதாக. ஆனால் எந்தவொரு போராட்டமும் முடிவுக்கு வருவதற்கு அந்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களுடைய எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவேண்டும்.

அவ்வாறில்லை எனில் அந்தப் போராட்டம் வெற்றிபெற முடியாது. நாங்கள் மிகவும் தெளிவாகவும், நிதானமாகவும் சிந்தித்து நடக்கவேண்டிய கால கட்டத்தில் நிற்கிறோம்.

நாட்டில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் பின்னர் பிரதமர் தலைமையிலான அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்தில் அதிக பலம் இருந்திருக்கவில்லை.

ஆனால் நாடாளுமன்ற தேர்தலின் பின்னரும் இந்த நிலைமை நீடிக்க முடியாது. நாம் சரித்திரரீதியாக வாழ்ந்த தாயகத்தில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையிலான ஒரு தீர்வு கிடைக்கவேண்டும். அதனையே நாம் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் குறிப்பிட்டிருக்கின்றோம். நாம் ஒரு தனித்துவமான மக்கள் கூட்டம்.

ஐ.நா ஒப்பந்தத்தில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ள அந்த ஒப்பந்தத்தில் நாம் கலை, கலாசாரம், பண்பாடு, மொழி மற்றும் தனித்துவமான வாழ்விடம் [illegible] ஒரு இனம். எமக்கு [illegible] உரிமை உள்ளது எ ன்பதை அதன் ஊடாக ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

இதன் ஊடாக சகல வழிகளிலும் எம்மை நாமே ஆளகூடிய அதிகாரம் கொண்ட எமது இறைமை அடிப்படையில் சமஷ்டி முறையிலான சுயாட்சி அதிகாரம் வேண்டும். அது தமிழர்களின் உரிமை. அதனை யாரும் மறுக்க முடியாது.

ஒரு நாட்டுக்குள் நாம் தீர்வை காண விரும்புகிறோம். அதனை விட நாமே சர்வதேசத்திலும், உள்நாட்டிலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சி. உள்நாட்டிலும், சர்வதேச நாடுகளிலும் இருந்து வருபவர்கள் எங்களையே சந்திக்கின்றார்கள். மற்றவர்களை சந்திக்கவில்லை. எனவே 7 ஆசனங்களையும் எமக்கு கொடுங்கள். ஏனைய கட்சிகளை உதறி தள்ளுங்கள்.

அதன் ஊடாகவே அரசியல் தீர்வை அடைய முடியும் நாம் இந்த நாட்டில் இரண்டாம் தர பிரஜைகளாக வாழ தயார் இல்லை என்றார். (செ-4)

## எங்கள் தலைவர்...

யாழ்.மருதனார்மடத்தில்-தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று பி.ப 4 மணிக்கு ஆரம்பமாகி இரவு 10 மணிவரை நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளாகிய தமிழரசுக் கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் ஆகிய நான்கு கட்சிகளின் தலைவர்கள், வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

இப் பிரசாரக் கூட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமை தாங்கி உரை நிகழ்த்தியிருக்க தொடர்ந்து வேட்பாளர்கள் பலரும் தமது பிரசார உரைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது பேசிய தமிழரசுக் கட்சி வேட்பாளர்களான சிவஞானம் சிறிதரன், கந்தையா அருந்தவபாலன், மதினி நெல்சன் மற்றும் சிலர் உரை நிகழ்த்துகையில், எங்கள் தலைவர் பிரபாகரனே என உணர்ச்சி முழக்கத்துடன் பிரசார உரையை தொடர்ந்திருந்தனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

எங்களின் உரிமைப் போராட்டம் ஆயுத வழியில் தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனினால் முன்னெடுக்கப்பட்டு தற்போது அது நயவஞ்சகமாக தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் நாம் எமது அரசியல் பயணத்தினை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றோம். எமது இனப்பிரச்சினை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் செல்லப்படு வதற்குக் காரணம் தமீழ விடுதலைப் புலிகள் இயக்கமே. எமது மாபெரும் தேசியத் தலைவர் என்றும் எமது பிரபாகரனே! அவரது வழி காட்டுதலிலேயே எமது அரசியல் பயணம் தொடர்கிறது என தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் உரையாற்றியிருந்தனர்.

பிரபாகரன் பெயர் உச்சரிக்கப்பட்ட வேளை கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த ஆதரவாளர்களிடையே பலத்த கரஒலி எழுப்பப்பட்டு அங்கிருந்தும் பிரபாகரனின் நாமம் கோஷமிடப்பட்டது. பலர் கைகளை உயர்த்தியும் எழுந்தும் தமது ஆதரவினை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதேவேளை பிரபாகரன் எனும் பெயரை கேட்டவுடன் மக்கள் மத்தியில் எழுந்த கரகோஷத்தையும் ஆர்ப்பரிப்பையும் பார்த்த ஐரோப்பியத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் புன்முறுவல் பூர்த்தபடி அதனை தமது குறிப்பேட்டில் குறிப்பெடுத்தமையும் அவதானிக்க முடிந்தது. (செ-4)

## கைக்குண்டு...

ருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து, சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் அதனை மீட்டு, அதிரடிப்படையினரிடம் கை யளித்துள்ளனர். இது தொடர்பில் பள்ளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இன்னும் சில வாரங்களில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், கைக்குண்டு மீட்கப்பட்டமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. (செ-11)

## தம்பிராசாவின்...

முறைப்பாட்டின் பிரகாரம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-4)


**வாடகைக்கு**

பலாலி வீதி, திருநெல்வேலியில் கொக்குவில் பகுதி பிரதான வீதியில் வாடகைக்கு வீடு தேவை.

தொடர்புகளுக்கு :-

0777158326 (1231)

**பணிப்பெண் தேவை**

யாழ் நகரப் பகுதியில் 2 பேர் மட்டும் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலைகள் (சமையல் வேலை உட்பட) செய்வதற்கு பெண் வேலையாள் தேவை. (1231)

தொடர்புகளுக்கு :- 0777158326
0770585910

**வேலையாள் தேவை**

★ **Photoshop, Video editing, Album designing** தெரிந்த முன் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
★ கணனி அறிவு தெரிந்த அலுவலக உதவியாளரும் தேவை.

ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு (1235)
0772487550 "வானவில் கலையகம்"
0212229466 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**அறிவித்தல்**

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் விசேட கூட்டம் இன்று மாலை 4.00 மணிக்கு பருத்தித்துறை கடற்கரையில் நடராஜா கலையரங்கில் நடைபெறவுள்ளது. இதில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர் (C - 239)
தமிழ் அரசுக் கட்சி
பருத்தித்துறை கிளை

**கண்ணீர் அஞ்சலி**



எமது சக ஆசிரிய மாணவர்களான
திரு.சீ.அமரஜோதி
திருமதி சி.தனேஸ்வரி அவர்களின்
பாசமிகு தந்தை
அமரர் முருகர் சீனியர்
அவர்களின் மறைவையிட்டு
அன்னாரின் ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதோடு
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தவர்க்கு ஆழ்ந்த
அனுதாபங்களையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
(1232)

இணைப்பாளர், முதுகல்விமாணி மாணவர்கள்
( 11 ஆம் அணி), உயர்பட்டப்படிப்புகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய தொடரைக் கைப்பற்றி சங்காவை வெற்றியுடன் வழியனுப்புவோம்

## மத்யூஸ் தெரிவிப்பு



இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றி சங்கக்காராவுக்கு வெற்றியுடன் பிரியாவிடை வழங்கப்போவதாக இலங்கை அணித்தலைவர் மத்யூஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு அடுத்த மாதம் சுற்றுப்பயணம் செய்யவுள்ள இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கவுள்ளது.

இந்தத் தொடரோடு இலங்கை அணியின் முன்னாள் தலைவரும், நட்சத்திர துடுப்பாட்ட வீரருமான குமார் சங்கக்கார ஓய்வு பெறப் போவதாக அறிவித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து சங்கக்காரவை சிறப்பாக வழியனுப்ப இலங்கை கிரிக்கெட் வாரியம் இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த இலங்கை அணித்தலைவர் மத்யூஸ், இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இலங்கை அணி கைப்பற்றும் என்றும், சங்கக்காரவை வெற்றியுடன் வழியனுப்புவதே அவருக்கு கொடுக்கும் சிறந்த மரியாதை எனவும் தெரிவித்துள்ளார். (க)

# இலங்கை - பாகிஸ்தான் 5-வது ஒருநாள் போட்டி இன்று



இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான ஐந்தாவதும் இறுதியுமான ஒரு நாள் சர்வதேச கிரிக்கட் போட்டி இன்று இடம் பெறவுள்ளது.

இந்த போட்டி அம்பாந்தோட்டை சூரியவெவ மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இது வரை இடம் பெற்ற போட்டிகளில் பாகிஸ்தான் அணி நான்குக்கு ஒன்று என்ற கணக்கில் வெற்றியை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)


## வாக்காளர்களே விழிப்பாயிருங்கள்!

தேர்தல் கால சட்டமீறல்களுக்கு உடந்தையாக இருக்காதீர்

- புதிய நியமனங்கள், இடமாற்றங்கள் வழங்குதல்.
- வாக்காளர்களை கவரும் நோக்கில் அன்பளிப்புக்களை உதவித் திட்டங்களை வழங்குதல், பெறுதல்.
- அரச சொத்துக்களை பிரசாரத்துக்கு பயன்படுத்தல்.
- வேட்பாளர்கள் பிரசார பதாகைகள், சுவரொட்டிகளை காட்சிப்படுத்தல்.
- போலி வாக்குச்சீட்டுக்களை பயன்படுத்தல்.
- ஊர்வலங்கள், ஒலிபெருக்கியை அனுமதியின்றி பயன்படுத்தல்
- வேறொருவரின் வாக்காளர் அட்டையை வைத்திருத்தல்.
- வேட்பாளர்கள் வீடுவீடாகச் சென்று வாக்கு கேட்டல்.
- தேர்தல் தினத்தன்று வாக்காளர்களை வாகனத்தில் ஏற்றி இறக்குதல்
- வாக்களிக்க விடாமல் தடுத்தல், விரட்டுதல்.
- வாக்காளர் அட்டை விநியோகத்துக்கு ஊறு விளைவித்தல்.

அனுசரணை -
(C-1666)
கரித்தாஸ் யாழ்ப்பாணம் கியூடெக்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
சங்குநாதம்
Sankunatham
வள்ளுவர் ஆண்டு 2046 | 26.07.2015 | தொலைபேசி : 021 222 3378
நாதம் 25



# திம்பு கோட்பாட்டை கையில் எடுப்பது எதற்காக?


## பாராளுமன்றத் தேர்தல் - 2015

### பிறருக்கு கொடுத்துதவுவதற்கு மனமில்லாதவர்கள் மத்தியில் பெரும் இரக்கமுள்ள ஒப்பிலா மாமனிதர் வேலாயுதம் கணேஷ்வரன்



1

வ.அன்னலட்சுமி

இந்தக் காலத்தில் 100 ரூபாய் பணத்தைக் கூட பிறருக்கு கொடுத்துதவுவதற்கு மனமில்லாதமனிதர்களுக்கு மத்தியில் தம் சொந்த உழைப்பின் பணத்தை ஏழை, நோயாளி, கல்வி தேவையுடையோரை இனங்கண்டு அவர்களுடைய காலடிக்குச் சென்று உடனுக்குடன் உதவும் மனிதர் இருக்கிறார் என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

அன்னலட்சுமி வனசுதா என்னுடைய இயல் பெயர். இயக்கத்துப் பெயர் தாயகி.1989 ஆம் ஆண்டு சேர்ந்து பல களங்கள் கண்டு விழுப்புண் அடைந்து 1999 ஆம் ஆண்டு விலகினேன். 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற கோர யுத்தத்தில் புதுமாத்தளனில் படுகாயமடைந்த நிலையில் நானும் என் கணவரும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தோம். அங்கு 43 நாட்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்தோம்.

பின்பு வவுனியா கதிர்காமர் நலன்புரி முகாமில் இருக்கும் போது இராணுவப் புலனாய்வாளர்கள் என்னையும் என் கணவரையும் என் பெண் பிள்ளையையும் கூட தடுப்பு முகாமிற்கு அழைத்துச் சென்றனர். வவுனியா நெடுங்குளம் தடுப்பு முகாமில் என் கணவரை வைத்திருந்தார்கள். 2009 நவம்பர் 19 ஆம் திகதி கூட்டிக் கொண்டு போய் காட்டினார்கள். அப்பொழுது 10 நிமிடங்கள் தான் கதைக்க விட்டனர். அதற்கு பின்னர் நவம்பர் 25 ஆம் திகதி உயிரற்ற உடலைக் காட்டினார்கள்.எல்லாம் முடிந்தது. எல்லாம் கடவுளுக்குத் தான் தெரியும். தடுப்பு முகாமிலிருந்து விடுதலை கிடைத்தது. தற்போது கிளிநொச்சியில் செல்வா நகரில் வசித்து வருகிறோம். தற்போது நான் சமூக சேவையாளராகவும் மாற்றுத் திறனாளிகளின் கிராமிய குழு செயலாளராகவும் சேவையாற்றி வருகிறேன்.

ஐயாவின் சேவை நலனில் கவரப்பட்டு அவர் போட்டியிடும் ஆறாம் சுயேச்சைக் குழுவில் கேடயச் சின்னத்தில் நானும் வேட்பாளராக களமிறங்கியுள்ளேன். என்னுடைய இலக்கம் ஒன்று. ஐயாவுடைய இலக்கம் ஆறு. அவருடைய மகத்தான சேவை உறுதி செய்வதற்காக அவருக்கொரு வாக்கை முதலில் வழங்கி விட்டு எனக்கும் ஒரு வாக்கை வழங்கி வைக்குமாறு வாக்காளர் பெருமக்களிடம் தாழ்மையுடன் வேண்டுகின்றேன்.

அன்புடன்
அன்னலட்சுமி வனசுதா (போராளி)
செல்வாநகர், கிளிநொச்சி

சுயேட்சைக்குழு - 06

X



6


சிவன் பவுண்டேசன்
வேலாயுதம் கணேஷ்வரன்
கொடை வள்ளல், சமூக ஆர்வலர்

(C-238)


உங்கள் சங்குநாதத்தில் அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திம்புக் கோட்பாட்டை கையில் எடுப்பது எதற்காக?


குருஷேத்திரம்

எதற்கெடுத்தாலும் சண்டியன் கட்டுக் கட்டும் ஒருவனை கண்ணகிப் பாத்திரத்திற்கு நடிக்க விட்டார்கள். நாடகம் பிரமாதமாக நடந்து கொண்டிருக்கிறது.

சிலர் கண்ணகியை நோக்கி வருகிறார்கள். தாயே! தங்கள் கணவர் கோவலனை மன்னன் கொன்று விட்டான் என்று கூறுகின்றனர்.

இதனைக்கேட்ட கண்ணகி, தான் கட்டியிருந்த சாறியைத் தூக்கிச் சண்டியன் கட்டு கட்டியபோது அவையில் ஒரே சிரிப்பு கரகோசம்.

நாடகத் தயாரிப்பாளருக்கு தாங்கமுடியாத கவலை. அவரைத் தேற்றுவதற்கு நல்ல மனிதர்கள் சிலர் முன்வந்தனர்.

நாடகம் நன்றாக இருந்தது. பாத்திரம் பொருத்தமில்லாததால்தான் குழப்பம். பொருத்தமான கதா பாத்திரங்களை பொருத்தமானவர்களுக்குக் கொடுக்க வேண்டும். எதற்கெடுத்தாலும் சண்டியன் கட்டுக் கட்டுபவனைக் கண்ணகி பாத்திரத்திற்கு நடிக்கவிட்டால் அவன் என்ன செய்வான். பழக்கதோசம்... என்று ஆறுதல் கூறினார்.

கண்ணகி பாத்திரத்தில் நடித்தவன் கதையாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நிலைமையும் உள்ளது.

எதற்கெடுத்தாலும் கை நீட்டுவது, கதிரையைத் தூக்கி எறிவது, அளவு கடந்த கோபம் கொள்வது என்ற குண இயல்புடைய மகிந்த ராஜபக்ஷ சில தினங்களுக்கு முன்னர் தனது ஆதரவாளர் ஒருவரைத் தாக்க முற்பட்ட சம்பவம் இலங்கையின் ஆட்சியும் ஆட்சியாளர்களின் அழகும் எப்படியானது என்பதைத் துலாம் பரப்படுத்தியுள்ளது.

ஒரு ஆதரவாளனோடு கூட பொறுமை கொள்ள முடியாத மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது எப்படியெல்லாம் ஆத்திரப்பட்டிருப்பார் என்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

எதுவாயினும் தனது ஆதரவாளரை மகிந்தனார் தாக்க முற்பட்டமை ரணில் விக்கிரமசிங்க தரப்புக்கு நல்லதொரு பிரசாரம். அந்தப் பிரசாரம் மகிந்தவின் செல்வாக்கை சடுதியாகச் சரித்தும் விடலாம் என்ற தகவலை இவ்விடத்தில் முன்வைப்பதோடு அந்த விடயத்தை முடிவுறுத்திக் கொள்ளலாம்.

இது தேர்தல் காலம். கடுமையான பிரசாரங்கள் நடக்கின்ற இவ்வேளையில் வாக்குறுதிகளும் தேர்தல் விஞ்ஞாபனங்களும் மிக உச்சமானவையாக இருக்கும். தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டால், இவை பற்றி கவனம் செலுத்த வேண்டிவராது என்ற நம் பிக்கையின் அடிப்படையில் மக்களின் வாக்குகளைத் தமதாக்குவதற்கான தந்திரங்கள் மட்டுமே தேர்தல் காலங்களில் முதன்மை பெற்றிருக்கும்.

எனினும் வடக்கு கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபுது வியூகத்தை முன்வைத்திருப்பதுதான் இங்கு விசித்திரமாண்தாக உள்ளது.

அதாவது இனப்பிரச்சினைக்கான தீர்வு திம்புப் பேச்சுவார்த்தையை மையமாகக் கொண்ட திம்பு கோட்பாட்டின் அடிப்படையில் அமைய வேண்டும் என்பதாகும்.

தேர்தலுக்கு முன்பான கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு திம்புக் கோட்பாட்டை இனப்பிரச்சினைக்கான தீர்வாக முன்வைத்ததா என்றால் இல்லையென்பதே பதிலாகும்.

பிரிட்டிஷ் பிரதமர் கமரூன் இலங்கைக்கு வந்தபோது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கொழும்பு விஜயத்தின் போது சுஷ்மா சுவராஜ் விஜயம் செய்த போதெல்லாம் திம்புக் கோட்பாடுபற்றி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வாய் திறக்கவில்லை.

பிரிட்டிஷ் பிரதமர் கமரூன் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் வந்தபோது 13 ஆவது திருத்தச் சட்டமூலம் பற்றியே பேசப்பட்டது. பிரதமர் மோடியிடமும் இலங்கை- இந்திய ஒப்பந்தம் பற்றிப் பிரஸ்தாபிக்கப் பட்டதாகவே தகவல்.

யுத்தம் முடிந்த கையோடு மகிந்தவின் ஆட்சியில், திம்புக் கோட்பாடு பற்றி முணுமுணுக்காத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திடீரென திம்புக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே தீர்வு என்று கூறியதற்குள் தேர்தல் இராஜதந்திரம் உள்ளது என்று நினைக்கத் தோன்றுகிறது.

திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமென்றால் அது குறித்து ஆனந்தமடையாத தமிழர்கள் இருக்கமுடியாது.

ஆனால் திம்புக் கோட்பாடு பற்றி [illegible] தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உச்சரிக்க வில்லை. இலங்கை- இந்திய உடன்படிக்கை- 13 ஆவது திருத்தச் சட்டமூலம் இவற் றுக்கப்பால்... என்பது பற்றியே பேசப்பட்டது.

ஆக, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மட்டுமே திம்புக்கோட்பாட்டிற்கு அமைவாக- நிகரான தீர்வை அன்று முதல் இன்றுவரை முன்வைத்து வருகிறார். தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பது திம்புக் கோட்பாட்டின் அடிப்படை.

13ஆவது திருத்தச்சட்ட மூலம் இனப்பிரச்சினையின் ஆரம்பப்புள்ளிகூட இல்லையென்பது கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் நிறுதிட்டமான முடிவு.

நிலைமை இதுவாக இருக்க, திடீரென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு திம்புக் கோட்பாட்டின் அடிப்படை யிலேயே இனப்பிரச்சினைக் கும் தீர்வு காணப்பட வேண்டு மெனக் கூறுவது தமிழ்மக்களின் வாக்குகளை தமக்காக்குவதற்கான தந்திரமா? என்று எண்ணத் தோன்றுகின்றது.

அதாவது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தும் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பதையே நாமும் வலியுறுத்துகிறோம் என்பதாகக் காட்டிக் கொள்ளும் பொருட்டு திம்புக் கோட்பாட்டை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கையிலெடுக்குமாயின் அது மிகப்பெரிய பாவச் செயலாகும்.

நாம் இங்கு கூறுவதெல்லாம் திம்புக் கோட்பாடு பற்றி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எதுவும் கதைக்கக் கூடாதென்பதல்ல.


மாறாக இனப்பிரச்சினை தீர்வு பற்றி நீங்கள் கதைக்கக் கிடைத்த சந்தர்ப்பங்களின்போது திம்புக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே தீர்வு அமைய வேண்டுமெனக் கூறியிருந்தீர்களா? அப்படியானால் பிரிட்டிஷ் பிரதமர் கமரூன், இந்திய மத்திய அரசின் எதிர்க்கட்சித் தலைவராக அப்போதிருந்த சுஷ்மா சுவராஜ், இந்தியப் பிரதமர் மோடி, அமெரிக்க இராஜதந்திரிகள், ஐ.நா.பிரதிநிதிகள் ஆகியோரிடம் திம்புக் கோட்பாடு பற்றி வலியுறுத்தி யிருந்தீர்களா? அவ்வாறு வலியுறுத்தியிருந்தால் அதை வலியுறுத்தியவர் யார்?

சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் திம்புக் கோட்பாடு பற்றிக் கதைக்காமல் வெறும் 13 பற்றிக் கதைத்துவிட்டு இப்போது பாராளுமன்றப்பொதுத்தேர்தல் பிரசாரத்திற்காக திம்புக் கோட்பாட்டைக் கையில் எடுப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

அதேநேரம் வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் வெளிநாட்டிற்குச் சென்றபோது வெளிநாட்டு தமிழ் ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும் போது திம்புக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று கூறியிருந்தார். முதலமைச்சரின் இந்தக் கருத்து எதற்கானது என்பதைப் புரிந்து கொள்ளமுடியவில்லை.

ஏனெனில் பிரிட்டிஷ் பிரதமர் கமரூன், இந்தியப் பிரதமர் மோடி ஆகியோர் யாழ்ப்பாணம் வந்த போது இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது 13+ என்ற எல்லைக் குள்ளேயே இருந்ததாக ஞாபகம்.

எதுவாயினும் திம்புக் கோட்பாடு ஒரு பிரிவினை என்று திம்புப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆ.ஜயவர்த்தனவின் சகோதரர் சட்டத்தரணி ஜெயவர்த்தனா கூறியது மட்டும் ஞாபகத்தில் இருக்கிறது.



விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

ஆலடிப்பிள்ளையார் கோவில் திருவிழா. பண்டிதரின் தெய்வீக உரை. அன்பே சிவம் என்ற பொருளில் உரையாற்றினார்.

அடியார் பெருமக்களே! இந்த உலகில் மிகவும் உயர்ந்த தத்துவக் கருத்துக்களைக் கொண்ட சைவசமயம் ஒரு உண்மையைச் சொல்கிறது. அந்த உண்மை அன்பேசிவம் என்பதாகும்.

அன்பு தான் இறைவன் என்று கூறுவதில் இருந்து நாம் அனைவரும் மனிதர்கள் மீதும் மற்றைய ஜீவ ராசிகள் மீதும் அன்புடையவர்களாக வாழவேண்டும். அன்புக்கு ஈடாக எதுவும் இருக்கமுடியாது.

அன்புடையவர்கள் ஆட்சிப் பீடங்களில் இருப்பார்களாயின் இந்த நாடு, இந்த உலகம் முழுமையும் அமைதியும் சமாதானமும் நிலவும்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக நாம் அன்புடையவர்களாக நடிக்கின்றோம். நடிப்புத்தானே எங்கள் இனத்தை இன்னமும் உய்ய விடாமல் தடுக்கிறது. முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி மன்னன், புறாவுக்காக தன்னையே ஈர்ந்த சிபிச் சக்கரவர்த்தி போன்ற மன்னர்கள் காட்டிய அன்பு எத்தன்மையது என்பதை நீங்கள் உணர முடியும். இவ்வாறு பண்டிதரின் உரை நீண்டு நிறைவு பெற பொழுதும் மாலை யாயிற்று.

பண்டிதரின் உரை நிறைவுற்றதும் ஆலடி மாநாடு கூட ஆயத்தமாயிற்று. வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு தொடங்கியது.

**வாத்தியார்:** பண்டிதர் ஆற்றிய அன்பே சிவம் என்ற தெய்வீக உரை மிகவும் சிறப்பாக இருந்தது. அன்புதான் கடவுள் என்பதை மறந்து நாங்கள் கட்டடத்தில் கடவுளைக் காண விளைகிறோம்.

கடவுள் எங்களுக்குள் இருக்கிறார். இதனால்தான்

**உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம் வள்ளல் பிரானார்க்கு வாய்க் கோபுர வாசல் தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம் கள்ளப்புலனைந்தும் காளா மணி விளக்கே**

என்று திருமூலர் அற் புதமாகச் சொன்னார். உள்ளம் பெரும் கோயில் ஊனுடம்பு ஆலயம் என் றால் எங்கட உடம்பை ஒரு கோயிலாகப் பேண வேண்டும். ஆனால் எங்கட மண்ணில சமயங்களுக்கிடையே சர்ச்சையை ஏற்படுத்தவல்லோ சிலர் முற்படுகினம்.

**கங்காணி:** அது சரி வாத்தியார் யாழ். மறை மாவட்ட ஆயர்களிட்ட போன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சைவசமயம் சார்ந்த நல்லை ஆதீன முதல்வரிட்ட போகவில்லை.

**விதானையார்:** அவையள் ஏன் போகப்போகினம். அவையளுக்குச் சைவசமயம் எண்டால் பிடியாதல்லோ.

**பண்டிதர்:** விதானையார் நாங்கள் சமயப் பிரிவினையை ஏற்படுத்தாமல் இருப்பம்.

**விதானையார்:** பண்டிதர் ஐயா, புரியாமல் கதையாதீங்கோ. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாண ஆயரிட்டப் போய்ச் சந்தித்தது நியாயம். நாங்கள் கேட்பது நல்லை ஆதீன முதல்வரிட்டயும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போனதா என்பதுதான்?

**கங்காணி:** தந்தை செல்வநாயகத்தின்ர பரம்பரையல்லோ. அவையள் சைவ ஆதீனங்களுக்குப் போகமாட்டினம்.

**விதானையார்:** ஓமோம். சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம்... என்ன செய்யிறது தமிழருக்குத் தனிநாடு வேணும் என்று கேட்டவியள் தமிழனின்ற தாய்ச்சமயம் தேவை என்று கேட்காததால இவயளின்ர எந்த முயற்சியும் கஷ்டமாகத்தான் இருக்கும்.

**பண்டிதர்:** கங்காணியார் எவர் என்ன செய்தாலும் சைவசமயத்தை ஒன்றும் செய்துவிடமுடியாது.

**வாத்தியார்:** இப்படியே சொல்லிக் கொண்டு இருங்க. இன்னும் பத்து வருசத்தில இந்த மண்ணில என்ன நடக்கும் என்பதை இருந்து பாருங்க.

**கங்காணி:** நல்லை ஆதீனத் திட்டப் போகாமல் ஆயர் இல்லத்திற்கு ஓடிப் போன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிட்ட ஒரு சமய சமரசம் கூட இல்லை. நீங்கள் என்னதான் சொன்னாலும் தந்தை செல்வநாயகத்தை சைவத்தமிழர்கள் தங்கட தலைவராக ஏற்றுக் கொண்ட அன்றைக்கே சைவசமயத்தின்ர கதை முடிஞ்சு போய்ச்சுது.

என்ன செய்வம் இப்ப கத்தோலிக்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் எங்கட சைவசமயத்தை ஓரங்கட்டுது. பரவாயில்லை. ஏதோ அந்த [illegible] பார்த்துக் கொள்வம்.

**பண்டிதர்:** இஞ்சே கங்காணியார் இது சமயம் கதைக்கிற இடமல்ல. கத்தோலிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற சொல்லை கங்காணியார் வாபஸ் பெறவேணும்.

**கங்காணியார்:** ஒருபோதும் வாபஸ் பெறமாட்டன்.

(கங்காணியார் இப்படிச் சொல்ல பண்டிதருக்குக் கடும் கோபம் வந்தது)

**பண்டிதர்:** இந்த மாநாட்டில கங்காணியார் இருக்கக்கூடாது.

**கங்காணி:** ஓமோம் நீங்கள் நியாயம் கதைக்கிறவியள வெளியில துரத்துறது வழக்கம்தானே!

நீங்கள் என்ன செங்கோலோ வைச்சிருக்கிறியள் நான் தூக்கி எறிய. இந்தாப் போறன். இனிமேல் இந்த ஆலடி மாநாட்டிற்கு வரமாட்டன்.

தேர்தலுக்கு முதல் தனிநாடு எண்டு கதைக்கிறது பதவி கிடைத்தவுடன் ஆளுநருக்கு காணி, காசு ஒதுக்கிறது. இங்க நாடகம் நடக்குது.

வெளிய போற நான் சும்மா இருப்பன் என்று நினைக்காதீங்க. என்றைக்கு தமிழர்கள் மத்தியில் எல்லாச் சமயங்களை மதிக்கிற ஒரு நடுநிலைமையான கொள்கை அமுலுக்கு வருகிறதோ அன்றைக்குத் தான் எங்களுக்கு விடிவும் வரும். இது சத்தியம்.

(இவ்வாறு சொல்லி விட்டு மாநாட்டில் இருந்து கங்காணியார் வெளியேற விதானையார் அவரை தடுத்து நிறுத்த முயற்சிக்கின்றார். எனினும் கங்காணியார் உதறித் தள்ளி விட்டு மாநாட்டில் இருந்து வேகமாக வெளியேறுகிறார்.

கங்காணியார் மாநாட்டில் இருந்து வெளியேறியமை எல்லோருக்கும் கவலையைக் கொடுத்தது. மாநாட்டில் சிறிது நேரம் மௌனம் நிலவியது.எனினும் தொடர்ந்தும் மாநாட்டை நடத்த வேண்டும் என்பதால் மாநாடு தொடர்ந்தது. அந்த நேரம் பார்த்து மூப்பர் வேகமாக ஆலடி மாநாட்டிற்கு வந்தார்)

**விதானையார்:** என்ன ? மூப்பர் நல்லா களைச்சுப் போனியள்.

**மூப்பர்:** அதையேன் கேட்கிறியள் விதானையார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில என்ர மகள் படிக்கிறாள். இப்பதான் அனுமதி கிடைச்சுது.

விஞ்ஞானபீடத்தின் இரண்டாம் வருட மாணவர்கள் புதுமுக மாணவர்களின்ர தலையில துர்நாற்றம் வீசும் தண்ணிய ஊற்றிப் போட்டாங்கள். பெண் பிள்ளைகள் பட்டபாடு. ஆடை முழுமும் நனைந்து போயிற்றுது. என்ன செய்ய முடியும்?

**வாத்தியார்:** நாசமறுக்க பெண் பிள்ளைகளின்ர தலையில தண்ணீரை ஊற்றினால் என்ன செய்யிறது. இந்தப் பெடியளுக்கு தாய் சகோதரிகள் இல்லையோ.

**பண்டிதர்:** என்ன நடவடிக்கை எடுக்கப் போகினமாம்.

**மூப்பர்:** என்ன நடவடிக்கை எடுக்கிறது. அறிக்கை வருகுது. அந்தா வருகுது.இந்தா வருகுது. எல்லாம் ஏமாற்று நாடகம். சரி அறிக்கையை தயாரித்து இந்த இந்த மாணவர்கள்தான் இப்படியொரு மோசமான ராக்கிங் செய்தவியள் எண்டால் அவையளைக் காப்பாற்ற பேரவையில ஆட்கள் இல்லாமலோ போவினம்.

குற்றம் செய்தவியளுக்கு உரிய தண்டனை வழங்காதவரை நாறல் தண்ணிய எங்கட தலையில ஊத்துறதுக்கு இன்னும் பலர் காத்திருப்பினம். இப்படி மூப்பர் சொல்ல ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



## நல்லை ஆதீனத்திற்கு போகாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முட்டாள் கதை!

விருதுநகர் என்னும் ஊரில் வசிக்கும் வணிகன் ஒருவனுக்கு, முட்டாள் வேலைக்காரன் ஒருவன் இருந்தான். வேலைக்காரனை அழைத்த வணிகன், 'நம் வண்டியை எடுத்துக் கொண்டு காட்டுக்குப் போ. அங்கே மரங்களை சிலர் வெட்டி வண்டியில் ஏற்றிக் கொண்டிருப்பார்கள். அதே போல, நீயும் மரங்களை வெட்டிக் கொண்டு வா.' என்றான்.

அப்படியே அவனும் வண்டியை ஓட்டிச் சென்றான்.

அங்கே சிலர் மரங்களை வெட்டிக் கொண்டு இருந்தனர். சிலர் கீழே விழுந்த மரத்துண்டுகளை தூக்கி வண்டியில் போட்டுக் கொண்டிருந்தனர்.

இதைப் பார்த்த அவனால், சிரிப்பை அடக்க முடியவில்லை.

'என்ன! இவர்கள் எல்லோரும் முட்டாள்களாக இருக்கின்றனர். மரம் வெட்டும் போதே அதற்குக் கீழாக வண்டியை நிறுத்தினால் மரம் அதில் சரியாக விழும். அப்படியே கொண்டு வரலாமே! எதற்காக மரத்தைத் தரையில் கிடத்திய பிறகு வண்டியில் போட வேண்டும்' என்று நினைத்தான்.

'என் திட்டத்தை இவர்கள் கண் முன்னாலேயே செய்து காட்ட வேண்டும். எல்லாரும் என்னைப் புகழ வேண்டும்' என்று நினைத்தான்.

தான் வெட்ட வேண்டிய பெரிய மரத்தைத் தேர்ந்து எடுத்தான்.

கோடாரியால் அந்த மரத்தின் அடிப் பகுதியைப் பாதி அளவு வெட்டி முடித்தான். அந்த மரம் விழக்கூடிய இடத்தில் வண்டியை நிறுத்தினான்.

மரம் வெட்டிக் கொண்டிருந்த மற்றவர்கள், 'ஏன் இவன் இப்படிப் பைத்தியக்காரத்தனமாக வேலை செய்கிறான்' என்று நினைத்தனர்.

மீண்டும் மரம் வெட்டத் தொடங்கினான் சிறிது நேரத்தில் அந்த மரம் சடசடவென்ற சத்தத்துடன் வண்டியின் மீது வேகமாக விழுந்தது.

அவ்வளவுதான் வண்டி தூள் தூளானது.

இதைக் கண்ட அவன் திகைத்தான்.

தன் திட்டத்தில் என்ன குறை என்பதை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

'என் திட்டம் நல்ல திட்டம்தான். வண்டிக்குத்தான் வலிமை இல்லை' என்ற முடிவுடன் வீடு திரும்பினான்.

நடந்ததை அறிந்த வணிகன், 'முட்டாளாக இருக்கிறாயே? இப்படிச் செய்யலாமா?' என்று அவனைத் திட்டினான்.

சில நாட்கள் சென்றன.

# வண்டி மாடு மண்ணெண்ணெய்!



திடீரென்று அந்த ஊரில் மண்ணெண்ணெய் பஞ்சம் வந்தது. வணிகனிடம் இருபத்தைந்து பீப்பாய் எண்ணெய் இருந்தது. பதுக்கி வைத்தால், நிறைய இலாபம் கிடைக்கும் என்று நினைத்தான்.

வேலைக்காரனை அழைத்து, 'கடையிலிருக்கும் மண்ணெண்ணெய் எல்லாவற்றையும் இன்றிரவு எடுத்து வா. நம் வீட்டுத்தோட்டத்தில் பள்ளம் தோண்டிப் புதைத்துவிடு. யாருக்கும் தெரியக்கூடாது.' என்றான்.

வணிகன் சொன்னபடியே, நள்ளிரவில் பெரிய பள்ளம் தோண்டினான் அவன்.

ஒவ்வொரு பீப்பாயாக உருட்டிச் சென்று அதில் உள்ள எண்ணெயைப் பள்ளத்தில் ஊற்றினான். இப்படியே எல்லா பீப்பாய் எண்ணெயையும் ஊற்றி முடித்தான்.

'இந்தக் காலி பீப்பாய்களை என்ன செய்வது? இது குறித்து முதலாளி ஒன்றும் சொல்லவில்லையே... சரி அவரையே கேட்டு விடுவோம்' என்று நினைத்தான்.

நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த அவரை எழுப்பினான்.

'ஐயா! நீங்கள் சொன்னபடி மண்ணெண்ணெயைப் பள்ளம் தோண்டிப் புதைத்து விட்டேன். காலி பீப்பாய்களை என்ன செய்வது?' என்று கேட்டான்.

வணிகனுக்கு உண்மை புலப்படத் தொடங்கியது.

'ஐயோ மண்ணெண்ணெய் எல்லாம் போச்சே!' என்று அலறினான்.

அன்றே அவனை வேலையிலிருந்து நீக்கினான்.




# நீர்க்காகம்!

நீர்க்காகங்களின் காலில் உள்ள நகங்கள், அவை நீந்துவதற்கு வசதியாய் அமைந்திருக்கிறது.

எனவே, கிழக்குப் பகுதியில் சில மீனவர்கள் இந்த நீர்க்காகங்களைப் பழக்கப்படுத்தி மீன்களைப் பிடித்து வர அனுப்புவர்.

மீன்களைக் கொத்தி வரும் அந்த நீர்க்காகங்கள் அந்த மீனை அவை சாப்பிட்டு விட முடியாத அளவிற்கு, அதன் கழுத்தில் உலோகத்தால் செய்யப்பட்ட வளையம் ஒன்றை இறுக்கமாகப் போட்டு அனுப்புவர். பிடித்து வந்த மீனை இவர்கள் வியாபாரம் செய்வர். அய்யோ பாவம்!

# சிசேரியன்!




இயேசு பிறப்பிற்கு முன் 51 இல் எகிப்தில் பேரழகியாகப் புகழ்பெற்றவள் **கிளியோ பாட்ரா.**

தந்தைக்குப் பின் தன் சகோதரனையே திருமணம் முடித்து ஆட்சியைத் தொடர்ந்தாள்.

பின் எகிப்து, உரோமன் பேரரசுடன் ஐக்கியமானது. உரோமை ஆட்சி செய்தவர் **ஜூலியஸ் சீசர்.** பின் இவரை கிளியோபாட்ரா காதலித்து ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள்.

அக்குழந்தையின் பெயர் **சிசேரியன்!** அறுவைச் சிகிச்சை செய்து இக்குழந்தை பிறந்ததால், **"சிசேரியன்"** என அழைக்கப்பட்டது.



**அன்புச் சிறார்களே, இங்குள்ள படங்களைப் பார்த்து அவற்றின் பெயர்களை கட்டங்களில் நிரப்புங்கள்!**

விடைகள்
மேலிருந்து கீழ்:- பந்து, புருவம்
இடமிருந்து வலம்:- பேருந்து, அம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



பிரபாகரன் காலத்தில் தமிழ் கலாசாரம்?

நாம் இறக்கும் தருணம் தெரிந்தால் எப்படியிருக்கும்?

புலி படம் விஜய் ரசிகருக்கு விருந்தாக அமையுமா?

**நரேன் — வல்வெட்டி**

**இன்றைய இளைஞர்களின் காதல் பற்றி?**

காதல் என்பதை கத்தரிக்காய் போல நினைக்கிறார்கள் வெட்டிப்பார்த்து சூத்தை என்றால் கழித்துவிட.

**சிவா — வல்வெட்டித்துறை**

**தற்காலத்தில் கலை, கலாசாரங்களை வளர்ப்பதற்கு ஏதும் அறிவுரை?**

விதை போட்டு முளைவிட்டு வளர்ந்து விருட்சமாகி விழுது விடும் நேரத்தில் தான் கலாசார மரம் பட ஆரம்பித்திருக்கிறது. இனி நாம் நீருற்றி பயனில்லை. மரம் தன் முயற்சியால் வேர் விட்டு முளைத்தெழுந்தாலே முடியும்.

**மதி — சுழிபுரம்**

**அதிகம் கோபம் வருதே என்ன பண்ண?**

எனக்கு அதிகம் கோபம் வருகிறது என்பதை நீங்கள் உணர்ந்து கொண்டால் அதை குறைத்து விடுவது சுலபம். பாரதத்தில் கைகேயி இராமனை காட்டுக்கு அனுப்ப வரம் கேட்டாள் என்பதை அறிந்த இலக்குமணனுக்கு கோபம் வர, இராமன் கேட்டார் இலக்குமணா பொறுமையின் சின்னமாகிய நீ கோபம் கொள்ளலாமா? என. அதற்கு பொறுமை முக்கியம். கோபம் கொள்ள வேண்டிய இடத்தில் கோபம் கொள்ளாதிருப்பது மகா தவறு என்றான் இலக்குமணன். கோபம் கொள்ள வேண்டிய இடத்தில் கொண்டே ஆகவேண்டும்.

**வேல்நந்தன் — புலோலி**

**முறைகள் மாறுகின்றன மனமும் மாறுமா?**

முறை மாற்றத்திற்கு காரணமே இந்த மன மாற்றம் தானே.

**றெபேக்கா — மட்டுவில்**


**பெற்ற குழந்தையை நாய்போல நடத்தும் தாய்க்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?**

மன்னிக்கவும். நாய்கள் தன் குட்டிகளை யாரும் நெருங்க கூட அனுமதிக்காது.

**கௌரி — கரணவாய்**

**பிரபாகரன் காலத்தில் தமிழ் கலாசாரம்?**

அது ஒரு காலம் அழகிய காலம்




**குருபரந்தாமன் — அல்வாய்**

**யாருக்கு வாக்குப் போட்டால் தமிழருக்கு நிம்மதி கிடைக்கும்?**

நீங்கள் வாக்குப் போட நினைப்பவர்களை மனதில் நினைத்துக் கொண்டு பின்வரும் நான்கு கேள்விகளை உங்களிடமே கேளுங்கள். நான்கிற்கும் ஆம் என்று பதில் வந்தால் அவர்களுக்கே வாக்களியுங்கள்.

- தேர்தல் காலத்தை தவிர இவர்கள் உங்கள் கிராமத்தின் நலன்சார் திட்டத்தில் பங்கு கொண்டார்களா?
- எங்கள் இளைஞர், யுவதிகளை வழிப்படுத்த ஏதும் திட்டத்தை வகுத்து முன்மொழிந்தார்களா?
- ஏற்கனவே கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளில் ஏதேனும் ஒன்றையேனும் செய்துள்ளார்களா?
- மேடைகளில் பேசும் பேச்சுக்கள் போல்தான் அவர்களின் நடவடிக்கைகள் அமைகின்றனவா?



"தலைவர் இதுக்கு மேலயும் அரசியல்ல இருக்கணுமா என்ன?"

"ஏன்... என்ன ஆச்சு?"

"கூட்டணிக் கட்சிகளிடம் தலைவர் தேர்தல் நிதி கேட்டப்போ, 'இப்போ நீங்க எந்தக் கட்சியில் இருக்கீங்க?'னு கேட்டு அசிங்கப்படுத்திட்டாங்களாம்!"

**விஜிதா — சுழிபுரம்**

**புலி படம் விஜய் ரசிகருக்கு விருந்தாக அமையுமா?**

முதலில் விருந்து வைக்கட்டும். சாப்பிட்டு பார்த்தால் தானே தெரியும் உப்பு, புளி, காரம் எல்லாம் அளவாக இருக்கிறதா என. அதற்கு முன் அவசரப்பட்டு விருந்து சுப்பர் என கூற முடியாது.

**தனு — அல்வாய்**

**மாமியார் மருமகள் சண்டைபோல ஏன் மாமன் மருமகன் சண்டை வருவதில்லை?**

மாமனும் மருமகனும் சண்டை பிடிப்பது போல் எந்த TV சீரியலிலும் வருவதில்லையே.

**சுஜி — நெல்லியடி**

**முன்பள்ளி ஆசிரியர் பற்றி?**

மனிதன் என்ற முழுமையான கட்டடத்தின் அத்திவாரம்.

**தர்ஷிகா — யாழ்ப்பாணம்**

**ஆண்டவன் தந்த அன்பு உணர்வு நம்மிடம் இல்லையே?**

ஆண்டவனின் துதிபாடும் பலரிடம் அன்பு, கருணை இருப்பது கடினமாகவே இருக்கிறது. அவர்களின் நோக்கமெல்லாம் சுயநலன் சார்ந்ததாகவே காணப்படுகின்றது. ஆண்டவனிடம் ஒரு விடயத்தை மனதால் கேட்கும் பொழுதில் கூட "எனக்கு, நான், என்னை"

**ஜதுசா — மீசாலை**

**நாம் இறக்கும் தருணம் தெரிந்தால் எப்படியிருக்கும்?**

நம் தாத்தா சொன்ன கதை ஒன்று. ஒரு முறை உலகம் இன்னும் பத்து நாட்களில் அழியப் போகிறது என ஒரு வதந்தி கிளம்ப திருமண வயது வராத பலர் திருமணம் முடித்தார்களாம்.
குடிப்பழக்கம் இல்லாத பலர் குடிக்கடிமையாகிக் கிடந்தார்களாம். சிலர் சேர்த்து வைத்த சொத்துக்களை தானம் செய்தார்களாம். இப்படி பல அதிசயங்கள் நடக்க வாய்ப்பிருக்கிறது...


**தினேஷ் — யாழ்ப்பாணம்**

**கை கூடா ஆசைக்கு ஒரு உதாரணம் சொல்லுங்களேன்?**

எவ்வளவு அழகா, குண்டா இருக்கிற குட்டி யானையைத் தூக்கி தன் இடுப்பில் வைத்து பருத்த கன்னத்தில் இறுக்கி ஒரு முத்தம் கொடுக்க முடியாத அம்மா யானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தமிழ்மொழியில் கலப்படம் செய்யாதீர்கள்

கனிமொழியாம் தாய்மொழியை
வாழ்த்தி வணங்கி
தனித்தமிழில் பேச,
எழுதக் கற்றுக்கொண்டு
பிறமொழிகள் பலகலந்து
பேசிடாமல்
பிறர் போற்ற இவ்வுலகில்
வாழ்வீர் இனிது
பெரும் ஆசையால்
நிஜப்பொருளை மாசுபடுத்தி
உருத்தெரியாமல்
கலப்பட்ம் செய்வதுபோல்
பொங்கு தமிழுக்கு கலப்படம்
செய்ய நினைப்பீராகில்
இங்கு இழுக்காகும் தமிழனுக்கே
அறிவீர் நீவிர்
தேனினும் இனிய
தமிழ்மொழியைக் கற்று
பாரினில் பட்டங்கள் பலபல பெற்று
ஊரினில் தமிழுக்குத்
தொண்டுகள் செய்து
வானினில் கொடிகட்டிப்
பறப்பாய் தமிழா இனிது
பாரெல்லாம் பரந்து பேசும்
தமிழ்மொழிக்கு
ஊரெல்லாம் ஒன்றுகூட்டி
விழாவெடுத்து
சீரெல்லாம் இனிது கொடுத்து
அணிகள் பூட்டி
தேரேற்றிச் சிறப்புச் செய்து
வணங்குவோமே

அ.இராஜரட்ணம்

## மாற்றம் வேண்டும்

சமரின் சலனங்கள் ஓயவில்லை
துயரின் சுவடுகள் காயவில்லை
இன அழிப்பின் இம்சை தீரவில்லை
இன்னுமா உயிர்க்கொலை
கரம் தாங்கும் படங்களோடும்
கண்ணீர் சிந்தும் விழிகளோடும்
தமிழ்ப் பெண்கள் அலைகின்றனர்
தரம் கெட்ட வாழ்க்கையா
பணத்துக்காய்ப் போதைப் பொருளா?
பசியாறிய துப்பாக்கி முனையா?
தமிழன் வாழ்வில் தொடர்
வேதனைகளா- நக்குத்
தண்ணீர்தான் தமிழன் நிலையா?
மாற்றம் வேண்டும் இளைஞர்களே
மாற்வேண்டும் கட்டாயமிது
தமிழன்னையின் தவப்புதல்வர்களே
தரங்கெட்ட வாழ்க்கை வீணானதோ

உடுவிலூர் கலா

## இமயம் தொட

சிரிப்பிற்கும்
பகட்டான பேச்சிற்கும்
மயங்கிடாதே!
உன்னை நோக்கிவரும்
பேச்சுக்களின் அர்த்தங்களை
உன்னுள் புரிந்து கொள்
நல்லது தீயது என்ற
தராசில் அதை நிறு
உன் மனத்தராசு
எப்போதும் பிழைவிடா!

மாவை. நா.கஜேந்திரன்

## மீள் எழுகையில் எஞ்சிய மனிதர்களின் ஒளிப்பயணம்

பேயெனச் சுழன்றடித்தது காற்று
வானுயர்ந்து உடைந்து சிதறியது அலை
அலைகளைப் போல என் மனமும்
கரைகளைப் போல அவன் மனமும்
புயல் வருவதாய் அம்மணமாய்
ஒருவன் கத்திப் போனான்
உடைபட்ட உணர்வுகளுடன்
ஊர் ஓடி வெளிறிற்று
நானும் ஓடினேன்- ஆனால்
அவன் சென்று கொண்டிருந்தான்
அதேபுயல் மீண்டும்
என்னுடன் இன்னொருவன்
நான் ஓடினேன்- ஆனால்
அவன் போய்க் கொண்டிருந்தான்
மீண்டும் புயல் எழுந்த பொழுதில்
என்னுடன் வேறொருவன்
அவர்களைப் பற்றி விசாரித்தேன்
புயல் விழுங்கிற்று என்றான்
நிலவை இரவு விழுங்கிய இன்று
நட்சத்திரங்கள் உருகி வழிந்த நேரத்தில்
அலைகளுக்கு அப்பாலான வெளி
இரைச்சல் மரணித்துப் போயிருந்தது
அலைகள் செத்துமிதந்தன
கருமை படர்ந்த மனவெளியில்
வெள்ளையடிக்கப்பட்டிருந்தது
தோளை அழுத்திய சிலுவைகளை
அகற்றிக் கொண்டு
அவனுடன் நானும்
சென்று கொண்டிருக்கிறேன்

ரிஷிகுமரன்

# மௌனத்தின் தேடல்- 258



## அன்பு வேண்டும்

தலைகாட்டும் வெள்ளாடே
நிலையான உன் அன்பிற்கு
விலை இல்லை
அலை கடல்போல் வாழ்வில்
நீ கப்பல் நாம் பயணிகள்
வாழ்க்கைப் பயணத்தில்
எல்லோரும் வழி தெரியாதவர்கள்
இச்சிறுவர்கள் போல்
துன்பமில்லாமலும்
தாய்போல் பாசத்தோடும்
வாழ்க்கைப்போரை
வெற்றி கொள்வோம்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## கவனம்

வஞ்சமில்லா உள்ளத்தின்
கள்ளமில்லா புன்னகையுடன்
அன்புத் தங்கை இவளுடன்
குதூகலமாய் விளையாடும் சிறுவனே
உன் தங்கையவள் புன்னகையை
பொக்கிஷமாய் காத்திட்வே
கண்ணிமையாய் இருந்திடு
ஏனெனில்...?
பிஞ்சுகளை சிதைத்து- அவர்கள்
தம்வாழ்வினை
சின்னாபின்னமாக்கிடவே
வெளியில் காமவெறிக்கூட்டம்
காத்திருக்கும் கவனம்

த.தனுஜா
அல்வாய்

## அண்ணன் தங்கை

அண்ணன் தங்கை நாங்கள்
அன்று அடித்துப் பிடித்து
விளையாடினோம்
சின்னச் சின்னதாய் செல்லச்
சண்டைகள் செய்தோம்
இன்று அந்நிய நாட்டில்
இருந்து அலைபேசியில்
அழைத்து ஆங்கிலத்தில்
பேசுகிறாள்- அண்ணன்
நான் மொழிபுரியாமல்
மௌனமாகின்றேன்
தினம் தினம்

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## எதிலும் இன்பம்

சில்லுருட்டி விளையாட
சின்னத் தங்கா வாடி கண்ணு
மெல்ல நடந்து வந்திடுவாய்
மெதுவாய் நானும் உருட்டிடுவேன்
பந்தும் பலதும் வாங்கிட
பணமில்லை அதிகமாய்
ஏழ்மை என்று எண்ணிடாதே
இதுவும் இனிய விளையாட்டுத்தான்

புவபாலன், அனிஞ்சில்

## சகோதர பாசம்

துன்பப் புயலில் சிக்கிய
அன்புத் தங்கை மகிழ்விக்க
ஆசை அண்ணா விருப்போடு
பக்குவமாய் ரயர் உருட்டி
விளையாட்டுக்காட்டுகிறான்
சகோதர பாசத்தோடு
வேசம்போடுமிக்காலத்தில்
நேசத்தோடு பழகி வழிகாட்டும்
தூய பண்பு நிலைக்கட்டும்

துரை, தென்மட்டுவில்

## குதூகலம்

உனது மகிழ்வினில்
எல்லை காண ஓர் இன்பம்
குப்பத்து வீடானாலும்
குடிசையானாலும்
உங்கள் குதூகலம்
குறையவில்லை
உண்டாலென்ன
உடுத்தலென்ன
உனது பருவத்தின் ஒரு
தெளிவு ஒரு நிறைவு
பட்சியாய்ப் பாய்கிறாள்
மின்னல் உன் சகோதரி
அவளையும் அவதானமாய்
அன்பாய், விழிப்பாய்
அழைத்துச் செல்
வழியில் பல குழிகள்

யு.சோபியா
விசுவமடு

## மழலையின் குரல்

உண்ண உணவு
இல்லையே
உறங்க வீடு இல்லையே
பேச யாருமில்லையே
அணைக்க
தந்தையும் இல்லையே
அன்புத் தங்கையே
ஓடிவா
என்னோ விளையாடி
மகிழ்வோம்

ஜே.சாருக்சி
பருத்தித்துறை

## மலரும் வசந்தம்

கூடு கலைந்த குருவிகளாய்
பாடிழந்த பறவைகளாய்
நாதியற்ற சிறுசுகளாய்
நறுமணமிழந்த மலர்களாய்
வெட்டை வெளியினிலே
கொட்டிக் கிடக்கும்
பொருளிடையே
இழுக்கும் துன்பத்துள்ளும்
அழுக்கு ரயர் அணைத்து
உருட்டி விளையாடும்
பிஞ்சுகளே!
மலரட்டும் உம் வாழ்விலேனும்
நிலையான வசந்தம்

மல்லாவிக் கஜன்

# மௌனத்தின் தேடல் -259



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 29.07.2015ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.


குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்த வாரம் "என்ரை பிள்ளைக்குப் பேய் பிடிச்சிருக்கு" எனும் விபரணம் வெளிவருகின்றது. இக்கதை தொடர்பிலான கேள்விகள் வாசகர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.**



"என்ரை பிள்ளைக்குப் பேய்பிடிச்சிருக்கு"

"இது ஏதோ பேய்தான் பிடிச்சிருக்கு" என்டு பக்கத்து வீட்டு கமலம் சொன்னதை மறுக்காமல் ஏற்றுக் கொண்ட செல்வியின் அம்மா, வேறு வழி தெரியாமல் அவளை விசேட பூசைக்காக அழைத்துச் சென்றார். அப்பிடி என்ன தான் நடந்திச்சு!

செல்வி 15 வயது பாடசாலை மாணவி! படிக்கும் பாடசாலையில் மயங்கி விழுந்தார். அத்துடன் வலிப்பும் ஏற்பட்டது. அவள் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டாள். அங்கு இரண்டு நாட்கள் சிகிச்சை பெற்று அங்கிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கும் அனுப்பப்பட்டாள். பின்பு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்ப்பட்டாள். அங்கு 5 நாட்கள் சிகிச்சை பெற்ற பின்பு வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டாள். நோய் நிதான அட்டையில் அவளுக்கு நெருக்கீடு இருப்பதாக எழுதப்பட்டிருந்தும் அவள் உளநல சிசிச்சைப் பிரிவுக்கு வழிப்படுத்தப்படவில்லை.

சிறுவயதிலேயே தந்தையை இழந்து, தாயின் பொறுப்பில் வளர்ந்து வருகின்ற செல்வி, வன்னி மாவட்டத்தில் குறிப்பிட்ட கிராமத்தில் வசித்து வருகின்றார்.

அம்மாவும் சிறுவயதிலிருந்து கல்வி கற்க முடியாத விபரமற்ற நிலையில், கிராம சடங்காசாரங்களில் தீவிர நம்பிக்கை கொண்டவர். அவரைப் பொறுத்தவரையில் செல்விக்கு, "பேய் தான் பிடிச்சிருக்கு"என்ற முடிவை அவர் எடுத்துவிட்டார். நோய்கள் பற்றியோ உளநோய் பற்றியோ அவருக்கு எந்த விபரமோ, அறிவோ இருக்கவில்லை.

தந்தையை இழந்த பின்னர், செல்விக்கு அந்த இழப்பு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதுடன், மனதளவில் அவள் நெருக்கடிகளுடன் இருந்தாள். அதிக பிடிவாதமும், தாயாருடன் சண்டையும் தொடர்ந்து கொண்டிருந்தது. கோபம் வந்தால் தொடர்ந்து அழுவாள். அழுகையைத் தொடர்ந்து மயங்கியும் விழுந்து விடுவாள். தொடர்ந்து வலிப்பும் ஏற்பட்டு விடும்.

ஆஸ்பத்திரியிலிருந்து வந்த அடுத்த நாளே, செல்விக்கு மீண்டும் வலிப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்து விட்டாள்! ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் இனி வேலையில்லை என்ற முடிவுக்கு வந்தாள். ஊரில் உள்ளவர்கள் என்ன செய்யலாம் என்று வழி சொன்னார்கள். பிரபல சாமியாரிடம் தொடர்ச்சியாக பூசைகள் செய்யப்பட்டன.

8 பூசைகள் நடத்தப்பட்டன. பல இடங்களில் இருந்து விசேடமானவர்கள் வரவழைக்கப்பட்டு பூசைகள் நடத்தப்பட்டன. ஆனால் வலிப்பு நோய் நின்றபாடில்லை. இந்தப் பூசைகளுக்காக ஒரு நீத்துப் பூசணிக்காய் 800 ரூபாவுக்கும் வாங்கப்பட்டது. பல ஆயிரம் ரூபா செலவளித்தாகிவிட்டது.

அம்மாவுக்கும் பணம் யார் கொடுப்பார்கள்? களைப்புற்று கவலையில் இருந்தார்.

"இவ்வளவு பூசை செய்தும் என்னுடைய பிள்ளைக்கு ஏன் இன்னும் நோய் குறையவில்லை?"

இந்நிலையில் மீண்டும் செல்வி ஒரு உள சமூகப் பணியாளர் ஊடாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு வழிப்படுத்தப்பட்டாள். திரும்பவும் வைத்தியசாலையில் தங்கியிருந்து அங்கு 8 நாட்கள் தங்கி சிகிச்சை பெற்றாள். இம்முறை தலைப்படம் (Electroencephalogram -EEG) எடுக்கப்பட்டு, அவளுக்கு வலிப்புநோய் (Epilepsy) இருப்பது உறுதிப்படுத்தப்பட்டு, அதற்கான மாத்திரைகள் வழங்கப்பட்டன.

மாதாந்தம் சிகிச்சைக்கு வரும்படியும் கூறப்பட்டு அவள் வீட்டுக்கு அனுப்பட்டார்.

வீட்டுக்கு வந்து சில நாட்களில் அம்மாவுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட செல்வி மீண்டும் மயக்கமுற்று, வலிப்பு ஏற்பட்டது.

"இவள் அதிக நேரம் யாரோ ஒருவருடன் கைத்தொலைபேசியில் கதைக்கிறாள்" இதுதான் அம்மாவின் குற்றச்சாட்டு. கைத்தொலைபேசியை பறித்த அம்மா, சிம் காட்டையும் ஒளித்து வைத்து விட்டார்.

மீண்டும் வலிப்பு ஏற்பட்டு விட்டதே! என்று அம்மா கலக்கமடைந்து இருக்க, நகர்ப்பகுதியில் இதை சுகப்படுத்தக் கூடிய புதிய வேறு மத சாமி ஒருவர் இருக்கிறார் என்று ஊரில் ஒருவர் கூறினார்.

"ஐயோ! என்ரை பிள்ளைக்கு பிடிச்சிருக்கின்ற பேயை கலைக்க வேண்டும். வாங்கோ, போவோம்"என்று செல்வியையும் கூட்டிக் கொண்டு அம்மா சென்று விட்டார். நகரில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியபடி ஒவ்வொரு நாள் காலையும் மாலையும் புதிய சமயகுருவின் மத வழிபாடு நடைபெற்றது. சுமார் 14 நாட்கள் ஓடி விட்டன.

பூசைக்கு சென்ற முதல் நாளே மதம் சம்பந்தமான புத்தகங்கள் வழங்கப்பட்டன.

"மனவெளி" வாசகர்களின் விமர்சனங்கள் தொடர்ந்தும் எதிர்பார்க்கப்படுகின்றன. உளநலம் சார்ந்த விடயங்கள் தொடர்பில் மக்கள் தேவையான அறிவைப் பெற்றுக் கொள்ளவும், தற்காலத்தில் நடைபெறுகின்ற சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் விழிப்புணர்வுடன் செயற்படவும், முற்பாதுகாப்பை ஏற்படுத்தும் நோக்குடனும் "மனவெளி" தன்னுடைய சேவையை தொடர்ந்து வழங்கும். துறை சார் நிபுணர்களின் பதில்களுடன் உங்கள் விமர்சனங்களையும் பிரசுரிக்க காத்திருக்கின்றோம்.

ஆதரவுக்கு நன்றி!

நிலைமையை விளங்கிய அம்மா அன்று பிற்பகல் தாங்கள் வீட்டுக்கு செல்லப்போவதாக கூறினார். ஆத்திரமடைந்த அவர், கொடுத்த புத்தகங்களை வாங்கி வீசி அவர்களை ஒருவகையில் பயமுறுத்தினார்.

ஒரு கிழமை சென்ற பின், "உங்கள் வீட்டில் இருக்கும் சுவாமிப்படங்களைச் தூக்கி எறிந்து விட்டு வாருங்கள்!"

அதன் பின்பு உங்கள் "வீட்டுக்கு நான் வந்து வழிபாடு செய்தால் தான் பேயை கலைக்க முடியும்" என்று கூறினார். அம்மா மறுத்து விட்டார். ஒரு மாணவியை கட்டாயமாக மத மாற்றம் செய்யவே இம் முயற்சிகள் நடைபெற்றன.

இந்த இழுபாட்டில் செல்வியும் அம்மாவும் இரண்டு மாதங்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்குச் செல்லவில்லை.

மீண்டும் ஒருவழியாக உள சமூகப் பணியாளர்களினால் கண்டறியப்பட்டு, திரும்பவும் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். தன்னுடைய மகளுக்கு ஏற்பட்ட நோய் பற்றிய உண்மை நிலை புரியாமல், வைத்தியசாலையில் அறிவுறுத்தப்பட்ட விடயங்களையும் சரியாகப் பின்பற்றாமல், நோயை மாற்றுவதற்கு சரியான வழிமுறைகளைக் கையாளாமல், தவறான நம்பிக்கைகளுக்குள் மூழ்கி தனது மகளின் வாழ்க்கையை, எதிர்காலத்தை திசைமாற்றி விட்டிருப்பார் செல்வியின் தாயார்.

தொடர்ச்சியாக யாழ்போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட செல்வி, உளநலமருத்துவப்பிரிவிலும், உள அறிவு (psycho education) மற்றும் வழிகாட்டலையும் பெற்றார்.

மலர்ந்த முகத்துடனும், தன்னம்பிக்கையுடனும் பாடசாலைக்குக் காலடி எடுத்து வைத்த செல்வியை பார்க்கும் போது திருப்தியாக இருப்பதாக பாடசாலை அதிபர் கூறினார். தான் புரிந்த தவறுகளை எண்ணி செல்வியின் தாயும், உண்மை நிலையை உணர்ந்து கொண்டார். நோய்களுக்கு மருத்துவ உதவியை நாட வேண்டும் என்ற புரிதலுடன் அவர் மற்றவர்களுக்கும் அதைப் புரியவைத்தார்.

(குறித்த உண்மைச்சம்பவ விபரிப்பில் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன)

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk Face book : Shanthiham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'திசன்'



புதைந்த நிலையில் தாழி

# ஈழத்தைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் இந்தியாவில்...

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி' - என்று சொல்லிக்கொள்வது வெறும் பெருமை மட்டுமல்ல. உண்மையும் அதுதான்!

தமிழர் நாகரிகம், சிந்து சமவெளி நாகரிகம் உடபட ஏனைய அனைத்து நாகரிகங்களுக்கும் முற்பட்டது என்று சொல்லி வருவது தமிழ் இலக்கிய பாடல்களை வைத்து மட்டுமல்ல. ஆதிச்ச நல்லூரில் கிடைத்த ஈமத்தாழிகள் பல ஆயிரம் ஆண்டுகள் பழைமையானவை என ஆய்வாளர்கள் நிரூபித்துள்ளனர்.

இந்த நிலையில் மதுரை அருகில் சிவகங்கை மாவட்டத்துக்கு உட்பட்ட கீழடி எனும் கிராமத்தில் 2 ஆயிரத்து 200 வருடங்கள் பழைமையான நகரத்தின் பகுதிகளை இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த ஆய்வுகள் முடிந்த முடிவுகள் அறிவிக்கப்படும் போது தமிழர்கள் தலை நிமிர்ந்து பெருமைப் பட்டுக் கொள்ளலாம்!

இந்த ஆய்வை மத்திய தலைமை அகழ்வாராய்ச்சியாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் தலைமையிலான ஆய்வாளர்கள் செய்து வருகிறார்கள். "தென் தமிழகத்தின் முக்கிய நீர் ஆதாரமாக விளங்கும் வைகை நதி, மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடரில் உள்ள வெள்ளிமலையில் இருந்து உற்பத்தியாகி தேனி, மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் பாய்கிறது. தொல்லியல் வளமிக்க பகுதியாக விளங்கினாலும் கூட இதுவரை வைகை நதி பள்ளத்தாக்குப் பகுதியில் அகழாய்வு ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

2013 - 14 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வில் சுமார் 293 பல்வகை தொல்லியல் எச்சங்கள் கொண்ட ஊர்கள் வைகை நதி பள்ளத்தாக்குப் பகுதியில் அடையாளம் காணப்பட்டன. அவற்றுள் மதுரைக்கு அருகில் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள கீழடி, தொல்லியல் அகழாய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த ஊர் மதுரையிலிருந்து 12 கிலோ மீற்றர் தொலைவில் தென் கிழக்குத் திசையில் இராமேஸ்வரம் செல்லும் பண்டைய வணிகப் பாதையில் வைகை நதியின் தென் கரையில் அமைந்துள்ளது.

தற்போதைய கீழடி ஊரிலிருந்து கிழக்கே ஒரு கிலோமீற்றர் தொலைவில் மணலூர் கண்மாயின் மேற்கரையில் 'பள்ளிசந்தை திடல்' என்றழைக்கப்படும் தொல்லியல் மேடொன்று உள்ளது. தரையில் இருந்து சுமார் 1 - 2 1/2 மீற்றர் உயர்ந்து காணப்படும் இந்த மேடு, தற்போது தென்னந்தோப்பாக உள்ளது. முன்பு நிலத்தினை உழும் போது பலவகையான மட்கலன்கள், தொல் பொருட்கள், பெரிய அளவிலான சுட்ட செங்கற்கள் மற்றும் கூரை ஓடுகள் இங்கு கிடைக்கப் பெற்றுள்ளன. இந்த மேட்டின் கிழக்கே சுமார் 2 கிலோ மீற்றர் தொலைவில் கொந்தகை எனும் ஊருக்குச் செல்லும் பாதையில் இதனோடு தொடர்புடைய ஈமக்காடும் அமைந்துள்ளது. இங்கு பல ஈமத் தாழிகள் புதைந்த நிலையில் காணப்படுகின்றன.

மார்ச் மாதம் முதல் நடைபெற்று வரும் அகழாய்வில் கி.மு. முதல் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த தொல்லியல் எச்சங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் பெரிய அளவிலான சுட்ட செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்ட கட்டட பகுதிகள், பெரிய கூரை ஓடுகள், முத்து மணிகள், கண்ணாடி சூது பவளம், பளிங்கு மற்றும் பல்வகையான கல்மணிகள், சங்கு வளையல்கள், சுடு மண் பொம்மைகள், அம்மி, குழவி, இரும்பு, செப்புப் பொருட்கள் போன்றவை அடங்கும். இங்கு சுட்ட செங்கற்களை வைத்து வீட்டினுள் தளம் அமைத்திருப்பது தெரிய வ்ருகிறது. மேலும், இது வரை தமிழகத்தின் எந்தப் பகுதியிலும் அகழாய்வின்போது முத்து மணிகள் கிடைக்கப் பெற்றதில்லை.

இரும்புத் தகழிகள் கிடைத்திருப்பதால் இங்கு நெசவுத் தொழில் செய்த மக்கள் வாழ்ந்திருப்பர் என்பது தெரிகிறது. மேலும் எழுத்துகள் அல்லாத குறியீடுகளும் சில கிடைத்துள்ளன. இந்தக் குறியீடுகள், இங்கு வாழ்ந்த பல சமூகக் குடிகளைக் குறிப்பன என அறிஞர்கள் சொல்கிறார்கள்.



மண்பாண்டங்கள்

அறையின் உட்புறம்

மேலும், ரோமானிய நாட்டுடன் இந்த இடம் வணிகத் தொடர்பு கொண்டிருந்ததற்கான சான்றளிக்கும் வகையில் வணிகர்களால் கொண்டு வரப்பட்ட 'ரூலட்' மற்றும் 'அரிட்டைன்' வகை மட்பாண்டத் துண்டுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஒரு சாரார், இந்த வகை மட்பாண்டங்களை இந்தியாவிலேயே பல்வேறு பகுதிகளில் உருவாக்கினர் என்றும் சொல்கின்றனர். மேலும், வரலாற்றுத் தொடக்கக் காலத்தைச் சேர்ந்த கறுப்பு - சிவப்பு மட்பாண்ட வகை, வெள்ளை வண்ணம் பூசப்பட்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்ட வகை மற்றும் ரசக் கலவை பூசப்பட்ட மட்பாண்ட வகையும் அகழாய்வில் கிடைத்துள்ளன. இது தவிர்த்து, தனி நபர்களின் பெயர்களுடன் தமிழ் பிராமி எழுத்துக்கொண்ட மட்பாண்ட ஓடுகள் இங்கு கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக 'திசன்' என்ற பெயர் பொறிக்கப்பட்ட பாண்டம் கிடைத்துள்ளது. இந்த 'திசன்' என்ற பெயர் கொங்குப் பகுதிகளில் செய்யப்பட்ட சில ஆய்வுகளிலும் கிடைத்துள்ளன. மேலும் இலங்கையில் உள்ள பிராமியக் கல்வெட்டுகள் பலவற்றில் இந்தப் பெயர் கண்டறியப்பட்டுள்ளது. இது வடநாட்டுச் சொல்லாக இருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. மேலும் விரிவான அகழாய்வுக்குக் காலஅவகாசத்தை மேலும் ஒரு வருடம் நீட்டித்திருக்கிறோம். இந்த ஆய்வு, வரலாற்றில் சில மாற்றங்களை ஏற்படுத்தும் என எண்ணுகிறோம்" என்றார் அமர்நாத் ராமகிருஷ்ணன்.





அகழ்வு செய்யப்பட்ட நகரத்தின் ஒருபகுதி

தமிழகத்தின் பாரம்பரியம் உணர புதிய வாசல் திறககப்படுகிறது!

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லத்தான் நினைக்கின்றேன்



சஜித்தாவிற்கு எரிச்சலாக இருக்கிறது. அவளுடைய மனதில் இனந்தெரியாத ஒரு குழப்பம் தோன்றிச் சில நாட்களாக அவளைப்படாத பாடு படுத்துகிறது. முகத்தில் ஒரு இறுக்கம். செயல்களில் நிதானமில்லை. அவளுக்கு என்ன வந்துவிட்டதென்று அவளுக்கே தெரியாது.

சிரிப்பும் குதியாட்டமுமாக திரிந்த மகளுக்கு என்னவாயிற்றென்று அம்மா தவித்தாள். இப்பத்தைய பிள்ளையளுக்குக் கண்டறியாத ஒரு காதல் வியாதி. அப்படி ஏதும் இவளைத் தொற்றிக் கொண்டதோ? அக்கா தர்சினிக்கும் ஒன்றும் விளங்கவில்லை.

தர்சினி 6 ஆண்டுகளுக்கு முன் சுரேந்தரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டாள். காதலிப்பவர்களுக்கு அவர்களுடைய வீடுகளில் எதிர்ப்பு அலைகள் ஆரம்பத்தில் கிளம்புகின்றன. சில விரைந்து கரையில் மோதிச் சிதறி இல்லாமற் போகின்றன. சிலவேளை சில அலைகள் சுனாமியாகிச் சம்பந்தப்பட்டவர்களைப் புரட்டிப் போட்டுவிடுகிறது.


தர்சினியின் விடயத்தில் மெதுவாகக் கிளப்பப்பட்ட கிசுகிசுப்பும் வலுவற்றுப் பிசுபிசுத்துப் போனது. இருமனங் கலந்தாற் திருமணம்தான் என்ற முடிவு அவளுக்கு மிகச் சரியாகப் பொருந்தியது. இரண்டு வீட்டுக்காரர்களினதும் பச்சைக்கொடிகள் தர்சினிக்கு மஞ்சள் குங்குமத்தையும் மல்லிகைப்பூவையும் வாங்கித்தந்தன. சஜித்தா அப்போது பத்தாம் தரத்தில்தான் படித்துக்கொண்டிருந்தாள். அக்காவின் திருமணக் கொண்டாட்டம் அவளுக்கு மிகவும் உவப்பானதாய் இருந்தது.

தன்னுடைய தோழிகளையும் சேர்த்துக்கொண்டு வந்து அமர்க்களப்படுத்திவிட்டாள். இப்போது நிலைமை மாறிவிட்டது . சஜித்தா உயர்தரப்பரீட்சையும் எழுதிவிட்டாள். பல்கலைக் கழகம் செல்வதற்கு வெட்டுப் புள்ளிகள் கட்டுப்பாடு செய்துவிட்டன. அதனால் தொழில் நுட்பக் கல்லூரியில் பட்டயப் படிப்பொன்றைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

அக்காவின் திருமணத்தின் பின்னர் ஏழு அல்லது எட்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. அக்காவின் மகள் சரணிக்கும் 6 வயது ஆகிறது. சரணியும் ஆரம்பப் பாடசாலைக்குப் போகத் தொடங்கிவிட்டாள்.

சரணி பிறந்த கையோடு அக்காவிற்கு அதிர்ஷ்டம் அடிக்கத் தொடங்கிவிட்டது. இதுவரையில் ஒழுங்கான வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்த அத்தான் சுரேந்தர் சுவிசுக்குப் போகிற விசா அதிக செலவில்லாமல் கிடைத்துவிட்டது. அவர் சுவிசுக்குப் பறந்து போனதும் அக்காவின் நடவடிக்கைகளில் படிப்படியாக மாற்றங்கள் தலையெடுக்கத் தொடங்கியிருந்தன.

கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொடுக்கும் என்பார்கள். அது என்னமோ தெரியவில்லை. அத்தான் (f)பிளைற் எடுத்து ஒரு மாதும் கூட ஆகியிருக்காது. வெளிநாட்டுக்காசு வங்கிக் கணக்கிற்கு வரத்தொடங்கிவிட்டது. நெல்லுக்கு இறைத்தநீர் புல்லுக்கும் பொசிவது போல அத்தானின் காசு சஜித்தாவுக்கும் கொஞ்சம் கிடைக்கத் தான் செய்தது. தான்மட்டும் உடுத்துப் படுத்திக்கொண்டு திரிந்தாள். ஊர்ச்சனத்தின் வாய் சும்மா இருக்காது என்பது தர்சிக்குத் தெரியும். அரை மனத்தோடு அம்மாவையும் சஜித்தாவையும் கவனித்துவந்தாள்.



இப்போது பெரியவள் ஆகிவிட்ட சஜித்தாவைக் கட்டுப்பாடாக வைத்திருக்க வேண்டிய தேவையும் கடமையும் அம்மாவை விட அக்காவிற்கே அதிகமாக இருந்தது. வீட்டுப் படலைக்கு வெளியே போனால் எதுவும் நடக்கலாம். அவ்வளவுக்கு ஊரும் உலகமும் கெட்டுப் போய்க்கிடக்கிறது. சஜித்தாவிற்கு திருத்தம் சொல்லப்போய் அக்காளும் தங்கையும் அடிக்கடி சண்டை போட்டுக்கொள்வார்கள். ஆனால் சில நிமிடங்களில் அதை மறந்து கொண்டாடத் தொடங்கிவிடுவார்கள். சஜித்தா ரெக்கிற்குப் போகாத நேரங்களில் சரணியை போட்டு வாங்குவது இருவருக்குமே விருப்பமானதாய் இருந்தது.

சஜித்தாவின் அப்பா நாட்டில் யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் செல்லடிபட்டு இறந்து போனார். இரண்டு பெண் பிள்ளைகளையும் பாதுகாப்பாக வளர்த்தெடுக்கும் பொறுப்பு அம்மாவின் தலையில் ஏறியது. நகரிலுள்ள கடையொன்றில் கணக்கெழுதுபவராக அப்பா வேலை செய்தார். பெரிதாகப் பணம் எதுவும் தேடி வைக்கவில்லை. இப்பொழுது குடும்பத்தைக்கொண்டு செல்லப் பணம் தேவைப்படுகின்றது. அதனால் அம்மா ஒரு பல்பொருள் அங்காடியில் வேலைக்குப் போகிறாள். வீட்டில் உதவிக்கு யாரும் இல்லை. அதனால் தனது அம்மாவை கூப்பிட்டுத் தன்னோடு வைத்துக்கொண்டாள்.

அப்பா இல்லாத பிள்ளைகள் என்பதால் அம்மம்மாவின் அக்கறையும் பாசமும் அவர்கள் மீது பொங்கி வழிந்தது. நன்றாகப் படித்து உத்தியோகம் பார்த்தால்தான் வருங்காலத்தில் நல்லபடியாக வாழலாம். அப்பாவும் இல்லாமல் அம்மா எவ்வளவு கஷ்டப்படுகிறார்? அவளுக்காக என்றாலும் நீங்கள் படிக்க வேணும். இப்பத்தைய பிள்ளைகள் எல்லாம் கையில் போனை வைச்சுக் கொண்டு அலைஞ்சு திரியுதுகள். சிலதுகள் பாவம் பழியையும் தேடிக் கொண்டு வாழ்க்கையையே மண்ணாக்கிப் போடுதுகள். அம்மாவின் அன்றாட அபிஷேக ஆராதனைகள் மெல்ல மெல்லப் பிள்ளைகளின் மனதில் உறுதியையும் ஊக்கத்தையும் கொடுத்தன. அக்கா தர்சினி நன்றாகப் படித்து ஒரு உத்தியோகத்திலும் சேர்ந்து விட்டாள்.

அதைத்தொடர்ந்து வாழ்க்கைத் துணையையும் தேடிவிட்டாள். அதன் பிறகு நடந்தவைகளைத்தான் இங்கே பார்க்கின்றோம். வெளிநாட்டுக்குப் போன அத்தான் இந்த 6 வருடங்களில் நிறையச் சம்பாதித்துவிட்டார் போலிருக்கிறது. அவரால் தர்சினியை பிரிந்து இனியும் இருக்கமுடியாது. அதைவிட மகள் சரணியை நேரில் காணவேண்டும் என்ற ஆசை சில நாட்களாகவே அவரைப் பாடாய்ப்படுத்திக்கொண்டிருந்தது பணமா? பாசமா? என்ற போராட்டத்தில் பாசம் வென்றது. அத்தான் சுரேந்தரும் ஊருக்கு வந்துவிட்டார். வந்தவர் நேராக தர்சினியிடமே வந்தார். ஒரேயடியாக அங்கேயே ஜாகை போட்டு தங்கிவிட்டார்.

சஜித்தாவிற்கு வந்த பிரச்சினைக்கு இதுதான் காரணம். அவள் இப்போது பெரிய பெண். வாழ்வின் கனவுகளோடு உணர்வுகள் மோதுகின்ற பருவம். சிறிய அசாதாரண நிகழ்வுகள்கூட நரம்புகளை உணர்வூக்கம் செய்யக்கூடிய பருவம். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? 6 ஆண்டுகளாக அடங்கியிருந்த ஆசை வெள்ளம் பிரவாகமாகப் பாயத் தொடங்கியது. வயது வந்தவள் ஒருத்தி இருக்கிறாள் என்ற விவஸ்தை இல்லாமல் கணவனும் மனைவியும் ஓவராகவே பழகிக்கொண்டார்கள். சரணிகூட சில வேளைகளில் கவனிக்கப்படாதவளாய் போயிருந்தாள். அம்மாவிற்கு சஜித்தாவின் பிரச்சினைகள் புரிகிறது. ஆனால் தர்சினியிடம் எப்படி சொல்வதென்று சங்கடப்பட்டாள்.

எப்படியும் ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்கட்டும். அப்போது சொல்லிவிடலாம். சிலவேளை தர்சினி தன்னைத் தவறாக நினைத்துவிடவும் கூடும். பல அரிய சந்தர்ப்பங்கள் இந்தத் தயக்கத்தில் தட்டுப்பட்டுப் போயின. இப்போது நிலைமை கைக்கு அடங்காமல் எகிறிக் குதித்து ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கிவிட்டது. சஜித்தா பதுங்கியிருந்து செய்யும் சினப்பர் தாக்குதல்களை அடுத்தடுத்து நடத்தத் தொடங்கிவிட்டாள். வாய் வார்த்தைகளில் தொடங்கிப் பொருட்களைப் போட்டு உடைப்பதையும் தாண்டி நேரடி மோதல்வரை வந்துவிட்டாள். மருமகனிடம் கூச்சநாச்சமின்றி எப்படிச் சொல்வதென்று அம்மாவுக்குப் புரியவில்லை. தர்சினியிடம் கூறினால் விடயம் அவருக்குப் போய்ச் சேரும் அன்றைக்கு அலுவலகத்திலிருந்து தர்சினி வரும் வரை பேசவேண்டியவற்றை தயார் பண்ணிக் கொண்டார்.

சரணி! எங்கே அப்பாவைக் காணோம்? என்று கேட்டுக் கொண்டே தர்சினி உள்ளே வந்தாள். தன்னைக் கவனிக்கவில்லையே என்பதில் சரணிக்கு ஏமாற்றம். உடுப்பு மாற்றிய பின்னர் கைகால்களை அலம்பிக்கொண்டு அடுக்களைக்குள் வந்தாள்.

அம்மா தேநீரை தயாராக வைத்திருந்தாள். அது அம்மா தயார் நிலையில் இருக்கிறாள் என்பதன் அடையாளம். தர்சினியின் பின்னால் சரணியும் வந்தாள். அங்கே கிடந்த பிஸ்கட்டை கடித்தபடியே தேநீரைக் குடித்தாள்.

அம்மா மெதுவாக ஆரம்பித்தாள். மெல்ல மெல்ல வாழைப்பழத்தில் ஊசியைப்பு குத்தினாள். அப்பம் என்றால் பிட்டுக்காட்டவா வேண்டும். பருகிய தண்ணீரோடு சேர்த்து அம்மா சொல்பவற்றையும் பருகினாள்.

தர்சினிக்கு A+B=C என்ற அட்சரகணிதக் கோவை அத்துப்படி ஆனது. ஒரு கட்டத்தில் அவளால் எதுவும் சொல்லமுடியாமல் போயிற்று.

அதுதான் தர்சினி சொல்லுறன் நீ உன்ர மனுசன் வீட்டில கொஞ்ச நாளைக்குப் போய் இருக்கலாம் தானே. அங்க மாமாவும் மாமியும் மட்டும் தானே இருக்கினம். கொஞ்சம் கிராமப்புறம்தான். ஆனால் எல்லா வசதியும் செய்துவைத்திருக்கினம்.

இஞ் சினைக்கு ஒரு வீடு வசதியா வாடகைக்கு கிடைச்சால் எடுத்துக்கொள்ளலாம்... என்ற தன்னுடைய மனக்கருத்தையும் முன்மொழிவாக சொல்லி நிறுத்தினாள்.

தர்சினி தேநீரைக் குடித்து முடித்தாள். சரணியையும் இழுத்துக்கொண்டு தனது அறைக்குப் போனாள். வெறுமையாக கிடந்த ஒரு ரவலிங் பாக்கை எடுத்துப் பிரித்தாள். உடுப்புக்களை அடுக்கத் தொடங்கிவிட்டாள். அடுத்த

## சிறுகதை

நாள் அதேபோன்ற ஒரு மாலை நேரம் ஆட்டோ ஒன்று வாசலில் வந்து நிற்கின்றது. இரண்டு, மூன்று ரவலிங் பைகள் ஏற்றப்பட்டது. தர்சினி, கணவன், சரணி மூவரும் அம்மாவுக்கும் சஜித்தாவுக்கும் கைகாட்டி பாய் சொல்லி ஆய் கொடுத்து விடைபெற்றுக் கொண்டார்கள்.

ஆட்டோ போவதை கண் வெட்டாமல் சஜித்தா பார்த்துக் கொண்டு நின்றாள். வாசல்வரை போய்வழி அனுப்பிவிட்டு அம்மா வந்தாள். வீட்டுக்கதவோடு சாய்ந்தபடி நின்ற சஜித்தாவின் முகத்தைப் பார்த்தாள்.

அவளுடைய கண்களில் நீர் கட்டி துளி ஒன்று கீழே சிந்துவதற்கு தயாராக இருந்தது. என்ன இருந்தாலும் இரத்த சம்பந்தம் அல்லவா? இப்போதைக்கு அவளுடைய ஆற்றாமையில் அல்லது ஆதங்கத்தின் வெளிப்பாடாக ஒரு நாடகம் அரங்கேறியிருந்தது.

(யாவும் கற்பனையே)

சு.சிவராசா,
நாவற்குழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் மறுபக்கம்

பெத்த பிள்ளைகளை ஒவ்வொன்றாகக் கரை சேர்த்தாயிற்று!... இனியென்ன! இருக்கும் வரைக்கும் இருந்திட்டு பேசா மல் சிவனேயெண்டு போய்ச் சேர வேண்டியதுதான்...என்று நினைத்திருந்த கனகத்திற்கு, இப்பொழுது புதிதாக ஒரு பிரச்சினை எழுந்திருந்தது.

அவளின் இரண்டாவது மகளின் கணவன், தனக்குச் சீதனம் தந்தது போதாது... மற்றைய பெண் பிள்ளைகளுக்குக் கொடுத் தது போன்று தனக்கும் சம நிலையாகத் தர வேண்டும்...என ஊரில் உள்ள ஓர் இரண்டாவது நபர் மூலம் தகவலைச் சொல்லிவிட்ட நாளில் இருந்து கனகத்தின் நிம் மதி குலைந்தே போய் விட்டிரு ந்தது.

"இஞ்சை பாருங்கோ... மரு மோனுக்கு என்ர பிள்ளையைக் கட்டிக் குடுக்கேக்கை, எல்லாம் அறப்பேசி உறக்கொண்டுதான் குடுத்தது. பன்னிரெண்டு லட்சம் காசு, ஒன்பது பவுண் நகை, பிள் ளைப்பேற்றுச் செலவுகள்... எண்டு எல்லாம் நாங்கள்தான் பார்த் துக் குடுத்ததும் செலவழிச்சதும். அவளைக் கட்டிக்குடுத்து, மூண்டு பிள்ளையள் பிறந்தாப்போல, அதுவும் பதினைஞ்சு வருசத்துக் குப் பிறகு, பேந்தும் சீதனம் காணாது... தாஎண்டு நிற்கிறது மருமோனுக்கு நல்லதில்லையெண்டு போய்ச் சொல்லுங்கோ..."

தகவல் கொண்டு வந்த இரண் டாம் நபருக்கு, கனகம் ஆத்திரத் தகிப்பினூடே சொல்லி அனுப்பி விட்டாள்.

வந்தவரும் அவள் கூறியதை உள்வாங்கிக் கொண்டு சென்று விட்டார்.

அவளுக்கு இன்னமும் சினம் அடங்கியபாடாயில்லை.

"சே... என்ன ஆம்பிளையள் உதுகள்...? உழைக்கிறதுக்கு உடம்பில உசார் இருந்தும் கட்டின பெண் டாட்டியை வீட்டுக்கு அனுப்பி, திரும் பவும் காசு கறக்கிற உந்த ஆம்பிளையளுக்கெல்லாம் கடவுள் என்னத்துக்கு முகத்தில் மீசையை முளைக்க விட்டாரோ தெரிய வில்லை..."

கனகத்திற்கு இப்போ தெல்லாம் மனதைத் துக்கம் அமுக்குவதால் இரவில் தூக்கம்கூட ஒழுங் காக வருவதில்லை. மருமகனைப் பற்றி கனகத்திற்கு நன்கு தெரி யும். உழைக்கிற காசே குடிக்கிற துக்குக் காணாத நிலையில், ஊட் டச்சத்துக் குறைந்து ஒல்லியான தோற்றத்துடன் நாளாந்தம் உபத் திரவங்களுடன் வாழும் தனது இரண்டாவது மகளை நினைக்க அவளால் தன் மனக் கொந்தளி ப்பை அடக்க முடியாமல் இருந் தது.


எங்களிட்டை என்ன கிடக்கெண்டு இந்த மனுசன் இப்படி நிற்குது... என அவள் தனக்குள் பல முறை சிந்தித்துப் பார்த்த போதிலும் அதற்கான பதிலை அவளால் கண்டுகொள்ள முடியவில்லை.

கடைசி மகள் தன்னோடு இருப் பதால் இருக்கிற காணியும் வீடும் கடைசிப் பிள்ளைக்குத்தான் போய்ச் சேருமென்ற மன ஆத்திரத்தின் வெளிப்பாடோ...?

அல்லது கள்ளுக்குடிக்கப் போற தவறணைக் கொட்டிலில் ஓசியில் குடிக்க வாற கூட்டாளிமார் அவ னிடம் காசில்லையென்பது தெரிந் ததும் இப்படியான ஒரு செயற் பாட்டைச் செய்வதன்மூலம் உனக் குக் காசுவரும். எல்லாரும் சேர்ந்து குடிக்கலாம்... என்று உசுப்பேத்தியதன் விளைவோ...?

இவ்வாறாக அவளிடமிருந்து எழுந்து கொண்டிருந்தன சந்தேக உணர்வுகள்.

மருமகன் சீதனம் கேட்ட நாளில் இருந்து கனகத்தால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. அந்தரப் பட்டுக் கொண்டிருந்தது அவளின் மனம்.



இரண்டு வாரங்களின் பின் ஒருநாள்...

மாலைக்கருக்கலில் சந்தியில் உள்ள கடைக்குச்சென்று மண்ணெண்ணெய் வாங்கிக் கொண்டு திரும்பி வந்த கனகத்திற்கு அதிர்ச்சி காத்திருந்தது வீட்டில்.

"வந்தால் நான்கேட்ட சீதனக் காசோடை வா... இல்லாட்டி இஞ் சாலிப் பக்கம் வரப்படாது... வந் தியோ நடக்கிறதே வேறை..."

கனகத்தின் இரண்டாவது மகள், தன் புருஷன் தனக்குக்கூறி விட் டதை அழுதழுது கூறுகிறாள்.

வீட்டிற்கு ஒரு தண்டச் சோறு வந்துவிட்டதென்ற மனக் கடுப்பில் தன் தாயைக் கோபத்துடன் பார்த்துக்கொண்டு நின்றாள் கடைசி மகள்.

"நாளைக்கு விடிய நடவடி பொலிஸ்டேசனுக்கு..." அழுது கொண்டு நிற்கும் மகளைப் பார் த்து ஆத்திரத்துடன் கூறிவிட்டு, வீட்டிற்குள் நுழைகிறார் கனகம்.

மாலைக்கருக்கல் மெல்ல மறைந்து கொள்கிறது. நிலப்பரப்பை இருள் ஆக்கிரமிக்கத் தொடங்குகிறது.

**பிரியா பரந்தாமன்,**
**கைவேலி.**

# பிள்ளைகளை ஒழுக்கமாக வளர்க்காவிட்டால்'

ஒரு பெண்ணை ஆபாசமாகப் படம் எடுத்ததால், அப்பெண்ணின் குடும்பம் மட்டுமின்றி, படம் எடுத்தவனின் குடும்பமும் எப்படியெல்லாம் சின்னாபின்னப்படும் என்பது தான், 'பாபநாசம்" படத்தின் கதை. மலையாளத்தில் மோகன்லாலை வைத்து **த்ரிஷ்யம்** என்கிற பெயரில் தான் எடுத்த வெற்றிப் படத்தை அப்படியே தமிழ்ப்படுத்தியிருக்கிறார் இயக்குநர் ஜீத்து ஜோசப்.



## இது! சினிமா இல்லை வாழ்க்கை

கண்ணை இமை காப்பது போல குடும்பத்தைக் காத்து வருகிறார், கேபிள் டி.வி நடத்தும் கமல். சந்தர்ப்ப சூழலில், அவரின் மூத்த மகள், ஆபாசப் படம் எடுத்தவனை தன் அம்மாவின முன்னிலையில் கொன்று விடுகிறாள். படிப்பறிவு கம்மி தான் என்றாலும் சினிமாவை சுவாசமாகக் கொண்ட கமல், சினிமாக்களில் வரும் காட்சிகளை வைத்தே கொலைப் பழியில் இருந்து குடும்பத்தை பொலிஸாரிடமிருந்து சாதுர்யமாக எப்படி காப்பாற்றுகிறார் என்பதே மிச்ச சொச்ச ஆட்டம்! 'நம்ம பையனுக்கு பிரைவஸி வேணாமா?' என பொலிஸ் ஐ.ஜியாக வரும் அம்மா, வக்காளத்து வாங்கும்போது, 'தப்பு பண்றவங்கதான் பிரைவஸி கேட்பாங்க!' என்று கணவர் சொல்வது, சாட்டையடி.

பொலிஸ் சித்திரவதைக்குப் பிறகு, 'ஏங்க... பேசாம நாமதான் செஞ்சோம்னு ஒப்புக்கிட்டு சரண் அடைஞ்சிடலாங்க!' என குற்றம் குறுகுறுக்க கௌதமி கேட்கும்போது, 'இதுவே நம்ம பொண்ணுக்கு ஏதாவது ஆகி இருந்தா அந்த ஐ.ஜி என்ன பண்ணி இருப்பாங்க? பையனை தப்பிக்க வைக்கத்தான் யோசிப்பாங்க. அவங்க அவங்களுக்கு அவங்க புள்ளைங்கதான் முக்கியம். எனக்கு என் குடும்பம் முக்கியம்' என்ற கமலின் பதில்தான், படத்தை நகர்த்தும் ஜீவன்.

'அழகான குருவிக் கூடுபோல கட்டிய கூட்டை ஒரு தேவையில்லாத விருந்தாளி அழிக்கப் பார்த்தார். அவரைப் போகச்சொன்னோம். கேட்கலை. வேணும்னு செய்யலை. விபத்தா நடந்திருச்சு. மன்னிச்சுக்கோங்க. என் பாவத்தை கடைசி காலம் வரை இந்த பாபநாசம் நதியில மூழ்கி கரைச்சிக்குறேன்!' என முகத் தசைகள் ஆட ஐ.ஜி தம்பதியிடம் கமல் பாவ மன்னிப்புக் கேட்கும் காட்சி, கலங்க வைக்கிறது!

க்ளைமாக்ஸ் முடிச்சை பொலிஸாரிடம் மட்டு மல்ல, குடும்பத்தினரிடமோ, திரையில் வேறு யாரிடமுமோ சொல்லாமல், ரசிகர்களின் பார்வைக்கு மட்டும் காட்டி முடித்திருப்பது நச்!

பெண்கள் எப்போதும் பாதுகாப்பு வளையத்துக்குள் இருந்துகொள்ள வேண்டும் என்கிற கிளிஷேமெசேஜை தாண்டி, ஆண் பிள்ளைகளைப் பெற்றவர்களுக்கும் எச்சரிக்கை மணி அடித்திருக்கும் 'பாபநாசம்', பெண்ணைப் பெற்ற... பிள்ளைகளைப் பெற்ற அனைவருமே தரிசிக்கவேண்டிய ஒன்று!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விசித்திரமானதும் நெருக்கடி மிக்கதுமான ஒரு தேர்தலையே தற்போது நாடு எதிர்கொள்கிறது!

வருகின்ற ஆகஸ்ட் பாராளுமன்ற பொதுத்தேர்தலானது மிகுந்த நெருக்கடி மிக்க ஒன்று மட்டுமல்லாமல் இந்நாட்டினது தேர்தல் வரலாற்றில் என்றுமே எதிர்கொள்ளப்படாதவிதமான விசித்திரமிக்க ஒன்றாகவுமிருக்கிறது.

தேர்தலுக்கான வேட்புனுக்கோரலுக்கு முன்னரே இடம்பெற்றுவரும் நிகழ்வுகள் திகைப்பூட்டுபவையாகவே இருக்கின்றன. ஜனாதிபதி சிறிசேன அவர்கள், ஜனவரி 8 ஆம் திகதியன்றே ஊழலை ஒழிப்போமென்ற ஆரம்பர அறைகூவலை விடுத்திருந்தார். ஊழல் மோசடிப் பேர்வழிகளை விரட்டியடிப்போமென்ற பகிரங்க அழைப்பினை விடுத்திருந்த அவர் தற்போது அவர்களையே தமது பக்கம் திரும்பவும் கொண்டு வருவதாகவே தோன்றுகிறது!

'SLFP' யின் நீண்டகாலப் பொதுச் செயலராக இருந்த மைத்திரிபால சிறிசேன அவர்கள், கட்சி தலைவரும் நாட்டின் முன்னைய ஜனாதிபதியாகவுமிருந்த மகிந்த ராஜபக்ச கட்சியியையும் அது சார்ந்த ஆட்சியினையும் சொந்த குடும்ப உறுப்பினர்கள் சூழ குடும்ப ஆட்சி முறையில் ('Nepo-



tism') ஊழல் மிக்கவையாகவே நடத்தி வருவதாக எட்டு மாதங்களுக்கு முன்னரே உறுதியும் அறுதியுமாக பிரகடனப்படுத்தியதுடன் தனது கட்சி உறுப்புரிமை நீங்கா நிலை அடிப்படையில் ('Broke Ranks') ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக களமிறங்கினார். அனைத்து சமூகங்களையும் மதங்களையும் சார்ந்தவர்களும் வெறுப்படைந்திருந்தவர்களுமான வேட்பாளர்களனைவரும் ஏற்கனவே இருதடவைகள் தெரிந்து கொள்ளப்பட்டவரும் இதுவரை வெற்றி கொள்ளப்பட முடியாதவராக கருதப்பட்டவருமான ராஜபக்சவுக்கெதிராக வாக்களித்தனர். சிறிசேன அவர்கள் 6,217,162 வாக்குகள் (51.2 வீதவாக்குகள்) பெற்று அதிர்ச்சியூட்டும் விதத்தில் வெற்றி பெற்றிருந்தார்.

சிறிசேனவின் பிரதான தேர்தல் வாக்குறுதிகள்: மகிந்த ராஜபக்சவை ஜனாதிபதி பதவியிலிருந்து அகற்றுதல், ஜனாதிபதி பதவிக்கு இருக்கக் கூடிய மிகை அதிகாரங்களை ஒழித்தல், ராஜபக்சவின் குடும்ப ஆட்சி முறையை நாட்டிலிருந்து ஒழித்துவிடுதல், கட்டுப்பாடில்லாமல் பெருகிக்கொண்டிருந்த ராஜபக்ச சார்பு அரசியல்வாதிகளது ஊழல்/மோசடி செயற்பாடுகளை இல்லாதொழிப்பதுடன் வறிய மற்றும் நடுத்தரவர்க்க மக்கள் முகங்கொடுத்துவரும் பொருளாதார சுமைகள், கஸ்டங்களிலிருந்து அவர்களை விடுவிப்பது போன்றவை.

இப்போது, பாராளுமன்ற தேர்தலுக்கு ஒரு மாதத்திற்கும் சற்றுக் கூடுதல் காலம் இருக்கும்போது ஜனாதிபதியவர்கள் ஜனவரி 8 ஆம் திகதி தமக்கு வாக்களித்திருந்த வாக்காளர்களை முற்றாகவே கைவிட்டு, தான் அவர்களுக்கு அளித்திருந்த வாக்குறுதிகளிலிருந்து பின்வாங்குவதாக தோன்றும் விதத்தில் முழுமையான ஒரு தேர்தல் குத்துக்கரணம் அடித்திருந்தார்.

ஒரே நேரத்தில் இரண்டு குதிரைகள் மீது சவாரி செய்தது போன்று 'SLFP' யையும் தனக்கு ஆதரவான எதிரணி கட்சிகளையும் ஒரே சமயத்தில் கையாள முயற்சித்தமையே ஜனாதிபதி சிறிசேனவின் பெரும் தவறான செயற்பாடாக இருந்தது. கட்சியில் தான் கொண்டிருந்த பொதுச் செயலர் பதவியை தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டதுடன், புத்திசாதுர்யத்துடன் கூடிய தந்திரோபாய முறையில் ராஜபக்சவை அவரது சொந்த விருப்பின் பேரிலேயே கட்சித் தலைமையிலிருந்து கீழிறங்கச் செய்து தலைமைத்துவத்தை யும் தானே பொறுப்பேற்றுக் கொண்டார். இந்த நகர்வானது, சிறிசேனவை ஏற்கனவே ஆறுமாதங்களாக எதிர்த்துச் செயற்பட்டு வந்த கட்சிக்கே தலைவராக்கியதுடன் அவரது பிரதான அரசியல் எதிரியாகிய ராஜபக்சவை அடுத்த பாராளுமன்றத்திற்கான பிரதமராக பல்வேறு எதிர்ப்புகள் மற்றும் உள்ளார்ந்த வெறுப்புகள், கசப்புகள் மத்தியிலும் ஆதரிப்பது-எதிர்ப்பது போன்ற இருவித வாதப்பிரதிவாதங்களுக்குள் சிக்கவைக்கும் பொறியுமாகிற்று. இந்த பொறியிலிருந்து மீள முடியாதது போன்ற ஓர் நிலையில் சிறிசேன அவர்கள் மகிந்த ராஜபக்சவை 'UPFA' இன் வேட்புமனுப் பட்டியலில் உள்ளடக்கினார். இது ராஜபக்சவை அரசியல் ரீதியில் மறுபிறப்பெடுக்க வைக்கும் ஒரு வித மாற்றுவழியை ஏற்படுத்திக் கொடுப்பது போலாகிற்று.

புதிய அரசியலமைப்பு சட்டதிருத்தங்களின் கீழ் ஜனாதிபதி சிறிசேன அவர்கள் தனது ஜனாதிபதி பதவிக்கான பெருமளவு அதிகாரங்களை தனது விருப்பத்தின் பேரிலேயே வெட்டிக் குறைத்திருந்ததுடன் ஜனாதிபதிக்கான நிறைவேற்று அதிகாரங்கள் பிரதம மந்திரியிடமே ஒப்படைக்கப் பட்டுமென்றும் ஆகிற்று. தவிர்க்க முடியாத எந்த வித சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாகவும் ஜனாதிபதி சிறிசேனவினால் அவரது பதவிப்பணியை ஆற்ற முடியாது போகும் பட்சத்தில் பணியை மேற்கொள்ள அழைக்கப்படும் அடுத்த பிரதம மந்திரியே பணியைப் பொறுப்பேற்பார்.

அரசியல் தீர்மானங்களை மேற்கொள்ளும் சிறிசேன அவர்களது வல்லமையை சந்தேகத்திற்குள்ளாக்கிறோம் என்பது இதன் பொருள் அல்ல, ஆனாலும், அவரது பிரதான வாக்குறுதிகளின் பேரில் அவருக்கு வாக்களித்திருக்கும் மக்களுக்கு அவர் பதிலளிக்க வேண்டியவராகவே இருக்கிறார். அதாவது, ஜனாதிபதி ராஜபக்சவை அதிகாரத்திலிருந்து முற்றாகவே அகற்றுவதுடன் எமது இந்நாட்டினது அரசியலை தூய்மைப்படுத்துவது போன்ற சபதங்களை நிறைவேற்றுவது. ஆனாலும் இந்த இரண்டிலுமே அவர் தோல்வி காண்பதாகவே தோன்றுகிறது.

இப்போதே நாட்டின் பொதுநல ஆர்வங்கொண்ட உறுதியான மக்கள் அமைப்புகள் சில கற்றறிந்த புத்தி ஜீவிகளும் அரசியலில் அப்பழுக்கற்ற மற்றும் ஊழல் மோசடிக்காரர்கள் அல்லாத நேர்மையாளர்களுமான வேட்பாளர்களையே கட்சித் தலைவர்களிடம் கோரும்படி நிர்ப்பந்திப்பதற்கான வாக்குறுதிப்படிவங்களில் ஊர் ஊராகச் சென்று கையெழுத்து சேகரிக்கும் பகிரங்க வேட்டைகளில் இறங்கியிருப்பது கண்கூடு. சூதாட்டம் போன்ற குறிப்பான வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்போரையுங்கூட வேட்புமனுப்பட்டியலில் சேர்த்துக்கொள்ளாதிருக்கும்படி நிர்ப்பந்தங்களையும்கூட அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். சிறிசேன ஜனாதிபதி பதவிக்கான போட்டியில் இறங்கியபோது நாட்டு மக்களின் மனோநிலையில் ஏற்பட்டுக்கொண்டிருந்த மாற்றமும் இத்தகையதேயாகும். இந்தவித மேம்போக்குடைய குடிமக்களது மேன்மையான நன் முயற்சிகள் சிறப்புறவேண்டுமென்பதே எமது விருப்பமுமாகும். ஆனாலும், இத்தகைய நன்மையான நாட்டங்களோ விருப்பங்களோ நிறைவேறுவது சந்தேகமே. இவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும் இத்தகைய ஊழல் மோசடிப் பேர்வழிகளுக்கே வேட்புமனு கிடைக்கிறதென்றால் தீமைக்கெதிரான அவர்களது குரலுக்கான அரசியல் பெறுமதிதானென்ன?


எனவே, தேர்தலில் வெற்றி பெறக்கூடிய கரடு முரடான ஆவேசப் பேச்சாளர்களுடன் தமக்குக் கட்டுப்பட்டு ஆடக்கூடியவர்களும் கறைபடிந்த பின்னணி கொண்டவர்களையுமா அல்லது மக்கள் மத்தியில் பிரபல்யமற்று இலைமறைகாயாக இருக்கும் அப்பழுக்கற்ற நற்குணசாலிகளான ஆட்களையா கட்சித் தலைவர்கள் தெரிந்தெடுக்க விரும்புவார்கள்?

இதே கேள்வியை சுருக்கமான முறையில் கேட்பதானால், கட்சியின் தேர்வாளர்களை யார் தெரிந்தெடுப்பது? என்றே கேட்கவேண்டும். புராதன காலத்திருந்தே எழுப்பப்படும் இக்கேள்வியையே புகழ்பெற்ற லத்தீன் மொழிக் கவிஞரான ஜுவெனல் ('juvenal') என்பவர் கவிதை நடையில் ரத்தினச் சுருக்கமாக பின்வருமாறு கேட்கிறார். **"காவலர்களைக் கண்காணிப்பது யார்?"**

எல்லோரும் மனிதர்களே என்பதால் சாதாரண மனிதர்களுக்கு இருக்கும் 'சபலம்' விசேஷமாக இலங்கையில் அவரவர்க்கான விருப்பு-வெறுப்பு என்ற விதத்தில் நாட்டின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கேற்ப 'கசப்புணர்வு' மற்றும் 'குரோதங்கள்' வடிவத்தில் ஆழ வேரோடியதாகவே காணப்படுகிறது. தேர்வுக்குழுவொன்றின் கண்காணிப்புடன் செயற்படுவதன் மூலம் இவ்வித தனித்தனி விருப்பு வெறுப்புக்களை பெருமளவில் ஒழித்துவிடவோ குறைத்துக் கொள்ளவோ முடியும். இவ்வித அனைத்து தேர்வுக் குழுக்களிலும் அநேகமாக அனைத்துக் கட்சிகளிலும் இது நடைமுறைப்படுத்தப் படும்போது அனைத்துக்கட்சித் தலைவர்களும், செயற்பாடுகளிலும் அவற்றின் போக்கிலும் நெருக்கமான- அவதானம் செலுத்த வேண்டும். வேட்பாளருக்கான இறுதித் தெரிவு அவரவர் பெற்றுக்கொள்ளும் கூடுதல் உள்ளக வாக்கு எண்ணிக்கைகளின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும்.

**12.07.2015 அன்று சண்டே லீடர் பத்திரிகையில், "விசித்திரமான தும் நெருக்கடிமிக்கதுமான ஒரு தேர் தலையே தற்போது நாடு எதிர் கொள் கிறது" எனும் தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கம் ....**

அரசியல் கட்சி ஒன்றின் வேட்புமனுப்பட்டியலில் கட்சியின் விருப்பத்திற்குரிய வேட்பாளர்களாக இடம்பிடித்திருப்போரிலிருந்து கட்சித் தலைமைத்துவத்தின் தகைமைப்பண்பை அறிந்துகொள்ளலாம்.



ஜே.ஆர். ஜெவர்த்தன அவர்கள் தமது 70 அவது வயதில் 'UNP' யின் தலைவராகிய போது பாராளுமன்றத்தில் 5/6 என்ற விதமான அறுதிப்பெரும் பான்மை பலத்தினைப் பெறுமளவிற்கு ஒருபோதுமே பெற்றிராத மிகச் சிறந்த வேட்பாளர் தெரிவிகளைக் கொண்டவராகவேயிருந்தார்.

அவரது அபேட்சகர்களில் சிலர் நிச்சயம் வெற்றிபெறுபவர்களாயிருந்தது மட்டுமல்லாமல் முன்னையோரைவிட கூடுதலாக கற்றறிந்த சிறந்த புத்திஜீவிகளாகவுமிருந்தமை கட்சிக்கு பெருமை சேர்க்கும் விதத்தில் உயர் மதிப்பையும் கௌரவத்தையும் பெற்றுக்கொடுத்திருந்தது.

அத்தகையோரில்: றொனி டீ மெல் (முதல் தரமான பெரும் எழுத்தாளரும் இலக்கிய கர்த்தாவாகவுமிருந்தவர்), நிஸங்க விஜயரட்ன (வரலாற்றுத்துறை முதல் தரம்), லலித் அத்துலத் முதலி (ஒக்ஸ்வோட் ஒன்றியத் தலைவர்) போன்றோருடன் மேலும் பலர் அரசியலில் தடம்பதித்த வல்லுநர்களாகவுமிருந்தனர்.

சிறந்த தகைமை வாய்ந்த அரசியல்வாதிகளை மட்டுமல்லாது நிர்வாக சேவைகளுக்குப் புறம்பாக மிகவும் கைதேர்ந்த புகழ்பெற்ற நிர்வாகிகள் சிலரை-வெளி வட்டாரங்களில் இருந்தும் ஜே.ஆர் அவர்களே அரசியல் நிர்வாகத்திற்கு உள்வாங்கியவராகவும் இருந்திருக்கிறார்.

ஜே.ஆர் அவர்களது மருமகனான ரணில் விக்கிரமசிங்கவே அவரது அரசியல் வாரிசாகவும் திகழ்வதால் தனது மாமனாரைப் போலவோ அல்லது அவரையும் விஞ்சும் விதத்தில் சிறப்பான ஒருவராக அவரும் விளங்கவேண்டுமென்பதே சகலரது விருப்பமாக இருக்கிறது.

அதேநேரம், சிறுபான்மை பலங்கொண்ட அரசிற்கு தலைமை தாங்கும் ஜனாதிபதி சிறிசேனவும் பிரதம மந்திரியும் ராஜபக்சகளை பதவிலிருந்து அகற்றுவதற்கு மக்களுக்கு விடுத்திருந்த அழைப்பினை ஏற்று பதில் வழங்கியிருந்த வாக்காளர்களுக்கு தமது செயற்பாடுகளுக்கான விளக்கத்தை அளிக்கவேண்டிய கடப்பாட்டையும் கொண்டவர்களாகவே இருக்கின்றனர்.

-தமிழில்-யோகர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம் : தீர்க்கசுமங்கலி
பாடகி : வாணி ஜெயராம்
இசை : M.S.விஸ்வநாதன்
பாடல் :கவிஞர் வாலி



மல்லிகை என் மன்னன் மயங்கும் பொன்னான
மலரல்லவோ"(2)
எந்நேரமும் உன்னாசை போல்
பெண் பாவை நான் பூச்சூடிக்கொல்லவோ
மல்லிகை என் மன்னன் மயங்கும் பொன்னான
மலரல்லவோ

வான் மேகங்கள் வெள்ளி ஊஞ்சல் போல் (2)
திங்கள் மேனியை தொட்டு தாலாட்டுது
குளிர் காற்றிலே தளிர்ப் பூங்கொடி
கொஞ்சிப் பேசியே அன்பை பாராட்டுது
என் கண்ணன் துஞ்சத்தான்
என் நெஞ்சம் மஞ்சம் தான்
கையோடு நான் அள்ளவோ
என் தேவனே உன் தேவி நான்
இவ்வேளையில்
உன் தேவை என்னவோ

மல்லிகை என் மன்னன் மயங்கும் பொன்னான
மலரல்லவோ.........

பொன் மாங்கல்யம் வண்ணப்பூச்சரம்
மஞ்சள் குங்குமம் என்றும் நீ தந்தது
ஓராயிரம் இன்பக்காவியம்
உந்தன் கண்களில் அள்ளி நான் தந்தது
நம் இல்லம் சொர்க்கம் தான்
நம் உள்ளம் வெள்ளம் தான்
ஒன்றோடு ஒன்றானது
என் சொந்தமும் இந்த பந்தமும்
உன்னோடு தான் நான் தேடிக் கொண்டது

மல்லிகை என் மன்னன் மயங்கும் பொன்னான
மலரல்லவோ"
எந்நேரமும் உன்னாசை போல்
பெண் பாவை நான் பூச்சூடிக்கொல்லவோ
மல்லிகை என் மன்னன் மயங்கும் பொன்னான
மலரல்லவோ..........

### இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:

K. அசோக்- புளியங்குளம், V.அஜித்- அராலி, கமலா- திருநெல்வேலி, சோபிதா, கவிதா, புவிதா- பலாலி, அருமைநாயகம்- சாவகச்சேரி, நாகேந்திரன், புஸ்பராணி, கஸ்தூரி- சங்கானை, எஸ். தவேந்திரன்- உரும்பிராய், சிவகுமாரன் குடும்பம்- அரியாலை

*அன்பு வாசகர்களே!*

காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்

**021 567 1543**

எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

## ஈழத்து சினிமா

### என் கனா உன் காதல் குறும்பட விமர்சனம்




ஈழத்து படைப்பாளி ஒருவர் ஈழத்து சினிமாத் துறையில் தடம்பதிக்க முயன்றுகொண்டு இருப்பவர் அவரின் காதலி அதனை ஆதரித்தாலும் முழுநேரமாக சினிமா கனவில் அதன் முயற்சியில் அவன் ஈடுபடுவதை விரும்பாதவர். ஒரு தொழிலோடு தன்னை பொருத்தி சிக்கல் இல்லாமல் இயங்கிக்கொண்டு சினிமா முயற்சியில் ஈடுபட வலியுறுத்துகின்றாள் காதலி. இதற்கு சமரசம் செய்ய உடன்படாத காதலன் தனது முயற்சிகளை தொடர்ந்தும் தொடுகின்றான். இந்த கருத்து முரண்பாட்டால் இருவருக்கும் இடையிலான காதல் காதலியின் வலுக்கட்டாயத்தில் முடிவுக்கு வருகின்றது. ஆனால் காதலன் தனது முயற்சியினால் ஜெயிக்கின்றான். இவன் வெற்றியை பார்த்து வியந்த காதலி திரும்பவும் அவனிடம் வருகின்றாள். இவ்வாறு குறும்படம் முடிவடைகின்றது.

குறும்படத்தில் ஒரு காட்சியில் குறும்படத்தில் நடிப்பதன்ால் கிடைக்கும் வருமானம் தொடர்பாக கதாநாயகன் சொல்கின்றார் "பெரிசா இல்லை ஆனால் மனசுக்குபிடிச்சு இருக்கு.." என்ற கூற்றுப்பட. இந்த யதார்த்த கள அமைப்பில் சிக்குண்ட நாயகன் தன்னுடைய இலக்கில் அனைத்துவகையிலும் ஜெயிப்பதாக காட்சிப்படுத்தியதனை ஏற்றுக்கொள்வதில் சிரமத்தன்மையைத் தருகின்றது. குறும்படத்தில் ஈழத்து சினிமா தளம் உருவாக்கப்பட்டுவிட்டது என்ற கற்பனை விம்பம் கட்டமைக்கப்பட்டு காட்சிகள் படிமமாக்கப்பட்டு இருக்கலாம், ஆனால் குறும்படம் அதனை பிரதிபலிக்கவில்லை.

கதாநாயகிக்கு அவர் காதலன் நடிப்புத்துறையில் இயங்குவது ஆரம்பத்தில் பிடிப்பதில்லை என்ற மையக்கரு அழுத்தமாக சொல்லப்படுகிறது. "நீ என்ன செய்துகொண்டு இருக்கின்றாய் என்று வீட்டில் கேட்டால் நடித்து கொண்டு இருக்கின்றான் என்பதை எப்படி வீட்டில் சொல்ல முடியும்" என்கின்றாள். அதே துறையில் பிரபலம் ஆனவுடன் காதலை முறித்திருந்த காதலி அவளாகவே தேடிவருகின்றாள். இப்போது அவன் பிரபல்யமாக நடித்துக்கொண்டு இருக்கின்றான் இதை எப்படி வீட்டில் சொல்லப்போகின்றாள்? இந்த தர்க்கரீதியான முரண்பாட்டுக்கு படத்தில் விடை இல்லை. திரைக் கதையில் காட்சிப்பின்னல்கள் இல்லை.

ஒரு துறையில் ஜெயித்தவுடன் பெண்கள் வந்து ஒட்டிக்கொள்வதாகவும் அதனை காதலன் இயல்பாக ஏற்றுக்கொள்வதாகவும் காட்சிப்படுத்துவது பெண்ணிய வாதிகளை சீண்டிப்பார்க்கும் விஷப்பரீட்சை.

எடுத்துக்கொண்ட கருவுக்கு பொருத்தமான பல்வேறு அடுக்குகளுடன் இயங்கும் திரைக்கதை பலமாக இக் குறும்படத்தில் இல்லை. ஆனால் படத்தினுடைய படிம உருவாக்கம் இயக்குநரின் கடந்த படமான "இலக்கு" குறும்படத்தைவிட முன்னேற்றமாகவுள்ளது. கள அமைப்பில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட இடங்கள் கண்ணுக்கு குளிர்ச்சியாக இருக்கின்றன. மிகைப்படாத நடிப்பை நாயகன் விஷ்ணு, நிரோஷா பிரதிபலித்து இருந்தனர்.சுதர்சனின் இசை தேவைக்கு ஏற்றால் போல் அட்டகாசமாக ஒலிக்கின்றது.

வசனங்கள் இயல்பாக இருகின்றன. இன்னும் செம்மைப்படுத்தி இருக்கலாம். நடிக்கக் கேட்டு வரும் அழைப்புகளுக்கு பதிலளிக்கும்போது என்ன கதை என்ன பாத்திரம் என்று எதையும் பேசிகொள்ளாமல் வெறும் "ஓகே... ஓகே வந்து நடிக்கிறன்"என்ற மறுமொழிகளை பிரயோகிக்கின்றார் கதாநாயகன். தான் நடிக்கப்போகும் பாத்திரம் தொடர்பான தெளிவில்லாமல், நடிகனாக வென்றவொருவர் நடிக்க சம்மதிப்பதாகச் சொல்வது முரணகையானது. படு செயற்கையான கற்பனை.

சிறந்த தேடல்கள் இருந்தால் இன்னும் சிக்கலான ஈழத்து வாசனைகளுடன் பின்னிப்பிணைந்த திரைக்கதையை உருவாக்கி அடுத்த கட்டத்துக்கு நகரலாம். மொன்னையான படங்களை மீண்டும் மீண்டும் உருவாக்கி திரையிடலை மேற்கொள்வது அப்பாலும் செல்லலாம்.

-அனோஜன் பாலகிருஷ்ணன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்துக் கவிதைகள்

### மழை பெய்த நாள்

மழைபெய்த நாளொன்றில்
சூரியனை முத்தமிட ஆசைப்பட்டது
கதிர்நாவாய்ப்பூச்சி.

ஆசையை இலைகளிடம் சொல்ல,
இலைகள் காதோடு
கிளைகளுக்குச் சொல்லி
சந்தோசப்பட்டன.

பியத்துக் கொண்டு போயிற்று
காற்று கதைபரப்ப

நெடுந்தூரம் பறக்க
சிறகுகளைப் பியத்துக் கொடுத்தன
தூக்கணாம் குருவிகள்.

பெருமழையில்
பாரங்களுடன் பறப்பது கடினமென்று
துயரங்களை வாங்கிக் கொண்டன
மரஅட்டைகள்.

புதிதாய் பூத்த பூசணிப் பூக்களில்
தேனெடுத்துக் கொடுத்தன
தேனீக்கள்.

நிலத்தோடு முட்டி மண்ணை
வாரிக் கொண்டு வந்த கடல்
நீரில் மூழ்கி
முத்தெடுத்துக் கொடுத்தது
நீர்க்குதிரை.
முகம் சிவந்து தலை கவிழ
மகரந்தத்தின் மணியெடுத்து
அழகாய் கவிதையெழுதிக்கொடுத்தன
வண்ணத்துப்பூச்சிகள்.

மழை பெருகிப் பெய்து வழிந்த நாள்.
பெருமழை முழுதுமாய்
தலையில் கொட்டி
கன்னத்தில் நனைந்து வழிய,

சூரியனை
தழுவி, இழுத்து வந்து
வயல் வெளியில் கிடத்தி
முத்தமிட்டு மகிழ்ந்தது
கதிர்நாவாய்ப்பூச்சி.

செழியன்

### துளி நீர்

மழை மாலை நாளொன்றில்
மங்கிய சாலை
வெளிச்சத்தில்
ஆண்கள் கழிவறை
அருகினில்
யுகங்கள் கடந்து
பார்த்துக்கொண்டோம்

கிழிந்து தொங்கியது
எங்கள் முகமூடிகள்

அவசரமாய் காற்றை
முத்தமிட்டோம்

நனைந்த நிலம் நோக்கி
கண்களை
மேயவிட்டோம்

கைகளை
நீட்டிக்கொண்டோம்
தொடவில்லை

நாயொன்றின்
குரைப்பில்
பிரிந்துகொண்டோம்

ரதன்

# உங்களை எப்படித்தான் சமாளிக்கப் போறாங்களோ!



**கா**க்கா முட்டை திரைப் படத்தின் மூலம் நம் மனதைக் கவர்ந்தவர்கள், நட்சத்திர குட்டி நாயகர்கள் விக்னேஷ், ரமேஷ் மற்றும் படத்தின் இயக்குநர் மணிகண்டன். 'பேனா பிடிக்கலாம்... பின்னி எடுக்கலாம்' நிகழ்ச்சியில், இவங்கதான் சீஃப் கெஸ்ட்.

**இந்தப் படத்தின் கதைக் கரு எப்படி உருவாச்சு?**

டைரக்டர்: "என் மகனுக்கு பீட்சா சாப்பிடப் பிடிக்கும். கேட்கும்போது வாங்கிக் கொடுப்பேன். அப்பா இருக்கிறதால, என் மகனுக்கு ஆசைப்பட்டது உடனே கிடைக்குது. இதுவே, அப்பாவும் வசதியும் இல்லாத சின்னப் பசங்களுக்கு ஆசை வந்தா என்ன செய்வாங்க? அதுதான் 'காக்கா முட்டை.

**இந்தப் படத்துக்கு 'காக்கா முட்டைனு ஏன் பேர் வெச்சீங்க?**

**டைரக்டர்:** உணவு சம்பந்தமான படம்னு முடிவானதும், தலைப்பும் உணவு சம்பந்தமா இருக்கணும்னு நினைச்சேன். என் ஃப்ரெண்டு ஒருத்தன், சின்ன வயசுல காக்கா முட்டை குடிச்சதை சொல்லியிருக்கான். காக்கா முட்டை வெளிர் நீல நிறத்தில் புள்ளிகளோட ரொம்ப அழகா இருக்கும். கிளி, புறா மாதிரி இல்லாம, காக்காவை அதன் கறுப்பு நிறம் பார்த்து பலரும் வெறுக்கிறாங்க. காக்கானு ஒரு பறவை இருக்கிறதைப் பற்றி யாரும் பெருசா நினைக்கிறது இல்லை. என் கதையின் நாயகர்களும் இந்தச் சமூகத்தால் கவனிக்கப் படாத சேரியில் வாழும் குழந்தைகள். அதனால், இந்தப் பெயரை வெச்சேன்."



**இந்தப் படத்துக்கு இவ்வளவு பெரிய வெற்றி கிடைக்கும் என்று எதிர்பார்த்தீங்களா?**

டைரக்டர்: "எல்லோருமே வெற்றிக்காகத்தான் வேலை செய்றோம். இந்தப் படத்தை முடிச்சபோதும் மக்கள் விரும்பு வாங்கனு நினைச்சேன். ஆனா, இவ்வளவு பெரிய வெற்றியைக் கொடுத்து கொண்டாடுவாங்கனு எதிர்பார்க்கலை. எல்லோருக்கும் நன்றி !

**உங்களோட அடுத்த படம் என்ன? காக்கா முட்டை 2 வருமா?**

டைரக்டர்: "என்னுடைய அடுத்த படம் 'குற்றமே தண்டனை' என்கிற ஒரு த்ரில்லர். படத்தை முழுசா எடுத்து முடிச்சுட்டேன். 'காக்கா முட்டை 2' எடுக்கிற ஐடியா இல்லை. சில வருடங்களுக்குப் பிறகு இன்னொரு குழந்தைகள் படம் எடுக்கலாம்னு எண்ணம் இருக்கு.

**படப்பிடிப்பில் இவங்க ரெண்டு பேருக்கும் ஏதாவது சண்டை வந்திருக்கா?**

டைரக்டர்: "அதை ஏன் கேக்குறீங்க? இவங்க சண்டையைத் தீர்க்கவே அஞ்சு பேர் வேணும். அடிக்கடி ரெண்டு பேருக்குள்ளே சண்டை வந்து முகத்தைத் திருப்பிப்பாங்க. பக்குவமா பேசி, சமாதானம் செஞ்சு, நடிக்கவைப்பேன்.

**இனி, சின்ன காக்கா முட்டை மற்றும் பெரிய காக்கா முட்டையிடம் எங்க கேள்விகள்... நீங்க இந்தப் படத்தில் நடிக்க செலக்ட் ஆனப்போ, உங்க ஃபீலிங் எப்படி இருந்துச்சு?**

விக்னேஷ்: "நம்மால நடிக்க முடியுமா? சரியா நடிக்கலைனா என்ன சொல்வாரோனு பயம் இருந்துச்சு.

**ரமேஷ் :** எனக்கு அதெல்லாம் இல்லை. கூப்பிட்டாங்க. போறோம்னு ஜாலியாதான் நடிக்க வந்தேன்.

**வீட்டில் என்ன சொன்னாங்க?**

**ரமேஷ்:** உன் அட்டகாசத்தை என்னாலேயே சமாளிக்க முடியலை. டைரக்டர் எப்படி மேய்க்கப்போறாரோனு என் அம்மா கிண்டல் பண்ணினாங்க. எங்க டைரக்டர் மணி அண்ணாதான் பாவம். ஆரம்பத்துல எங்களை சமாளிக்க ரொம்பவே முழிச்சார். ஜனாதிபதி கையால் தேசிய விருது வாங்குறப்போ உங்களுக்கு எப்படி இருந்தது?

ரமேஷ்: "எனக்கு விருது கொடுத்தவர் யாருனுகூடத் தெரியாது. விருதை வாங்கிட்டு வந்ததும், 'மணி அண்ணா, இவர் யாரு?'னு கேட்டேன்."

விக்னேஷ்: "என் நிலைமையும் அதான். நான் கேட்க நினைச்ச கேள்வியை ஒரு நிமிஷம் முன்னாடி இவன் கேட்டுட்டான். அப்போ, அதன் பெருமை புரியலை. எல்லோரும் அதைப் பற்றி பேசி, பாராட்டினப்பதான் விஷயமே புரிஞ்சது."

**அவார்டு வாங்கிட்டு வந்ததும் வீட்ல என்ன சொன்னாங்க?**

**ரமேஷ்:** எதுவுமே சொல்லலை. எப்பவும் போல பேசினாங்க. நானும் விளையாடப் போய்ட்டேன்."

**விக்னேஷ்:** என் அம்மா ஒரே வார்த்தையில், சந்தோஷமா இருக்குனு சொன்னாங்க.

**நீங்க முதன்முதலில் பீசா சாப்பிடும்போது எப்படி இருந்தது?**

**ரமேஷ்:** ஷூட்டிங் நடக்கிறப்ப ஒரு முறை மணி அண்ணா வாங்கிக் கொடுத்தாரு. படத்துல வர்ற டயலாக் மாதிரிதான் பீட்சாவைவிட ஆயா சுடுற தோசையே நல்லா இருக்குனு நினைச்சோம்.

**நீங்க படத்தில் நடிக்கிறப்போ ஸ்கூல், பாட விடயங்களை எப்படி சமாளிச்சீங்க?**

**விக்னேஷ்:** படப்பிடிப்பு, லீவுல தான் நடந்துச்சு. அதனால, ஒரு பிரச்சினையும் இல்லை.

**படத்தைப் பார்த்துட்டு ஸ்கூல்ல என்ன சொன்னாங்க?**

**விக்னேஷ்:** எல்லோரும் பாராட்டினாங்க. பெரிய காக்கா முட்டைனே கூப்பிடுறாங்க. என் பேரே மறந்துடும் போலிருக்கு.

**ரமேஷ்:** இதுக்கு முன்னாடி திட்டின டீச்சர் எல்லாம் கூப்பிட்டு செல்ஃபி எடுத்துக்கிறாங்க.

**டோனியை சந்திச்சீங்களே அதைப் பற்றி...**

**விக்னேஷ்:** 'மறக்கவே முடியாது. அவரைப் பார்த்ததும் சிலை மாதிரி நின்னுட்டோம்.

**உங்களுக்குப் பிடிச்ச ஹீரோ யாரு?**

**விக்னேஷ்: அஜித்**

**ரமேஷ்: தனுஷ்**

படத்தில் ஐஸ்வர்யா ஆன்ட்டிகிட்டே திட்டு வாங்கும்போது கோபம் வந்ததா?

**ரமேஷ்:** வீட்டுலேயும் ஏதாவது பண்ணிட்டு அம்மாகிட்ட அப்படித்தானே திட்டு வாங்குவேன். அதனால, ஒண்ணும் வித்தியாசம் தெரியலை.

**இனிமேலும் நடிப்பீங்களா... வருங்காலத்தில் ஹீரோவாக நடிக்கும் ஆசை இருக்கா?**

**விக்னேஷ்:** ஹீரோவா நடிப்போம். ஆனா, இப்போதைக்கு எங்க ரெண்டு பேருக்குமே படிப்பு முக்கியம். எங்க கவனம் அதில்தான் இருக்கு.

படிப்பில் கவனமாக இருந்தாலும் வருங்கால ஹீரோக்கள் ஆவதற்காக, இப்போதே நடனப் பயிற்சிக்குப் போகச்சொல்லி மணிகண்டன் அங்கிள் சொன்னார். 'எங்களுக்காக ஒரு டான்ஸ் ஆடுங்க' என்றோம். ரொம்ப வெட்கப்பட்டுக்கிட்டு ரெண்டு பேரும் எஸ்கேப் ஆகப் பார்த்தாங்க. சும்மா விடுவோமா... சுற்றி நின்னுக்கிட்டு கேட்டதும், ஒரு பாட்டுக்கு சுப்பரா டான்ஸ் ஆடினாங்க.

வருங்கால ஹீரோக்கள் உருவாக ஆரம்பிச்சுட்டாங்க!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வியூகம்

## தமிழ் மக்கள் உரிமைகளை பெறும் நாள் மிகவிரைவில்

### சிறீதரன் தெரிவிப்பு



மக்களால் பெரிய மாற்றத்தை இந்த மண்ணில் ஏற்படுத்தி அதன்மூலம் எங்களின் உரிமைகளை பெற்றுக்கொள்கின்ற தேர்தலாக இந்த நாடாளுமன்றத் தேர்தலை மாற்றுவோம் எனவும் தமிழ் மக்கள் உரிமைகளைப் பெறும் நாள் மிகவிரைவில் உள்ளது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தின் கட்டைக்காடு பெரியகுளம் மற்றும் தருமபுரம் பகுதிகளில் கிராம மட்ட பிரதிநிதிகள், விளையாட்டு கழகங்களை சேர்ந்தவர்களை, யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளரும் முன்னாள் பா.உறுப்பினருமான சி.சிறீதரன் உள்ளிட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின்கிளிநொச்சி மாவட்ட பிரதிநிதிகள் சந்தித்து அண்மையில் கலந்துரையாடினர்.

கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்தவபாலன் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில்கலந்துகொண்ட வேட்பாளர் சி.சிறீதரன் மேலும் உரையாற்றுகையில்,

நாம் இதுவரை பல தேர்தல்களை சந்தித்துள்ள பொழுதிலும் வருகின்ற பொதுத்தேர்தல் ஒரு மக்களின் தேர்தலாக அமைகின்றது. மக்களால் பெரிய மாற்றத்தை இந்த மண்ணில் ஏற்படுத்தி அதன்மூலம் எங்களின் உரிமைகளை பெற்றுக்கொள்கின்ற தேர்தல்.

அதேவேளை எமது மக்களின் உரிமைகளை பெறுவதற்கு அரசாங்கங்களோடு சேர்ந்து நின்று கொண்டு சர்வதேசத்துக்கு இங்கு மக்கள் சுதந்திரமாக வாழ்வதாக ஒரு மாயத்தோற்றத்தை தெரிவித்து, தமது பதவிகளை தக்கவைத்துக் கொண்ட அடிவருடிகளை இந்த மண்ணில இருந்து அகற்றுவதற்கு இது மிகச்சிறந்த சந்தர்ப்பமாகவும் அமைக்கின்றது.


எமது நீண்ட விடுதலை தேடும் வரலாற்றில் அகிம்சையாகவும் ஆயுத வழியிலும் போராடிய நாம் இன்று எமது போராட்டம் சர்வதேசத்தில் பேசப்பட்டு எமது விடுதலை உணர்வுகள் மதிக்கப்பட்டு ஒரு நியாயமான அணுமுறை சர்வதேசத்தால் எம்மை நோக்கி வருகின்ற நிலையில் அதனை நாம் ஒன்று திரண்டு ஒருமித்த குரலில் வரவேற்பதன் சாட்சியாகவே இந்ததேர்தலை நாம் தமிழர்கள் பயன்படுத்த வேண்டியுள்ளது.

சர்வதேசம் இந்த தேர்தலில் தமிழர்களின் ஒட்டுமொத்த பிரநிதிகள் யார் என்பதையும் அவர்கள் அபிலாசைகள் எது என்பதையும் மீண்டும் பரீட்சிக்க முனைகின்றது.

எனவே வெண்ணெய் திரண்டு வருகின்றபோது தாழியை உடைத்து விட்ட கதையாக நாம் இம்முறை தேர்தலில் எமது தேசிய பலத்தை சிதைக்க உருவாக்கப்பட்டு, தேர்தலில் இறக்கப்பட்டுள்ள ஏராளம் குழுக்களை நாம் தமிழர்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும. இந்த தேர்தலில் தமிழ் மக்கள் வரலாற்று வெற்றி பெற வேண்டும் என தெரிவித்தார். (இ)

த.தே.கூ.அரசியல் பலம்

## மக்களின் நலன்களுக்காக பயன்படுத்தப்படவில்லை



தமிழ் மக்களால் வழங்கப்பட்ட அரசியல் பலம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரால் இன்று வரை மக்களின் நலன்களுக்காக பயன்படுத்தப்படவில்லை. அவை அனைத்தையும் அவர்களின் தனிப்பட்ட நலன்களுக்காக மட்டுமே பயன்படுத்தியுள்ளனர் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார். சங்கத்தார் வயல் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்.

அரசியலே இன்று மனித வாழ்வின் அனைத்து விடயங்களையும் தீர்மானிக்கின்றது. ஆனால் இதுவரை தமிழமக்களால் வழங்கப்பட்ட அரசியல் பலம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பால் மக்களின் நலன்களுக்காக பயன்படுத்தப்படவில்லை. அவை அனைத்தையும் அவர்கள் தமது தனிப்பட்ட நலன்களுக்காக மட்டுமே பயன்படுத்தியிருக்கின்றார்கள். சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் எனவே அவர்களிடமிருந்து எதனையும் பெறமாட்டோம் என்று கூறிக்கொண்டு மக்களுக்கு எவ்வித சேவையையும் செய்வதில்லை. ஆனால் தமது குடும்பங்களின் நலன்களுக்கான உதவிகளைப் பெறவும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென்று வழங்கப்படும் மிகப் பெரும் வரப்பிரசாதங்களை பெற்றுக்கொள்வதற்கும் அவர்கள் மறுப்பதில்லை என குறிப்பிட்ட அவர்,

இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களின் சனத்தொகை இருபது இலட்சமாகவும் சிங்களவர்களின் சனத்தொகை இருநூறு இலட்சமாகவும் இருக்கின்ற நிலையில் தமிழர்கள் ஜனாதிபதியாக வருவதோ தமிழர் ஒருவர் பிரதமராக வருவதோ சாத்தியமற்றது. அத்தோடு 90 வீதமான அமைச்சர்களும் சிங்களவர்களாகவே இருப்பார்கள். இந்நிலையில் எமது மக்கள் எதிர்கொளளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதானால் உரியவர்களிடம் பேசியே தீர்வினைப் பெற முடியும். எனவே குறிப்பிட்ட பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தோடு தொடர்புபட்டவர் சிங்களவர்களாகவே இருப்பாரகள். ஆகவே அவர்களுடன் பேசி தீர்வினைப் பெறவேண்டியது ஒரு மக்கள் பிரதிநிதியின் கடமை.

ஆனால் இங்கு ஒரு தரப்பு தொடர்ந்தும் மக்களிடம் வாக்குகளைப் பெற்று அதிகாரத்தில் அமர்ந்துகொண்டு மககளின் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண்பதில்லை. அதுமட்டுமன்றி எழுந்து நடக்க முடியாத நிலையில் இருப்பவர்களும் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்க முனைகின்றார்கள்.

ஆனால்யுத்தத்தால்பாதிக்கப்பட்ட எமது தமிழ் சமூகத்திற்கு துடிப்புடன் பணியாற்றக் கூடிய இளம் தலைமுறையினரின் வரவே அவசியமாகின்றது. ஏனெனில் இன்று சமூகத்தில் அதிக பிரச்சினைகளுடனும் தேவைகளுடனும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இளம்தலைமுறையினரே. அவர்களால் மட்டுமமே இளைஞர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு சேவையாற்ற முடியும். ஆனால் தள்ளாத வயதை எட்டியிருக்கும் இவர்களால் இளைஞர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வதென்பதும் சாத்தியமற்றதே. (இ)

## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பரப்புரைகளை அரசு முடக்குகின்றது

### ஜனநாயகப் போராளிகள் கட்சி

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் முன்னெடுக்கப்படும் தேர்தல் பரப்புரைகளை அரசாங்கம் திட்டமிட்டு முடக்கி வருகின்றது என்று அக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் வேட்பாளருமான வி.மணிவண்ணன் குற்றம் சுமத்தியுள்ளார்.

பொய் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டும், தடுத்து வைத்தும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதாகவும்அவர்மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிககையில்,

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தேல்தல் பரப்புரைகளை முடக்குவதற்கு அரசாங்கம் சில சதி முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இதன ஒரு அங்கமான தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடும் ஆதரவாளர்களை இலக்கு வைத்துள்ள பொலிஸார் அவர்களுக்கு பல்வேறு தெந்தரவுகளை கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக பூநகரி பகுதிக்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் பிரசார துண்டுப்பிரசுரங்களை வாகனம் ஒன்றில் கொண்டு சென்ற கட்சி உறுப்பினர் ஒருவர் பூநகரிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் மீது இரவு 11 மணிக்கு வீதியால் சென்று கொண்டிருந்த போது மக்களிடத்தில் தேரதல் துண்டுப்பிரசுரத்தினை விநியோகித்ததான பொய் குற்றச்சாட்டினை போட்டு கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்தியுள்ளனர். இருப்பினும் அவருக்குபிணை அனுமதியை நீதவான் வழங்கியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து யாழ்.நீராவியடிப் பகுதியில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த மற்றுமொரு கட்சி உறுப்பினர் எந்தவிதமான காரணங்களும் கூறப்படாமல் பொலிஸாரினால் நீண்ட நேரம் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவ்வாறு தடுத்து வைக்கப்பட்ட அவரை பொலிஸார் கடுமையாக அச்சுறுத்திய பின்னர் விடுவித்துள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் பரப்புரைகளை திட்டமிட்டு தடுக்கும் சமஜ முயற்சிகளிலேயே பொலிஸார் தற்போது ஈடுபட்டு வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

## ஜனநாயக வழிக்கு போராளிகள் திரும்புகின்றமையை சர்வதேச சமூகம் வெளிப்படையாக வரவேற்க வேண்டும்

### மணிவண்ணன் குற்றச்சாட்டு

ஆயுதம் ஏந்திப் போராடிய முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் அந்த வழியைக் கைவிட்டு வன்முறைப் பாதையைத் துறந்து அகிம்சை வழிக்கு ஜனநாயகப் பாதைக்கு வந்திருக்கின்றமை ஒரு முக்கிய விடயமாகும்.

அதனை இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச சமூகம் வெளிப்படையாக வரவேற்க வேண்டும்.

இவ்வாறு கோரியிருக்கிறது நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சுயேட்சைக் குழுவாகக் களமிறங்கியிருககும் ஜனநாயகப் போராளிகள் கட்சி.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதப் போராட்டம் நடத்தி காலம் எல்லாம் அந்தப் போராட்டத்தை கைவிட்டு ஜனநாயகப் பாதைக்கு வாருங்கள் என்று விடாது வலியுறுத்தி வந்தவை இந்த நாடுகளும் சர்வதேச சமூகமும்தான். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுதப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு இலஙகை அரசுடன் சர்வதேச சமூகம் இணைந்தமைகூட இந்த விடயத்தை முன்வைத்துத்தான் என்பதும் வெளிப்படையானது.

இப்போது முன்னாள் புலிகள் இயக்கப் போராளிகள் ஜனநாயக வழிக்குத் திரும்புகின்றபோது அதனை இருகரம் விரித்து அரவணைத்து வரவேற்க வேண்டியமையும் அன்று தொட்டு அதனை வலியுறுத்தி நின்ற சர்வதேச சமூகத்தின் கடமையும் பொறுப்பும்தான்.

எனவே விடுதலைப் புலிகளின் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை பயங்கரவாதமாக விமர்சித்து அதைக கைவிட்டு ஜனநாயகப்பாதைக்குத் திரும்புமாறு வலியுறுத்தி பின்னர் அதே காரணத்துக்காக அந்தப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு இலங்கை அரசுடன் கைகோத்த சர்வதேச சமூகத்துக்கு இப்போது முன்னாள் போராளிகள் ஜனநாயகப்பாதைக்கு வெளிபபடையாகத் திரும்புமபோது அதனை வரவேற்று அங்கீகரித்து சிலாகிக்க வேண்டிய பொறுப்புமுள்ளது. அதனைச் செய்வதன்மூலம் முன்னாள் போராளிகளை ஜனநாயகப் பாதையில் புறமொதுக்கும் எத்தனங்களை முறியடிக்குமாறு சர்வதேசசமூகத்தை குறிப்பாக இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச சமூகத்தை- உரிமையுடன் கோருகின்றோம் என ஜனநாயகப் போராளிகள் கட்சி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# facebook ஓய்வதில்லை!



உண்மையான ஞானம் பெற வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டார் புத்தர். பல துறவிகளிடம் சீடராகச் சேர்ந்தார். பல இடங்களில் அலைந்தார். ஆண்டுகள் சென்றனவே அன்றி அவருக்கு ஞானம் கிடைக்கவில்லை. சலிப்பு அடைந்த அவர் ஞானத்தை தேடும் முயற்சியை விட்டு விட்டு, நாடு திரும்பி விடலாமா என்று நினைத்தார்.

அவர் சென்று கொண்டிருந்த வழியில் குளம் ஒன்று இருந்தது. அதன் கரையில் இருந்த அணில் ஒன்று, தன் வாலைக் குளத்தின் தண்ணீரில் தோய்ப்பதும், பிறகு அந்த வாலை இழுத்து அதில் ஒட்டிக் கொண்டிருக்கும் தண்ணீரைத் தரையில் உதிர்ப்பதுமாக செய்து கொண்டிருந்தது.

இதைப் பார்த்து வியப்பு அடைந்த புத்தர், அணிலே! என்ன செய்கிறாய்? உன் வாலைக் குளத்திற்குள் விடுகிறாய். வாலில் ஒட்டி இருக்கும் தண்ணீரை வாலை ஆட்டி தரையில் வீசுகிறாய். நீ செய்வது எனக்கு விளங்கவில்லையே!என்றார்.

அதற்கு அணில், நான் இந்தக் குளத்தை வற்ற வைக்க வேண்டும் என்று முடிவு செய்து விட்டேன். அதனால்தான் இப்படிச் செய்து கொண்டிருக்கிறேன்! என்றது.

சிரித்த அவர், அணிலே! நீ அல்ல, உன்னைப் போன்ற அணில்கள் கூட்டமே கோடி தடவை முயன்றாலும், இந்தக் குளத்தை வற்றச் செய்ய முடியுமா? என்று கேட்டார்.

முடியுமா, முடியாதா என்பதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. என் விடாமுயற்சி என்றேனும் ஒருநாள் எனக்கு வெற்றியைத் தேடித் தரும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இந்தக் குளம் வற்றும் வரை நான் இந்த முயற்சியை விட மாட்டேன்! என்றது.

இதைக் கேட்ட அவர், ஞானம் பெற இன்னும் முயற்சி செய்வோம். ஞானம் பெறும் வரை ஓய்வது இல்லை என்ற முடிவுக்கு வந்தார்.

## காதை வெட்டு

சந்திரகிரி அரசர் சந்திரன் அரியணையில் வீற்றிருந்தார். அமைச்சர்களைப் பார்த்து அவர், ஒருவரைப் பற்றி இல்லாததும், பொல்லாததுமாகப் புறம் பேசுவது கெட்ட பழக்கம். இந்தப் பழக்கம் நிறைய பேரிடம் உள்ளது. அவர்களுக்கு என்ன தண்டனை தரலாம்? சொல்லுங்கள்! என்று கேட்டார்.

அதற்கு அமைச்சர் ஒருவர், கோள் சொல்பவர்கள் கொடியவர்கள்.

ஒருவர் இல்லாத போது அவரைப் பற்றிக் குறை சொல்வது எல்லோரும் இயல்பாகச் செய்வது. அதை அப்படியே எடுத்துச் சென்று அவரிடம் சொல்வது கெட்ட பழக்கம். இதனால், குறை சொன்னவரும் சொல்லப்பட்டவரும் சண்டை போட்டுக் கொள்கின்றனர் பகைவர்கள் ஆகின்றனர். கோள் சொல்பவர்களால் குழப்பம் ஏற்படுகிறது. இவர்களுக்குக் கொடிய தண்டனை வழங்க வேண்டும்! என்றார்.

கடுமையான தண்டனை தந்தால்தான் கோள் சொல்பவர்கள் திருந்துவர். நாடும் வளம் பெறும்.என்றார் இன்னொரு அமைச்சர்.கோள் சொல்பவனின் நாவை அறுத்து ஊமையாக்கி விட வேண்டும். இதைப் பார்க்கும் பிறரும் கோள் சொல்ல அஞ்சுவர்! என்றார் மற்றொரு அமைச்சர்.

அமைதியாக இருந்த முதலமைச்சரைப் பார்த்தார் அரசர். கோள் சொல்பவனுக்கு என்ன தண்டனை தரலாம்? நீங்கள் சொல்லுங்கள்! என்று அவரைக் கேட்டார்.

அரசே! ஒரு குற்றம் நடப்பதற்கு யார் துண்டுகிறாரோ அவரும் குற்றவாளிதான். ஆர்வத்துடன் கேட்பவர் இல்லாவிட்டால் யாரும் கோள் சொல்லமாட்டார்கள். அதனால், கோள் மொழியைக் கேட்பவர்கள் காதுகளையும் அறுத்துவிட வேண்டும்!

அப்படியே சட்டம் இயற்றப்பட்டது. கோள் சொன்னால் நாவு போய்விடுமே என்று கோள் சொல்பவர்களும், கோள் சொல்வதை கேட்டால் நம்ப காது போய்விடுமே என கோள் கேட்டவர்களும் பயந்துபோய் ஓடினர். அதனால் இந்த கெட்ட பழக்கமே அந்த நாட்டை விட்டு ஓடியது.


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 443

Search for people, places and things Nagendram Home


மது மதுமிதா

வாழ்க்கை ஓடுகிறது
முடிந்தவர்கள் ஓடுங்கள்
முடியாதவர்கள் நில்லுங்கள்
ஆனால்
எதிர்த்து நில்லுங்கள்!

பாலன் குமார்




மிது மிதுர்சா



லக்ஸ்மன் லவண்




ராசன் துர்க்கா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 மாதங்களில் டாடிகள்











கடந்த 5 மாதங்களில் இந்திய அணியின் கப்டன் டோனி உட்பட 5 கிரிக்கெட் பிரபலங்கள் தந்தையாகியுள்ளனர்.

உலகக் கோப்பை தொடங்குவதற்கு சில நாட்களுக்கு முன், இந்திய அணியின் கப்டன் டோனிக்கு குழந்தை பிறந்தது.

சாக்ஷி கையில் குழந்தை தவழ்ந்த சமயத்தில், டோனி உலகக் கோப்பை போட்டியில் பங்கேற்பதற்காக அவுஸ்திரேலியாவில் இருந்தார். டோனியின் குழந்தையின் பெயர் ஜிவா. ஐ.பி.எல். போட்டியின் போது மைதானங்களில் டோனி, ஷீவாவை கையில் வைத்துக் கொண்டு அலைவதே தனி அழகு.

கடந்த மே மாதம் அவுஸ்திரேலிய வீரர் ஷேன் வோட்சனுக்கு அழகிய பெண் குழந்தை பிறந்தது. இந்த குழந்தைக்கு பெயர் மெடில்டா விக்டோரியா வோட்சன் என்று பெயரிடப் பட்டது. ஷேன் வோட்சன், அவரது மனைவி, மூத்த மகன் ஆகியோர் குழந்தை மெடில்டாவுடன் இருப்பது போன்ற படம் இணையத்தளங்களில் வலம் வந்தது.

எங்கள் மகள் மீது நாங்கள் கொண்டிருக்கும் அன்பை விளக்க வார்த்தைகளே கிடையாது..." என்று அந்த படத்திற்கு ஷேன் வோட்சன் விளக்கம் கூறியிருந்தார். தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரரும், மும்பை அணியின் களத்தடுப்பு பயிற்சியாளருமான ஜான்டி ரோட்சுக்கு ஏப்ரல் 23ஆம் திகதி மும்பையில் பெண் குழந்தை பிறந்தது. இந்த குழந்தைக்கு ஜான்டி ரோட்ஸ், "இந்தியா" என்று பெயரிட, ஒரே நாளில் குழந்தை பிரபலமாகி விட்டது. 45 வயது ஜான்டியின் முதல் குழந்தை "இந்தியா " என்பது குறிப்பிடத்தக்கது.

ரம்ழான் பண்டிகை சமயத்தில் இந்திய அணியின் பந்துவீச்சாளர் முகமது ஷமிக்கு பெண் குழந்தை பிறந்தது. காயம் காரணமாக ஓய்வில் இருந்த முகமது ஷமி, குழந்தை பிறக்கும் போது மனைவி ஹசின் ஜஹான் அருகிலேயே இருந்தார். குழந்தையுடன் முகமது ஷமி இருப்பது போன்ற படம் பேஸ்புக் தளத்தில் வெகு பிரபலமானது.

தந்தையான கிரிக்கெட் பிரபலங்கள் வரிசையில் தென்னாபிரிக்க அணியின் கப்டன் டி வில்லியர்ஸ் இறுதியாக இணைந்துள்ளார்.

இவரது மனைவி டெனில்லா ஜோகன்ஸ்பர்க் நகரில், ஆண் குழந்தையை பெற்றெடுத்தார். இந்த ஐந்து கிரிக்கெட் பிரபலங்களில் டி வில்லியர்சுக்கு மட்டுமே ஆண் குழந்தை பிறந்துள்ளது. (க)

# டோனி - சாக்ஷி காதல் கதை

இந்தியா கிரிக்கெட் அணியின் வெற்றி அணித்தலைவராக ஜொலிக்கும் டோனியின் காதல் கதை சுவாரஸ்யம் நிறைந்த ஒன்றாக உள்ளது.

ராஞ்சியில் சாதாரண ஏழை குடும்பத்தில் பிறந்த டோனி, இன்று கிரிக்கெட் மூலம் பல சாதனைகளையும் படைத்து விட்டார்.

இந்திய அணியின் அணித் தலைவராக யாரும் எட்டாத உயரத்திலும் இருக்கிறார்.

இவரது கணக்கில் இருபது-20 உலகக்கிண்ணம், சம்பியன் ட்ராபி, 50 ஓவர் உலகக் கிண்ணம், 2 ஐபிஎல் கிண்ணம், 2 சம்பியன் லீக் கிண்ணம் என 7 மிகப்பெரிய கிண்ணங்கள் உள்ளன.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 10 ஆண்டுகளாக கலக்கிய டோனி, கடந்த 2007ம் ஆண்டு சாக்ஷியின் காதல் வலையில் வீழ்ந்தார்.

இவர்களது முதல் சந்திப்பு கொல்கத்தாவில் உள்ள தாஜ் ஹோட்டலில் தான் நடந்தது.

இந்தியா - பாகிஸ்தான் மோதல் ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்றதால் இந்திய வீரர்கள் அங்கு தங்கியிருந்தனர்.

முன்னதாக டோனியும் சாக்ஷியும் சிறுவயதில் பள்ளியில் ஒன்றாக படித்தவர்கள்.

அதன் பின்னர் இருவருக்கிடையே தொடர்பில்லாமல் போனது.

சாக்ஷி அந்த ஹோட்டலில் கேட்டரிங் படித்துகொண்டே வேலைபார்த்து கொண்டிருந்தார்.

அன்று அவரது கடைசி நாளாகவும் அமைந்தது. டோனியின் மேலாளராக இருந்த யுதாஜித் துட்டா சாக்ஷிக்கு நண்பராக இருந்ததால், அவரிடம் டோனியை பார்க்க வேண்டும் என்று கூறியுள்ளார் சாக்ஷி.

இதனை அவரும் டோனியிடம் தெரிவிக்க, இருவரும் முதன் முதலில் சந்தித்துக் கொண்டனர்.

இந்த சந்திப்பே இருவருக்கும் இடையே காதல் மலர காரணமாக இருந்தது.

பின்னர் டோனி தனது மேலாளரான யுதாஜிட்டிடம் இருந்து சாக்ஷியின் மொபைல் நம்பரை வாங்கி அவருக்கு குறுஞ்செய்தி அனுப்பியுள்ளார். ஆனால் இதை சாக்ஷியால் நம்ப முடியவில்லை.

இதைத் தொடர்ந்து டோனி தரப்பில் பலத்த விசாரணை நடத்திய பிறகு தான் சாக்ஷி டோனியை தொடர்பு கொண்டாராம்.

பின்னர் இருவருக்கும் நெருக்கம் அதிகமாக மார்ச் 2008ஆம் ஆண்டுக்கு பிறகு யாருக்கும் தெரியாமல் "டேட்டிங்" செல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்.

இருப்பினும் டோனிக்கு சாக்ஷிக்கு என்று ஒதுக்க நேரம் கிடைக்கவில்லையாம்.

பிறகு அந்த ஆண்டு மும்பையில் நடைபெற்ற தன் பிறந்த நாள் விழாவுக்கு டோனி சாக்ஷியை அழைத்துள்ளார்.

அங்கே வைத்து தன்னை திருமணம் செய்ய சொல்லி கேட்டிருக்கிறார் டோனி.

இதற்கு சாக்ஷியும் சரி என்று ஒப்புதல் கொடுக்க, இருவீட்டாரும் பேச்சுவார்த்தையில் இறங்கி இருவருக்கும் திருமணம் செய்து வைக்க முடிவு செய்தனர்.



அதன் படி இருவருக்கும் 2010 ஜூலை 4ஆம் திகதி உத்தரகாண்டில் திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு 2015 பெப்ரவரி 6ஆம் திகதியன்று அழகான பெண் குழந்தை பிறந்தது.

அதற்கு ஜிவா (பெர்ஷியன் மொழியில் அழகு) என்று பெயர் சூட்டியுள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org